தடுப்பாட்டம்

கிரிக்கெட்டும் கிரிக்கெட் சார்ந்தும்

கிரிக்கெட் தமிழ் மாத இதழ்

மூன்றாம் ஆண்டு சிறப்பிதழ் (டிசம்பர் - 2025)

25

வது - இதழ்

துடுப்பாட்டம் மாத இதழ்

டிசம்பர் 2025

இன்னிங்ஸ் 2 **ஓவர் 12**

வடிவமைப்புக் குழு

S. பழனி செல்வகுமார் *கா. இராமச்சந்திரன்*

கார்த்திகேயன் *ஞா. மைக்கேல்ராஜ்*

வணக்கம், அன்புடையீர்!

டெஸ்ட் போட்டிகளில் சொந்த அணிக்கு சாதகமாக ஆடுகளங்கள் அமைப்பது ஒவ்வொரு கிரிக்கெட் வாரியமும் வழக்கமாக செய்வதுதான். அப்படி செய்யப்பட்டதுதான் கொல்கத்தா ஆடுகளமும். ஆனால் இந்திய வீரர்கள் யாரும் அரைசதம் அடிக்கவில்லை என்பது இந்திய வீரர்கள் யாரும் இதுபோன்ற ஆடுகளத்தில் முதல்தரக் கிரிக்கெட் ஆடவில்லையா என்று கேள்வி எழுப்பியுள்ளது.

அதேசமயம், பவுமாவை அவுட்டாக்க முடியாமல் பும்ரா உருவக்கேலியில் இறங்கியது கேவலமான செயல். பங்களாதேஷ்க்கு எதிரான போட்டியில் மோமினுல் ஹக்கை இதேபோல் பண்ட் உருவக்கேலி செய்தார். ஆஸ்திரேலிய அணியிடம் ஆட்டத்திறனைக் கற்காமல், அவர்களது அணுகுமுறையைக் கற்றிருப்பது ஆரோக்கியமான செயல் அல்ல. பிசிசிஐ இது குறித்து நடவடிக்கை எடுத்தால் நலம்.

100வது டெஸ்ட் ஆடிய முதல் பங்களாதேஷ் வீரர் முஸ்பிகூர் ரஹீமுக்குத் துடுப்பாட்டம் குழுவின் வாழ்த்துக்கள்.

இந்த இதழ் மூலம் நாங்கள் 3ம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறோம் என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்கிறோம்.

அட்டைப்பட வடிவமைப்பு - ராம் குமார்

நன்றி : படங்கள் - இணையதளம்

தரவுகள் -ESPNCricinfo மற்றும் ICC இணையதளம்

தொடர்புக்கு வாட்சப் - +91 80566 09320

Thuduppattam7@gmail.com

X - @thuduppattam

துடுப்பாட்டம்
கிரிக்கெட்டும் கிரிக்கெட் சார்ந்தும்

உள்ளே

1	அட்டைப்படக் கட்டுரை	5
2	பாகிஸ்தான் - தென்னாப்பிரிக்கா	11
3	3வது ஆண்டில் துடுப்பாட்டம்	15
4	நானும் கிரிக்கெட்டும்	18
5	சிக்ஸர் பதில்கள்	20
6	உலக சாதனைகள்	23
7	லைன் & லென்த்	27
8	உலகக்கோப்பை 2025	31
9	பாகிஸ்தான் - இலங்கை	35
10	சகோதரக் கிரிக்கெட்	38
11	கிரிக்கெட் சர்ச்சை	39
12	டிஎல்ஸ் மற்றும் விஜேடி	40
13	டெஸ்ட் சாம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியல்	42
14	யார்க்கர் - சிறுகதை	43
15	சாதித்துக் காட்டிய பெண்கள்	47
16	ஜிம்பாப்வே - ஆப்கானிஸ்தான்	49
17	மகளிர் போட்டி முடிவுகள்	51
18	பங்களாதேஷ் - அயர்லாந்து	56
19	ரைசிங் ஸ்டார்ஸ் ஆசியக் கோப்பை	60
20	நவம்பர் மாதப் போட்டி முடிவுகள்	64
21	ஆஷஸ் தொடர்	70
22	பிரையன் லாரா - ஆண்டனி தினேஷ்	72

துடுப்பாட்டம்

கிரிக்கெட்டும் கிரிக்கெட் சார்ந்தும்

உள்ளே

23	மைல்கல்லை எட்டியவர்கள்	77
24	மறக்க முடியாத போட்டி - கா. இராமச்சந்திரன்	81
25	புத்தகக் கிரிக்கெட்	85
26	12த் மேன் - கா. இராமச்சந்திரன்	87
27	மாதம் ஒரு மங்கை	89
28	நியூசிலாந்து - வெஸ்ட் இண்டீஸ்	91
29	லாரா வோல்வார்ட்	96
30	அபுதாபி டி10	99
31	சதநாயகன்	103
32	முத்தரப்புத் தொடர்	104
33	கிரிக்கெட் சினிமா	108
34	நியூசிலாந்து - இங்கிலாந்து	110
35	அதிரடி கிரிக்கெட்	115
36	பங்களாதேஷ் - வெஸ்ட் இண்டீஸ்	116
37	ஆஸ்திரேலியா - இந்தியா	118
38	டிசம்பர் மாதப் போட்டிகள்	121
39	இந்தியா - தென்னாப்பிரிக்கா	122
40	சாதனைத்துளிகள்	128
41	ஐபிஎல் விடுவிக்கப்பட்ட வீரர்கள்	129
42	ரசிகன்	133
43	கடைசிப்பக்கம்	139

அட்டைப்படக் கட்டுரை

துடுப்பாட்டம் இதழில் தொடர்ந்து மூன்றாவது முறையாக அட்டைப்படத்தை ஆக்கிரமித்திருக்கும் இந்திய மகளிர் அணியினருக்கு முதலில் வாழ்த்துகள்.

ஜெமிமா குடியரசுத்தலைவரிடம் கூறிய வாசகத்தை இங்கு நினைவுகூற விரும்புகிறேன்.

"இன்று நாங்கள் இந்த இடத்தில் இருக்கிறோம். இந்திய மகளிர் கிரிக்கெட்டை எல்லோரும் பின்தொடர்கின்றனர். இன்று எங்களுக்கு ஆடவர் அணிக்கு இணையாக சம்பளம் கிடைக்கிறது. மகளிர் ஐபிஎல் எல்லாம் வந்துவிட்டது. ஆனால் எங்களுக்கு முன்பாகப் பலர் **புகழ், பணம், உதவி மற்றும் அங்கீகாரம்** என்று எதுவுமே இல்லாமல் கிரிக்கெட்டின் மீது கொண்ட பேரார்வம் காரணமாக அற்பணித்திருந்தனர். இன்று எங்களின் இந்த வெற்றிக்கு விதையிட்டது அவர்கள் தான்." என்று கூறினார்.

ஆம் இன்று நம் மகளிர் அணி கண்ட வெற்றிக்கு விதையிட்டு சாதனைகள் பல படைத்து அங்கீகாரம் இன்றி வலம்வந்த ஒவ்வொரு இந்திய மகளிர் அணி வீராங்கனைகளையும் இந்த நேரத்தில் துடுப்பாட்டம் குழு நினைவு கூறுவதில் மகிழ்ச்சி கொள்கிறது.

2025 உலகக்கோப்பை இந்தியாவில் நடப்பதால் இந்தியா கோப்பை வெல்லவேண்டும் என்ற ஆசை கொண்ட ஒரு சாதாரண ரசிகனின் மனநிலையில்தான் நானும் இருந்தேன். இலங்கை, பாகிஸ்தான் என்ற இரு சிறிய

அணிகளை வென்று தொடரைத் துவக்கிய இந்திய அணிக்கு தென்னாப்பிரிக்கா, ஆஸ்திரேலியா & இங்கிலாந்து என்ற வலுவான அணிகளுடன் மூன்று தொடர் தோல்வி நம்பிக்கையை சிதைப்பதாகவே இருந்தது.

நாம் மட்டும் தான் நம்பிக்கையை இழந்தோம். நம் ஹர்மன்ப்ரீத் படை நம்பிக்கையை இழக்கவில்லை என்பதை நியூசிலாந்துக்கு எதிரான அபாரமான ஆட்டமும் வெற்றியும் உரக்கக் கூறியது. அந்த வெற்றி, அரையிறுதி வாய்ப்பை உறுதிப்படுத்தியது. தொடரில் இந்தியா அரையிறுதி செல்ல வருணபகவான் நியூசிலாந்து மேல் காட்டிய பாரபட்சமும் ஒரு காரணம். அரையிறுதி மகிழ்ச்சி என்றாலும் அது ஆஸ்திரேலியாவிற்கு எதிரே என்று எண்ணும்பொழுதே நமக்குக் கால்கள் கொஞ்சம் நடுங்கத்தான் செய்தது.

2017 மீண்டும் நிகழுமா என்று ஒரு எண்ண ஓட்டம் மனதில். பேராசை என்றாலும் ஆசைதானே அது. அப்படி ஒரு ஆசை இங்கு கோடிக்கணக்கான மக்கள் மனதிலும் இருந்தது. பங்களாதேஷ் அணியுடன் நடைபெற்ற போட்டியில் பிரதிகா ராவலின் காயம் அணிக்கு ஒரு பெரும் பின்னடைவு. அந்த இடத்தில் ஷபாலி வர்மா அணியில் இடம்பிடித்திருந்தார்.

அரையிறுதியில் முதலில் பேட் செய்த ஆஸ்திரேலிய அணி, அலைசா ஹீலி விக்கேட்டை இழந்தாலும், அதற்கடுத்த இணை **லிட்சிபீஃல்ட் (119) & எலைஸ் பெர்ரி (77)** இந்தியப் பந்துவீச்சைத் துவம்சம் செய்தனர். பின்பு **கார்ட்னர் (63)**

அரைசதம் என **ஆஸ்திரேலியா 338** ரன்கள் குவித்தது. பிற்பாதியில் இந்தியப் பந்துவீச்சு அடுத்தடுத்து விக்கெட்களை வீழ்த்தியது ஒரு 20-30 ரன்கள் ஆஸ்திரேலியா குறைவாகப் பதிவுசெய்ய வழிவகுத்தது. இந்தியா சார்பில், சாரணி, தீப்தி தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

339 இலக்குடன் களம் இறங்கிய இந்திய அணிக்கு, ஷபாலி & ஸ்மிருதி ஜொலிக்காதது சோகத்தில் ஆழ்த்தியது. **ஜெமிமா & ஹர்மன்ப்ரீத்** இணை இந்தியாவிற்கு நம்பிக்கையைத் தந்தது. அரைசதத்திற்குப் பின்பு ருத்ர தாண்டவம் ஆடி 89 ரன்கள் குவித்த ஹர்மன்ப்ரீத்தின் விக்கெட்டிற்குப் பிறகு **ஜெமிமா (127*)** நிதானமாகக் கடைசிவரை ஆடி, அந்த நாளை நமதாக்க வெற்றியை வசப்படுத்தினார். தீப்தி, ரிச்சா & அமோஞ்ஜித் இவர்களின் ஆட்டம் சிறிது என்றாலும் அன்றைய நாளுக்கு மிகத்தேவையான ஒன்று.

இவ்வாறாக 2017 உலகக்கோப்பை அரையிறுதிக்குப் பிறகு, பல ஆண்டுகள் உலகக்கோப்பை போட்டிகளில் தோல்வியே கண்டிராத ஆஸ்திரேலியாவிற்கு ஒரு தோல்வி, அதுவும் இந்திய அணியால் தான், நிகழ்ந்துள்ளது.

இது வெறும் வெற்றியல்ல வரலாறு என்று அன்றே அனைவராலும் பாராட்டி பேசப்பட்டாலும், இன்னும் ஒரு படி ஏற வேண்டியது இருந்தது. இதை நம் மகளிர் அணி மனதில் ஆணி போல் அடித்திருந்தனர் என்பதை, நாமும் பின்பு தெரிந்துகொண்டோம்.

நவம்பர்-02-2025

தென்னாப்பிரிக்க அணிக்கு லீக் போட்டிகளில் தொடக்கமும் முடிவும் சரியாக அமையவில்லை. ஆனால் அதற்கிடையேயான போட்டிகளில் அபாரமாக விளையாடி அரையிறுதியில் இங்கிலாந்தை வீழ்த்தி வலுவாக இறுதிப்போட்டிக்குத் தகுதியடைந்ததனர்.

முதலில் பேட்டிங் செய்த இந்திய அணிக்கு **ஸ்மிருதி-ஷபாலி** இணை 100 ரன்களைக் கடந்து நல்ல தொடக்கம் அளித்தது. ஸ்மிருதி விக்கெட் இழக்க, தன்னை நிரூபிக்க அளிக்கப்பட்ட வாய்ப்பை சிறப்பாகப் பயன்படுத்திய **ஷபாலி வர்மா 87** ரன்கள், **தீப்தியின் அரை சதம்,** ரிச்சாவின் அதிரடி என **இந்தியா 298** ரன்களைக் குவித்தது. 299 என்ற இலக்குடன் களம் இறங்கிய தென்னாப்பிரிக்கா முதல் விக்கெட்டிற்கு 50 ரன்களைக் கடந்தனர். இரண்டு விக்கெட்கள் அடுத்தடுத்து விழுந்தது. ஆனால் லாரா வோல்வார்ட் மலைபோல் நின்று ஒரு பக்கம் நம் நம்பிக்கையை சிதைத்துக் கொண்டிருந்தார்.

நிறைய திறைமையான பேட்டர்களைக் கொண்ட, நீளமான பேட்டிங் லைனை உடைய அணி தென்னாப்பிரிக்கா. விக்கெட் விழாமல் இந்தியா தடுமாறியபோது, நம் அணித்தலைவி ஹர்மன்ப்ரீத்-ன் கேப்டன்சி ஷபாலியைப் பந்துவீச அழைக்க, இன்றைய நாள் ஷபாலிக்கானது என்பதை மீண்டும்

நிரூபிக்கும் வண்ணம் முதல் இரண்டு ஓவர்களிலே 2 விக்கெட்களை வீழ்த்தி இந்தியாவை ஆட்டத்திற்குள் கொண்டுவந்தார். மறுமுனையில் வோல்வார்ட் சதத்தை நெருங்கிக்கொண்டிருந்தார். கீழ்வரிசையில் அதிரடி வீரர்களைக் கொண்டிருந்த தென்னாப்பிரிக்காவிற்கு வோல்வார்ட் களத்தில் இருப்பது இன்னும் பலமாக இருந்தது. **வோல்வார்ட்டின் சதம், டெர்க்சனின் அதிரடி** எனத் தென்னாப்பிரிக்காவின் கை ஓங்கிக்கொண்டிருந்தது. தீப்தி ஷர்மா தனது அபாரமான பந்துவீச்சில் அடுத்தடுத்து விக்கெட்களை வீழ்த்தி, இந்தியாவின் கனவு மெய்ப்பட களத்தில் கைகொடுத்தார்.

தீப்தி வீசிய 45.3 வது ஓவர் நாடின் டீ கிளார்க் ன் பேட்டில் பட்டு நேராக ஹர்மன்ப்ரீத் கையில் தஞ்சமடைந்து 2025 மகளிர் ஒருநாள் உலகக்கோப்பையை இந்திய அணி வென்றது.

இது முழுக்க முழுக்க இந்திய அணியின் வெற்றி. ஒவ்வொரு வீரர்களும் தங்களின் பங்கை உணர்ந்து அணிக்காக அனைத்துத் தருணங்களிலும் முன்வந்து வெற்றிக்கு வழிவகுத்துள்ளனர். அமோல் மஜூம்தார், ஆவிஷ்கர் ஷல்வி, முனீஷ் பாலி என்ற இந்தப் பயிற்சியாளர் குழு இந்தியாவின் வெற்றிக்கு பெரிதும் பங்காற்றியுள்ளனர்.

தீப்தி சர்மாவின் 215 ரன்கள் (3 அரைசதம்) & 22 விக்கெட்கள்

ஸ்மிருதி மந்தனாவின் 434 ரன்கள்

பிரதிகா ராவல்ன் ஒரு சதம் & ஒரு அரை சதம் என 308 ரன்கள்

ஹர்மன்ப்ரீத் கவுர் அணியின் தலைவியாக சிறப்பாக செயல்பட்டு, குறிப்பாக இறுதிப்போட்டியில் பந்துவீச்சைக் கையாண்டது. பேட்டராக 260 ரன்கள்.

ஷபாலி வர்மாவின் இறுதிப்போட்டி அட்டகாசம் 87 ரன்கள் & 2/36

ஜெமிமா ரோட்ரிக்ஸின் அரையிறுதி சதத்துடன் மொத்தமாக 292 ரன்கள்

ஸ்ரீசாரணியின் 14 விக்கெட்கள்

ரிச்சா கோஷ்ஷின் 235 ரன்கள் (133.52 ஸ்ட்ரைக் ரேட்டில்)

கிராந்தி கவுடின் 9 விக்கெட்கள், ரேணுகா சிங் தாகூரின் எக்கனாமிகல் ஸ்பெல், அமோன்ஜித்தின் ஆல்ரவுண்ட் பர்பார்மன்ஸ் என மொத்த அணியும் முன்நின்று இந்த வெற்றியை இந்தியாவிற்குப் பெற்றுத்தந்துள்ளனர்.

இந்திய ஆடவர் கிரிக்கெட்டிற்கு ஒரு 1983 போல், இந்திய மகளிர் அணிக்கு இந்த 2025. இந்த வெற்றி, நாட்டின் பல மூலைகளில் அடுத்த தலைமுறையின் கனவில் மகளிர் கிரிக்கெட்டை விதைத்துள்ளது என்று கூறினால் மிகையாகாது.

இந்த வரலாற்று வெற்றியை வசப்படுத்திய இறுதிப்போட்டியில் ஆட்ட நாயகியாக ஷபாலி வர்மாவும், தொடர் நாயகியாக தீப்தி ஷர்மாவும் தேர்வு செய்யப்பட்டனர்.

"துடுப்பாட்டம் குழுவின் சார்பாக இந்திய மகளிர் அணிக்கு மனமார்ந்த வாழ்த்துகள்"

பாகிஸ்தான்- தென்னாப்பிரிக்கா

பாகிஸ்தான் சுற்றுப்பயணம் சென்றிருந்த தென்னாப்பிரிக்க அணி 2 டெஸ்ட், 3 இருபது ஓவர் மற்றும் 3 ஒருநாள் போட்டி தொடரில் விளையாடியது. சென்ற இதழில் டெஸ்ட் ஆட்டங்கள் குறித்துப் பார்த்திருந்தோம், 1-1 என தொடர் சமனில் முடிந்திருந்தது.

அடுத்தபடியாக நடைபெற்ற இருபது ஓவர் தொடர் பாகிஸ்தானின் ராவல்பிண்டி மற்றும் லாகூரில் நடைபெற்றது.

முதல் போட்டி; முதலில் பேட் செய்த தென்னாப்பிரிக்கா அணியின் சார்பில் ரீஸா ஹென்ட்ரிக்ஸ் (60) அரைசதம் கடந்தார். டோனி டி சோர்ஷி மற்றும் ஜார்ஜ் லிண்டேயின் அதிரடியால் 194/9 (20) ரன்களைக் குவித்தது. முகமது நவாஸ் 3/26 (4) சிறப்பாகப் பந்துவீசினார். 195 என்ற இலக்குடன் களம் இறங்கிய பாகிஸ்தான் அணி தென்னாப்பிரிக்காவின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் திணறியது. கார்பன் போஷ் 4/14 (4) சிறப்பான பந்துவீச்சால் பாகிஸ்தான் 139 ரன்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்து 55 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது.

ஆட்ட நாயகன் - ஜார்ஜ் லிண்டே- 36 (22) & 3/31 (3)

இரண்டாவது போட்டி; லாகூரில் நடைபெற்ற இந்தப்போட்டியிலும் முதலில் பேட் செய்த தென்னாப்பிரிக்க அணி பாகிஸ்தானின் வேகத்தில் 110 ரன்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்து சுருண்டது. பஹீம் அஷ்ரப் -

4, சல்மான் மிர்ஸா - 3, நஷீம் ஷா - 2 விக்கெட்களை வீழ்த்தினர். பாகிஸ்தான் 13.1 ஓவரில் சயீம் ஆயூஃப்ன் அரைசதத்துடன் இலக்கைக் கடந்து 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் வென்றது.

ஆட்ட நாயகன் - சல்மான் மிர்ஸா- 3/14 (4)

மூன்றாவது போட்டி: 1-1 என சமமாக இருந்த நிலையில் தொடர்வெற்றியைத் தீர்மானிக்க இருந்த இந்தப் போட்டியில் முதலில் பேட் செய்த தென்னாப்பிரிக்கா மீண்டும் பாகிஸ்தான் பந்துவீச்சில் திணறி 20 ஓவரில் 139 ரன்களை மட்டுமே அடித்தது. சஹீன் அப்ரிடி 3 விக்கெட்கள் வீழ்த்தினார். 140 என்ற இலக்கை பாபர் அசாமின் அரைசதத்துடன் 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் வென்று தொடரை 2-1 எனக் கைப்பற்றியது.

ஆட்ட நாயகன் - பாபர் அசாம் 68 (47)

தொடர் நாயகன் - பஃஹீன் அஷ்ரப் - 6 விக்கெட்கள்

ஒரு நாள் தொடர்

முதல் போட்டி: மூன்று போட்டிகளுமே பைசலாபாத்தில் நடைபெற்றது. முதல் போட்டியில் முதலில் பேட் செய்த தென்னாப்பிரிக்க அணி தொடக்க ஆட்டக்காரர்களான ப்ரிட்டோரியஸ் & டி காக் அரை சதங்களுடன் 49.1 ஓவரில் 263 ரன்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தனர். நஷீம் ஷா மற்றும் அப்ரார் அகமது தலா 3 விக்கெட்களை வீழ்த்தினர். சல்மான் ஆஹா மற்றும்

ரிஸ்வானின் அரை சதங்களுடன் 49.4 ஓவர்களில் இலக்கை எட்டி 2 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தான் வென்றது.

ஆட்ட நாயகன் சல்மான் ஆஹா - 62 (71)

இரண்டாவது போட்டி; முதலில் பேட் செய்த பாகிஸ்தான் அணிக்கு சயூம் அயூப் (53), சல்மான் ஆஹா (69), முகமது நவாஸ் (59) உதவியுடன் 50 ஓவர்களில் 269/9 ரன்கள் குவித்தது. 270 ரன்கள் என்ற இலக்குடன் களம் இறங்கிய தென்னாப்பிரிக்கா குயின்டன் டிகாக்கின் அதிரடி சதம் மற்றும் டோனி டி சோர்ஷியின் அரை சதத்துடன் 40.1 ஓவரில் 8 வித்தியாசத்தில் வென்றது.

ஆட்ட நாயகன் - குயிண்டன் டிகாக் - 123* (119)

மூன்றாவது போட்டி - இந்தத்தொடரும் 1-1 என்ற நிலையில் மூன்றாவது போட்டிக்கு வந்தது. முதலில் பேட் செய்த தென்னாப்பிரிக்கா அணிக்கு தொடக்கம் நன்கு இருந்தாலும் அடுத்தடுத்து விக்கெட்களை இழந்து 37.5 ஓவர்களில் 143 ரன்களுக்கு சுருண்டது. அப்ரார் அஹமது 4 விக்கெட்களை வீழ்த்தினார். 25.1 ஓவரில் சயூம் ஆயூஃப்ன் அரை சதத்துடன் பாகிஸ்தான் 7 விக்கெட் வித்தியாசத்தில் வென்று தொடரை 2-1 எனக் கைப்பற்றியது.

ஆட்ட நாயகன் - அப்ரார் அஹமது 4/27 (10)

தொடர் நாயகன் - குயின்டன் டீ காக் - 3 போட்டிகள் - 239 ரன்கள்.

இந்த இருபது ஓவர் மற்றும் ஒரு நாள் தொடர் இரண்டையும் 2-1 என வென்ற பாகிஸ்தான் அணிக்கு இந்தத் தொடர் சிறப்பாக அமைந்தது. தென்னாப்பிரிக்க இளம் அணியினரும், அவர்களுக்குப் பெரிதும் அனுபவம் இல்லாத துணைக்கண்டத்தில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர் என்பது பாராட்டத்தக்கது.

3ம் ஆண்டில் துடுப்பாட்டம்

வாசிப்பின்மீது ஆர்வம் கொண்டவர்கள் நடத்தும் கையெழுத்துப் பத்திரிகை பற்றி வாசிக்கும் போது நாமும் ஒரு கையெழுத்துப் பத்திரிகை ஆரம்பிக்கலாமே என்ற எண்ணம் மேலோங்கும். அப்படிப்பட்ட ஒரு சிறுபொறி தான் துடுப்பாட்டம் இதழின் துவக்கம்.

அரசியல், சினிமா அல்லது பல்சுவை பற்றி எழுத, நிறைய கோணங்கள் கிடைக்கும். ஆனால் கிரிக்கெட் பற்றி எழுதினால் எப்படி எழுத என்று யோசித்தோம். கிரிக்கெட் போட்டியை டிவியில் பார்த்தாலும் மீண்டும் பத்திரிகையில் வாசிக்கும்போது வரும் சுவாரஸ்யம் இருக்கும்வரை தாராளமாக கிரிக்கெட் பற்றி எழுதலாம் என்று முன்நகர்ந்தோம்.

மூன்று பேர்கள் சேர்ந்து துவங்கிய இதழில் எழுத்துப்பிழை எக்கச்சக்கமாக இருப்பதாக சொன்னார். இலக்கணப்பிழை இருக்கலாம். தாய்மொழியில் எழுத்துப்பிழையை அனுமதிக்கக்கூடாது என்று மைக்கேலை இணைத்தோம். எல்லாக் கட்டுரையையும் அவர் பிழைதிருத்துகிறார். நாங்கள் பிழைத்திருக்கிறோம்.

எக்ஸ் தளத்தில் எங்கள் ஒவ்வொரு நகர்விற்கும் வாழ்த்திய அன்பர்கள், நண்பர்கள், வாசகர்கள் அனைவருக்கும் நன்றி. எந்தக் கைமாறும் இல்லாமல் கட்டுரை / சிறப்புப் பக்கங்கள் எழுதித்தந்த மதிப்புக்குரிய பூவேந்தன் (@Poovendan_C), ஆண்டனி தினேஷ் (@tharuvai_antony), பொன் இளங்கோ (@Mohandes_pon), முரளி கண்ணன் (@teakkadai1), பிரதீஷ் (@1291Pradeesh), விஜய் (@adi10vj), பிரகாஷ் (@PrakashMathiy), கொடுவாள் புலி (@PeriyaPalluPuli), முத்து மாலை, மணிகண்டன் (@NAPA_Manikandan), தயா (@NishanThaya), சித்ரா தேவி (@chithradevi_91) ஆகியோருக்கு எங்களின் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். நிறைகளை சொன்னால் வளர்ச்சி இருக்காது என்று குறைகளையும் கண்டறிந்து சொன்ன நண்பர்களால் நாங்கள் வளர்ந்திருக்கிறோம்.

பிரபல எழுத்தாளராக இருந்தும் எங்களின் முயற்சிக்கு இன்று வரை துணை நிற்கும் எழுத்தாளர் “நர்சிம்” அவர்களுக்கு சிறப்பு நன்றி.

இன்று வரை எங்களோடு கைகோர்த்து, தோள் கொடுத்து வரும் விளம்பர நிறுவன நண்பர்கள் ரம்யம் சோப்ஸ் (@ratweetzz), சத்யசாய் கம்யூனிகேஷன்ஸ் (@madhu882211), மியூச்சுவல் பண்ட் ஆலோசகர் (ராமசுப்பிரமணியன்), சிவா (@Siva_Twiitz), அழகு மசாலா(@iamaramkumar) ஆகியோரின் அன்பிற்கு எங்களது நன்றி.

2ம் ஆண்டு சிறப்பிதழுக்கு அட்டைபடம் வடிவமைத்து, பிறகு எல்லா அட்டைப்படங்களுக்கும் வடிவமைத்து எங்களில் ஒருவராகிவிட்டார் ராம்குமார். வெளி அலங்காரம் முழுக்க இவரது கைவண்ணம் தான்.

ஒவ்வொரு மாதமும் குறித்த நேரத்தில் குறித்த தரத்தில் நேர்த்தியாக பிரிண்ட் செய்து தரும் திருநெல்வேலி ஜூஹி ஜெராக்ஸ் ஊழியர்களுக்கும் எங்கள் நெஞ்சம் நிறைந்த நன்றி.

நாங்கள் பெரிய உயரத்தைத் தொடவில்லை என்று தெரியும். எங்களின் ஓய்வுநேரத்தில் பலரும் வாசிக்கும் வண்ணம் ஒரு இதழைத் தயாரித்து வழங்கி, இரண்டு ஆண்டுகளைக் கடந்து 3ம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதே எங்களுக்கு மாபெரும் வெற்றி. ஆனாலும் தொடர் உழைப்பைத் தொடருவோம்.

நானும் கிரிக்கெட்டும்

- மைக்கேல்ராஜ். ஞா

"மூன்று பேர்கள் சேர்ந்து துவங்கிய இதழில் எழுத்துப்பிழை எக்கச்சக்கமாக இருப்பதாக சொன்னார். இலக்கணப்பிழை இருக்கலாம். தாய்மொழியில் எழுத்துப்பிழையை அனுமதிக்கக்கூடாது என்று மைக்கேலை இணைத்தோம். எல்லாக் கட்டுரையையும் அவர் பிழைதிருத்துகிறார். நாங்கள் பிழைத்திருக்கிறோம்."

துடுப்பாட்டம் மூன்றாம் ஆண்டு சிறப்பிதழான இதில் என்னயப் பத்தி ஆசிரியர் இப்படி ஒரு அடையாளம் குடுத்துருக்காரு. அந்த அளவுக்கு நாம என்ன பண்ணிட்டோம்னு ஒரு எண்ணம் வந்தது. அப்போ இந்த தடவ நானும் கிரிக்கெட்டும் எழுதிடுவோம்னு முடிவு பண்ணிட்டேன்.

டுவிட்டருக்கு வந்து (எதுக்கு வந்தேன்னு எனக்கே தெரியாது) பத்து பன்னெண்டு வருஷங்கள் இருக்கும்னு நினைக்கேன். அதுவரைக்கும் உருப்படியா எதுவும் பண்ணல இந்த டுவிட்டர்ல (இப்போவும் ஒன்னும் பெருசா பண்ணல அப்படிங்கிறது வேற விஷயம்). வர்றது, சும்மா ஸ்க்ரால் பண்றது, போறதுன்னு இருந்தேன். அப்போவே தமிழ்ல வர்ற நிறைய டுவீட்கள்ல இருக்குற எழுத்துப்பிழைகள் கண்ணுல படும். கரெக்சன் சொல்லனுமுனு கை பரபரக்கும். ஆனாலும் நம்ம வேலையப் பாத்துட்டுப் போவோம்னு போயிடுவேன்.



அப்படி ஒரு டைம் பாத்தப்போ தான் (ரெண்டாவது அல்லது மூணாவது இதழ்னு நினைக்கேன்), துடுப்பாட்டம் ஆசிரியர்கிட்ட சொன்னேன் கொஞ்சம் எழுத்துப்பிழைகள் தெரியுது நான் வேணும்னா கரெக்சன் பண்ணவானு கேட்டேன். எங்கிட்ட வந்துலாம் உம் பாட்டில் பிழை உள்ளதுனு நக்கீரர் சொன்னதுபோல யாராவது வந்து சொன்னா அப்படித்தான் இருக்கும் நீ உன் வேலையப் பாத்துட்டுப் போனு சொல்லிருப்பேன்.

ஆனா இந்த ஆசிரியரின் மனசு இருக்கே அதெல்லாம் ஒரு கொடுப்பினை, எல்லாருக்கும் வந்துடாது. இவரு போக, மத்த ரெண்டு பேரும் கொடுத்த சப்போர்ட்லாம் இப்போ நினைச்சாலும் கண்ணு கலங்கும்.

கரெக்சன்னு களம் இறங்குன பிறகு இந்த மாதிரி நானும் கிரிக்கெட்டும் னு எழுதட்டுமா னு கேட்டப்போ (சூரிய வம்சம் பட மணிவண்ணன் - சுந்தர்ராஜன் குடிக்கிற காமெடியில் வர்ற மாதிரி) ஆறுகரங்கள் நீட்டி வரவேற்றது இந்த அணி. இடையில அப்பப்போ எழுத முடியாம போனப்போவும் பரவால்ல இருக்கட்டும் அடுத்த தடவ எழுதுங்கனு உற்சாகம் குடுத்தாங்க. இதுக்கெல்லாம் மகுடமாக இங்குள்ள சில நண்பர்கள் எனக்குக் குடுத்த பாராட்டும் உற்சாகமும் ஒரு வேகத்தக் கொடுத்தது. இப்படி சொல்லிட்டே போகலாம்.

இவ்வளவுக்கும் காரணம் கிரிக்கெட் என்ற ஒன்று மட்டுமல்ல. அதைத் தமிழில் பண்றோம்னு நினைக்கிறப்போ ஒருவித சந்தோசம், ஒரு பெருமிதம் வரும். இது எப்படி இருக்கும்னா பத்து டூ பன்னெண்டு வகுப்புகள் அடுத்த ஊருல தங்கி படிச்சப்போ நூறு இருநூறுனு செலவுக்கு (ரெண்டு மூணு மாதங்களுக்கானது) வேணும்னு வாட்ச்மேனா இருந்த எங்கப்பாகிட்ட கேட்குறப்போ எங்கம்மா சொல்லும் ஒரு மாசத்துக்கு நாங்க கஞ்சி குடிக்கிற காசுடா அதுனு. ஆனா எங்கப்பா சொல்லுவாரு அவனே ஆடிக்கொரு தடவ அமாவாசைக்கு ஒருதடவை வர்றான் அவன்கிட்ட போயி அதெல்லாம் சொல்லிட்டுருக்கேனு அதட்டுவாரு. அப்போ எனக்கு அந்த நேரத்துல சந்தோசமா பெருமிதமானு சொல்லத் தெரியாத அளவுக்கு நின்னுருக்கேன். இப்போ நினச்சிப் பாத்தா தான் தெரியுது அந்த நேரத்துல நான் பீல் பண்ணிருக்கனும்னு. ஆனாலும் அந்த மனநிறைவு இப்போவும் கிடைச்சிட்டே இருக்கனும்னு வேண்டிக்கறேன் இந்தப் பொறுப்புல பண்ற வேலை.



இன்னும் எத்தனை மாதங்கள் வருடங்கள் இருந்தாலும் பிடிச்ச விளையாட்டான கிரிக்கெட் பத்தியும் அதையும் தமிழ்ல எழுதுற இந்த பாக்கியம் தொடர்ந்து கிடைக்கும்னு நம்புறேன். இதுக்கு மிக முக்கியமான தேவை ரசிகப்பெருமக்களாகிய உங்களுடைய ஆதரவு. எங்க இதழுக்கும், உங்க வாய்க்கும் (கண்ணுக்கும்) உள்ள இந்தத் தொடர்பு இன்னமும் அதிகம் ஆகி நீண்ட காலம் நீங்களும் வாழனும் நாங்களும் வளரனும்னு வாழ்த்துவீங்கன்ற நம்பிக்கையில் இத்தோடு முடித்துக்கொள்கிறேன்.

சிக்ஸர் பதில்கள்

அதிக கேப்டனுக்குக் கீழ் ஆடிய வீரர் யார்?

(ரவிக்குமார், கொரட்டூர்)

வெஸ்ட் இண்டீஸ் அணியின் **"மர்லான் சாமுவேல்ஸ்"** 17 கேப்டன்களுக்குக் (ஜிம்மி ஆடம்ஸ், கார்ல் கூப்பர், ரிட்லி ஜேக்கப்ஸ், பிரையன் லாரா, டேரன் கங்கா, ஷெர்வின் கேம்ப்பெல், சிவ்நரைன் சந்தர்பால், ராம்நரேஷ் சர்வான், ஜேசன் முகமது, கிறிஸ் கெய்ல், கார்லஸ் பிராத்வெயிட், ஜேசன் ஹோல்டர், வெயின் பிராவோ, கைரன் பொல்லார்ட், ராவ்மேன் பவல், டேனிஷ் ராம்தின், டேரன் சமி) கீழ் ஆடியுள்ளார். ஒரு போட்டியில் அவரே கேப்டனாக இருந்துள்ளார்.

சமீபத்திய ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் ஸ்டம்ப் அருகே நீலக்கோடு போட்ருந்தாங்களே? அது எதுக்கு?

(அமீர் சுல்தான், விக்கிரவாண்டி)

ஒருநாள் போட்டியில் நீலநிறக் கோடுகள் வைட் கால்களுக்கான புதிய ஐசிசி சோதனையாகும் (ஆறு மாதம் சோதனை முயற்சி). இது மிடில் ஸ்டம்பிற்கு இருபுறமும் ஒரு அடி தூரத்தில் உள்ள ஆடுகளத்தின் "பாதுகாக்கப்பட்ட

பகுதி"யைக் குறிக்கிறது. இந்தக் கோடுகளுக்கு இடையில் செல்லும் ஒரு பந்து லெக் சைடில் சென்றாலும் கூட, வைட் என்று அழைக்கப்படாது. இது பந்துவீச்சாளர்களுக்குக் கூடுதல் சாதகமாக ஆட்டத்தில் சமநிலையை மீட்டெடுக்க கொண்டுவரப்பட்டுள்ளது.

குமார் தர்மசேனா மாதிரி இந்திய சர்வதேசக் கிரிக்கெட் வீரர் யாராவது அம்பயராக இருக்கிறார்களா?

(கென்னடி, மயிலாடுதுறை)

1975 மற்றும் 1979 உலகக்கோப்பைத் தொடர்களில் இந்தியக் கேப்டனாக இருந்த ஸ்ரீனிவாசராகவன் வெங்கட்ராகவன், ஐசிசி அம்பயராக இருந்து ஓய்வு பெற்றவர். வெங்கட்ராகவன் 57 டெஸ்ட் போட்டி மற்றும் 15 ஒருநாள் போட்டிகளில் ஆடியுள்ளார். 79 டெஸ்ட் மற்றும் 78 ஒருநாள் போட்டிகளுக்கு அம்பயராக இருந்துள்ளார்.

ஆஸ்திரேலிய அணி கிரிக்கெட்டில் தொடர்ச்சியாக ஆதிக்கம் செலுத்த காரணம் என்ன?

(வெற்றிமாறன், வந்தவாசி)

ஆஸ்திரேலிய அணி ஆதிக்கம் செலுத்த முதல் காரணம் அணித்தேர்வு. பொதுவாகக் கிரிக்கெட் அணி வீரர்கள் தேர்வில் அரசியல் இருக்கும். ஆனால் ஆஸ்திரேலியா அணியில் அரசியல் குறைவாக இருக்கும். கேப்டனுக்குப் பிடிக்காத வீரர், தேர்வுக்குழுத்தலைவருக்குப் பிடிக்காத வீரர், பயிற்சியாளருக்குப் பிடிக்காத வீரர் என்ற அரசியல் பெரிய அளவில் இருக்காது. 7 பேட்டர்கள், 4 பந்துவீச்சாளர்கள் என்ற சீரான அமைப்பில்

செல்வார்கள். பேட்டர்களில் 2 அல்லது 3 பேர் பந்துவீசக் கூடியவர்களாக இருப்பார்கள். பந்துவீச்சாளர்களில் ஒன்று அல்லது இரண்டு பேர் ஓரளவுக்கு பேட்டிங் செய்வார்கள்.

அடுத்தது உலகில் ஆஸ்திரேலியப் பகுதிக்கு மட்டும் கோடை டிசம்பர் - ஜனவரியில். மற்ற பகுதிகளில் பொதுவாக ஏப்ரல் - மே. ஆஸ்திரேலியா கோடையில் ஆஸ்திரேலியாவிலே ஆடுவார்கள். மற்ற நாடுகளின் கோடைகளில் மற்ற நாடுகளில் ஆடுவார்கள். இது காலநிலையை எதிர்கொள்ளும் நல்ல தெம்பைக் கொடுக்கிறது.

அது போல அவர்கள் முத்தரப்புத் தொடர் ஆண்டுதோறும் ஆடிவந்தனர் (தற்போது இது இல்லை). இந்த முத்தரப்புத் தொடரில் ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் நான்கு முறை ஆடும். மூன்று இறுதிப்போட்டிகள். கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கு மேலாக நடைபெறும் தொடர். இதில் ஆண்டுதோறும் அணிகள் மாறும், இது ஒருநாள் தொடரில் கோலோச்ச மாபெரும் பயிற்சி.

டெஸ்ட் அணி, ஒருநாள் அணி, டி20 அணி எனத் தெளிவான சிந்தனையுடன் இருப்பார்கள். டெஸ்ட் அணியில் நாதன் லைன் சுழற்பந்து வீச்சாளர். ஒருநாள் அணியில் ஆடம் ஸாம்பா. இந்த முறையை இப்போது மற்ற அணிகளும் கையில் எடுத்துள்ளன.

அடுத்தது, எந்த நேரத்திலும் அவர்கள் போட்டியை விட்டுவிடுவது இல்லை, எவ்வளவு முடியுமோ அவ்வளவு போராடுவார்கள். உதாரணம் மேக்ஸ்வெல் 200.

இறுதியாக, எதிரணி வீரர்களை சீண்டுவது, வசைபாடி எதிரணி வீரர்களின் உறுதியை நிலைகுலைய வைப்பது. இது கேவலமான யுக்தி என்றாலும் அவர்களின் வெற்றிக்குத் தலையாய காரணம் இது.

சாதனைகள்

உலகக்கோப்பை இறுதிப்போட்டியில் அரைசதம் + 5 விக்கெட்டுகள் என்ற சாதனையை நிகழ்த்திய முதல் வீராங்கனை ஆனார் இந்திய அணியின் தீப்தி சர்மா.

நவம்பர் 2ல் நடைபெற்ற இறுதிப்போட்டியில் தீப்தி பேட்டிங் செய்து 58 பந்துகளில் 58 ரன்கள் அடித்தார். பந்துவீச்சில் 39 ரன்கள் கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

****

பாகிஸ்தான் அணியின் பாபர் அசாம் டி20 போட்டிகளில் அதிக ரன்கள் குவித்த வீரர் (4392 ரன்கள்) என்ற சாதனையைப் படைத்துள்ளார். இப்போது ரோகித் சர்மா (4231 ரன்கள்) இரண்டாவது இடத்தில் இருக்கிறார்.

****

ஒரே இன்னிங்க்சில் 6 டிஸ்மிஸல் செய்த விக்கெட்கீப்பர் என்ற சாதனையை சமன் செய்தார் அமெரிக்க அணியின் விக்கெட் கீப்பர் ஸ்மிட் பட்டேல். ஒருநாள் போட்டிகளில் இது 18வது நிகழ்வாகும். ஸ்மிட் பட்டேல் எமிரேட்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் 5 கேட்ச்கள் மற்றும் ஒரு ஸ்டம்பிங் செய்தார். இந்த சாதனையை ஆடம் கில்கிறிஸ்ட் 6 முறையும், குயின்டன் டீ காக் இரண்டு முறையும் நிகழத்தியுள்ளனர்.

****

நியூசிலாந்துக்கு எதிரான 2வது ஒருநாள் போட்டியில் சதமடித்தார் வெஸ்ட் இண்டீஸ் கேப்டன் ஷாய் ஹோப். இதன் மூலம் 11 டெஸ்ட் ஆடும் அணிகளுக்கு எதிராக சதமடித்த முதல்வீரர் ஆனார் ஷாய் ஹோப்.

ஹோப் ஏற்கனவே நேபாள் மற்றும் நெதர்லாந்து அணிகளுக்கு எதிராக சதம் அடித்துள்ளார். எனவே 13 வெவ்வேறு அணிகளுக்கு எதிரான சதமடித்த வீரர் ஆனார். இதுவும் ஒரு சாதனை தான்.

ஒருநாள் போட்டிகளில் 12 வேறுவேறு அணிகளுடன் (ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், இங்கிலாந்து, இந்தியா, அயர்லாந்து, நேபாள், நெதர்லாந்து, நியூசிலாந்து, பாகிஸ்தான், தென்னாப்பிரிக்கா, இலங்கை, ஜிம்பாப்வே) சதமடித்துள்ளார் ஷாய் ஹோப். சச்சின் டெண்டுல்கர், ரிக்கி பாண்டிங், கிறிஸ் கெயில், ஹசிம் அம்லா, மார்டின் கப்தில் ஆகியோர் தலா 11 அணிகளுக்கு எதிராக ஒருநாள் போட்டிகளில் சதமடித்துள்ளனர்.

****

ஒரு ஆண்டில் அதிக சர்வதேசப்போட்டிகளில் ஆடிய வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார் பாகிஸ்தான் அணியின் சல்மான் அகா. 2025ல் சல்மான் அகா 56 சர்வதேசப் போட்டிகளில் (5 டெஸ்ட், 17 ஒருநாள் மற்றும் 34 டி20) ஆடியுள்ளார். முன்னதாக ராகுல் டிராவிட் 1999லும், முகமது யூசுப் 2000லும், எம்எஸ் தோனி 2007லும் தலா 53 சர்வதேசப் போட்டிகளில் ஆடியுள்ளனர்.

ஒரு டெஸ்ட் போட்டியில் அதிக கேட்ச்கள் பிடித்த பீல்டர் என்ற சாதனையைத் தென்னாப்பிரிக்க அணியின் ஏடன் மார்க்ரம் நிகழ்த்தியுள்ளார். மார்க்ரம் இந்தியாவுக்கு எதிரான குவஹாத்தி டெஸ்டில் 9 கேட்ச்கள் (முதல் இன்னிங்சில் 5, 2வது இன்னிங்சில் 4) பிடித்தார். அஜிங்கியா ரகானே இலங்கைக்கு எதிராக 8 கேட்ச்கள் பிடித்ததே சாதனையாக இருந்தது.

****

மலேசியா அணியின் விரந்தீப் சிங் சர்வதேச டி20 போட்டிகளில் 3000+ ரன்கள் மற்றும் 100+ விக்கெட்டுகள் எடுத்த முதல் வீரர் என்ற சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

லைன் அண்ட் லெங்த் (Line & Length)

- *கா. இராமச்சந்திரன்*

கிரிக்கெட்டில் பந்துவீச்சைப் பொறுத்தவரை பயிற்சியாளர்கள், வர்ணனையாளர்கள் மற்றும் ரசிகர்கள் அனைவரும் குறிப்பிடும் ஒரு சொல்லாடல் தான் இந்த லைன் அண்ட் லெங்த். பந்துவீச்சாளர்களின் பாலபாடம்.

கிரிக்கெட் தொடங்கிய காலத்தில் இருந்து இது ஒரு வரையறையாக, பேட்ஸ்மேன்கள் எளிதில் அடிக்க இயலாதவாறு வீசப்படும் பந்துகளைத் துல்லியமான அளவியலில் குறிப்பிடப்பட்டது. ஆனால் காலப்போக்கில் ஆட்டவகைகளுக்கு ஏற்ப (டெஸ்ட், ஒருநாள் மற்றும் டி20) பந்துவீசும் திசை மற்றும் தூரத்தில் மாற்றங்கள் புகுத்தப்பட்டன.

முதலில் பொதுவாக சரியான லைன் அண்ட் லெங்த் என்றால் என்ன?

லைன் (திசை):

ஒரு பந்துவீச்சின் திசை என்பது கிடைமட்டத் தளத்தில் அளவிடப்படும் அதன் பாதையின் திசையாகும். இன்னும் எளிமையாகச் சொன்னால், பந்து எவ்வளவு தூரம் இடது அல்லது வலது பக்கம் பயணிக்கிறது என்பதற்கான அளவீடாகும். இது பிட்ச்சில் நேராகக் கீழே வரையப்பட்ட கோட்டுடன் ஒப்பிடப்படுகிறது.பொதுவாகக் கிரிக்கெட்டில் இடது மற்றும் வலதுபுறம் அல்லாமல், ஆஃப் (பேட்ஸ்மேனுக்கு முன்னால் இருந்து விலகி), மற்றும் லெக் அல்லது ஆன் (பின்னால் அல்லது பேட்ஸ்மேனை நோக்கி) திசைகளின் அடிப்படையில் குறிப்பிடப்படுகிறது.



பந்து பயணிப்பதாகக் கூறப்படும் வெவ்வேறு திசைகள் ஆஃப் ஸ்டம்பிற்கு, மிடில் ஸ்டம்ப் அல்லது லெக் ஸ்டம்ப், லெக் ஸ்டம்ப்க்கு வெளியே அல்லது ஆஃப் ஸ்டம்பிற்கு வெளியே இருக்கலாம். ஆஃப் ஸ்டம்பிற்கு வெளியே ஒரு கோட்டில் உள்ள பந்துகள், ஆஃப் ஸ்டம்பிலிருந்து 12 இஞ்ச் உள் இருக்கும். அதைத்தாண்டிப் போடப்படும் பந்துகள் ஆஃபரிங் விட்த் (**offering width**) என்று வர்ணிக்கப்படும். லெக் ஸ்டம்ப்பிற்கு வெளியே ஒரு கோட்டில் உள்ள பந்துகள் பெரும்பாலும் டவுன் தி லெக் **(down the leg)** அல்லது கால்காப்பானை (**pads)** நோக்கி வீசப்பட்ட பந்து என்று குறிப்பிடப்படுகிறது. ஷார்ட் பிட்ச் செய்யப்பட்ட லெக்-சைடு பந்துகள் பெரும்பாலும் பாடி லைனை **(body line)** என்று குறிப்பிடப்படுகின்றன, அதாவது உடலின் திசையில் வீசப்பட்ட பந்து.

சரியான திசையில் வீசப்படும் பந்து, பேட்ஸ்மேன்களைத் திணறடிக்கும் திறன் கொண்டது. ஒரு ஷாட்டைக் கையைத் தோதுபடுத்தி பேட்ஸ்மேன் **(batsman got the room)** அடிக்க சிறிது இடம் வேண்டும். பந்து தவறான திசையில் வந்தால் அந்த இடம் தானாகக் கிடைத்துவிடும். சரியான திசையில் வரும்பொழுது அதை பேட்ஸ்மேன் தானாக உருவாக்க வேண்டும். ஸ்டம்ப் டூ ஸ்டம்ப் வீசச் சொல்லக் காரணம் பேட்ஸ்மேனுக்கு இடம் கிடைக்காது. அந்தப் பந்தைத் தடுக்க வேண்டும், தவறும் பட்சத்தில் ஸ்டம்பை இழக்க அல்லது எல்பிடபிள்யூ (**LBW**) விற்கு அதிக வாய்ப்பு.

ஸ்டம்ப் டூ ஸ்டம்ப்க்கு அடுத்து பெரும்பாலும் வீசப்படுவது அவுட் சைடு த ஆஃப் ஸ்டம்ப் லைன் தான். இதற்குக் காரணம் பேட்ஸ்மேன் இதை அடிப்பதா அல்லது விடுவதா என்ற இரண்டு எண்ணத்தில் விளையாடும்பொழுது தவறான ஷாட்டை

அடித்து விக்கெட்டை இழக்க வாய்ப்பு அதிகம். அதன் காரணமாகவே இந்தத் திசையில் வீசப்படும் பந்தை நிச்சயமற்ற தன்மையின் பாதை **(Coridor of uncertainty)** என்று அழைப்பார்கள். திசைகள் குறித்து மேற்கூறியது அனைத்தும் டெக்ஸ்ட் புக் ஆஃப் கிரிக்கெட்டின் (text book of cricket)ன் பாடங்கள். இதைத்தாண்டி சூழலுக்கு ஏற்ற முறையும் கையாளப்படுகிறது. அந்த ஃபீல்டு மற்றும் பேட்ஸ்மேனின் பலம், பலவீனத்துக்கு ஏற்றது போலும் பந்துவீசப்படுகிறது. உதாரணமாக, தோனி களத்தில் வரும்பொழுது அவுட் சைட் ஆஃப் ஸ்டம்ப் வைடு லைனில் பந்துவீசி, அவரைப் பெரிய ஷாட் அடிக்கவிடாமல் தடுப்பது. பெரிய மைதானங்களில் லெக்சைடில் ஃபீல்டிங் வலுப்படுத்தி அந்தத் திசையில் பந்துவீசுவது என்பதும் வழக்கத்தில் உள்ள ஒன்று.



லெங்த் (நீளம்):

ஒரு பந்துவீச்சின் நீளம் என்பது பந்து பேட்ஸ்மேனை நோக்கி எவ்வளவு தூரத்தில் பிட்ச் செய்கிறது என்பதைக் குறிக்கிறது. பந்துவீச்சாளருக்கு அருகில் பிட்ச் ஆகும்பொழுது ஷார்ட் என்றும், பேட்ஸ்மேனுக்கு அருகில் பிட்ச் ஆகும்பொழுது ஃபுல் என்றும், இரண்டுக்கும் இடையில் எங்காவது ஒரு உகந்த நீளத்தில் பிட்ச் ஆகும்பொழுது சரியான நீளம் (good length) என்று வர்ணிக்கப்படுகிறது.

சரியான நீளம் என்பது பொதுவாக வேகப்பந்து வீச்சாளர்களுக்கு, பேட்ஸ்மேனுக்கு முன்னால் ஆறு முதல் எட்டு மீட்டர் வரை இருக்கும். மேலும் சுழற்பந்துவீச்சாளர்களுக்கு, பேட்ஸ்மேனுக்கு முன்னால் சுமார் மூன்று முதல் நான்கு மீட்டர் வரை இருக்கும். ஒரு பந்தின் நீளம், பேட்ஸ்மேனின் நிலையை பந்து அடையும்போது, பிட்ச்சிலிருந்து எவ்வளவு உயரத்திற்கு எழுகிறது என்பதைக் காட்டுகிறது. அந்த வேகமாற்றமே பேட்ஸ்மேனுக்குப் பேட்டை வீச நேரத்தை அளிக்கிறது.

ஒரு பந்து வீச்சாளர் ஒரு பேட்ஸ்மேனின் நிலைத்து நின்று ஆடும் அலைவரிசையை (rhythm) சீர்குலைக்க, நீளத்தில் மாறுபாடுகளைப் பயன்படுத்தலாம். ஒரு வழக்கமான வரிசை என்பது, பேட்ஸ்மேனைப் பின்காலில் விளையாட வைக்க, தொடர்ந்து ஷார்ட் பிட்ச் பந்துகளை வீசுவது. இது பந்தை அடிக்க அதிகநேரம் அனுமதிக்கும். அதைத் தொடர்ந்து பேட்ஸ்மேனின் கால்களுக்கு அருகில் ஃபுல் லெங்த்தில் பந்துகள் வீசப்படும் பொழுது, அந்த வேகத்திற்குத் தயாராக இல்லாமல் பேட்ஸ்மேன் தவறான அல்லது சரியான டைமிங் இல்லாத ஷாட்கள் அடிக்க வாய்ப்பு உண்டு. மேலும் தாமதமாக பேட்டுக்கு வருவதால், பந்து பேட்டில் படாமல், கால் அல்லது ஸ்டெம்ப்பில் பட்டு விக்கெட் விழவும் வாய்ப்பு உள்ளது.

லெங்த்தில் பயன்படுத்தப்படும் அடுத்த தந்திரம், பந்தை ஷார்ட்டாக வீசி பேட்ஸ்மேனின் தலை உயரத்தில் செல்லவைப்பது. இதை அடிப்பது எளிது கிடையாது. அதேநேரம் இந்தப் பந்துகள் பேட்ஸ்மேனை மனதளவில் தாக்கி அடுத்த இரண்டு பந்துகள் எப்படி வரும் என்ற ஒரு சந்தேகத்தை எழுப்பும்.



அடுத்து **யார்க்கர் லெங்த்** என்பது சரியாகக் கணித்து பேட்ஸ்மேனின் காலில் வீசப்படும் பந்து. இந்தப் பந்துகளை பின்வரிசை பேட்ஸ்மேன்கள் கணித்து ஆடுவது சிரமம். டி20 வருகைக்குப்பிறகு அதிகம் கேட்கப்பட்ட ஒரு சொல்லாடல், ஸ்லாட்டில் **(slot)** வீசப்பட்ட பந்து என்பது தான். ஆமாம், பேட்ஸ்மேன் அடிப்பதற்கு வாகுவாக வீசப்படும் பந்தை அவ்வாறு குறிப்பிடுவார்கள். ஸ்டம்ப்பில் இருந்து 2-4 மீட்டர் இடைவெளியில் வீசப்படும் பந்துகள் பேட்ஸ்மேன் எளிதாகத் தூக்கி அடிக்க இயலும். அந்தப் பந்துகளைத் தான் இவ்வாறு குறிப்பிடுவர்.

மேற்கூறியவை அனைத்துமே கிரிக்கெட்டில் பந்துவீச்சின் அடிப்படைகள் தான். ஆனால் இதை, களத்தில் அந்த சூழலுக்கு ஏற்றவாறு தந்திரமாக மாற்றிமாற்றிப் பந்துவீசி பேட்ஸ்மேன்கள் கணிக்க இயலாத வகையில் செயல்படும் பந்துவீச்சாளர்களே சிறப்பான பந்துவீச்சாளர்களாக செயல்பட முடியும். வேகத்தைத் தாண்டி விவேகத்துடன் செயல்பட வேண்டும்.

<u>மகளிர் உலகக்கோப்பை 2025</u>

- *சு. பழனி செல்வகுமார்*

பாகிஸ்தான்

தகுதிச்சுற்று ஆடி
வந்தோம்
தட்டுத்தடுமாறி
தடம் பதிக்காமல்
வெளியேறி விட்டோம்!!!

பங்களாதேஷ்

இங்கிலாந்து, நியூசிலாந்து
லாந்தல்களுக்கு சற்றே
முட்டுக்கட்டை இட்டோம்!
ஒரு வெற்றி அதுவே
பெரிய ஊக்கம் தருகிறது
நாங்கள் வளர்கிறோம்!!!

நியூசிலாந்து

எங்கள் மனம்போல
விளையாடினோம்
மழையும் விளையாடியது
ஒரு கேள்விக்கு விடை தெரிந்து
தேர்வெழுத வந்த
கூட்டம் நாங்கள்
இன்னும் படிக்க
வேண்டும் நிறைய!!!

இலங்கை

சொந்த ஊரில் போட்டிகள்
மக்களின் ஆதரவோடு!
மழையின் ஆதரவில்லாமல்,
சிலுவைகளை சுமக்கிறோம்
உயிர்த்தெழுதல் ஓர்நாள்
இருக்கும்!!!

இங்கிலாந்து

ஆசிய மண்ணில்
ஆதிக்கம் செய்வது
எங்களுக்குப் புதிதல்ல!
ஆப்பிரிக்கா, காப்
வடிவில் ஆப்படிக்கும்
என்று நாங்கள்
நினைக்கவில்லை!!!

ஆஸ்திரேலியா

எந்த சூழலிலும்

மீண்டு வரும்

வலுமிக்கவர்கள் நாங்கள்!

எங்கள் தொடர் வெற்றிக்கு

முற்றுப்புள்ளி வைத்தது

சாதாரண அணியல்ல

சரித்திரம் படைத்த

அணி என்பது பெருமையே!!!

தென்னாப்பிரிக்கா

ஐசிசி கோப்பை

என்றாலே எங்களுக்கு

ஆகாது என்று

சமன்பாடு உருவாகியுள்ளது

இன்னும் உழைப்போம்

தடைகளை உடைப்போம்

சமன்பாட்டைத் தகர்ப்போம்!!!

இந்தியா

இது 15 பேர் பெற்ற

வெற்றியில்லை

140 கோடி பேர்

உள்ள நாட்டின்

கிரிக்கெட் ரசிகர்களின்

பெருங்கனவு!

கிரிக்கெட்டை நோக்கி

இளம்பெண்கள்

நகர நாங்கள்

போட்ட விதை!!!

போட்டித் துணுக்குகள்

பாகிஸ்தான் - இலங்கை ஒருநாள் தொடர்

- ✓ பாகிஸ்தான் மூன்று போட்டிகளிலும் வென்று தொடரை வெள்ளை அடித்தது.
- ✓ முதல் போட்டியில் தனது இரண்டாவது ஒருநாள் போட்டி சதத்தை (105*) அடித்தார் சல்மான் அகா. ஆட்டநாயகனும் அவரே.

- ✓ ஹூசைன் தாலட் தனது முதல் ஒருநாள் போட்டி அரைசதத்தை (62) அடித்தார். இதுதான் இவரது அதிகபட்ச ரன் ஒருநாள் போட்டிகளில். சல்மான் அகா - ஹூசைன் தாலட் இணை தான் சரிவில் இருந்து மீட்டது.
- ✓ வானிந்து ஹசரங்க அரைசதம் அடித்தார். ஆனால் கூட யாரும் உதவாததால் பாகிஸ்தான் 6 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.
- ✓ முதல்போட்டியில் இலங்கை அணியில் கமில் மிஸார அறிமுகமானார்.
- ✓ முதல்போட்டியில் இலங்கை 24 உதிரிகள் வழங்க, பழிக்குப்பழியாக பாகிஸ்தான் 31 உதிரிகளை வழங்கியது.

- ✓ முதல்போட்டியில் பந்துவீச நேரம் அதிகம் எடுத்ததால் பாகிஸ்தான் அணிக்கு 20% அபராதம் விதிக்கப்பட்டது.
- ✓ இரண்டாம் போட்டியில் பாகிஸ்தான் கேப்டன் ஷாகின் அப்ரிடி களமிறங்கவில்லை. பொறுப்புக் கேப்டனாக சல்மான் அகா செயல்பட்டார்.
- ✓ இரண்டாவது போட்டியில் ஜனித் லியனாகே அரைசதம் (54) அடித்தார். இது அவரது 7வது அரைசதம்.
- ✓ அப்ரார் அகமது, ஹாரிஸ் ராஃப் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.
- ✓ பாபர் அசாம் தனது 20வது சதத்தை அடித்தார். 20 சதங்கள் அடித்த பாகிஸ்தான் வீரர் என்ற பெருமையை சயீத் அன்வரோடு பகிர்ந்துகொண்டார்.
- ✓ பாபர் 83 இன்னிங்ஸ்கள், 807 நாட்களுக்குப் பிறகு சதமடித்தார்.

- ✓ பக்கர் ஸமான் (78) மற்றும் முஹம்மது ரிஸ்வான் (51*) தங்களது 18வது அரைசதத்தை அடித்தனர்.
- ✓ இரண்டாம் போட்டியில் உதிரிகளில் வென்றது இலங்கை. பாகிஸ்தான் வழங்கிய உதிரிகள் 23, இலங்கை வழங்கிய உதிரிகள் 25.

- ✓ இலங்கை அணியின் கேப்டன் அசலங்க 2வது போட்டியில் காயமடைந்ததால் 3வது போட்டியில் பொறுப்புக் கேப்டனாக குஷால் மெண்டிஸ் செயல்பட்டார்.
- ✓ 3வது போட்டியில் இலங்கை அணியில் பவன் ரத்னாயகே அறிமுகமானார்.
- ✓ 3வது போட்டியில் பாகிஸ்தான் அணியின் விக்கெட் கீப்பராக ஹசிபுல்லா கான் செயல்பட்டார்.
- ✓ முகமது வாசிம் 3 விக்கெட்டுகளையும், பைசல் அக்ரம் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.
- ✓ பக்கர் ஸமான் (55) மற்றும் முஹம்மது ரிஸ்வான் (61*) தங்களது 19வது அரைசதத்தை அடித்தனர்.
- ✓ இலங்கையின் சுழற்பந்து வீச்சாளர் ஜெப்ரி வாண்டர்சே 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.
- ✓ இலங்கை அணியின் சதீர சமரவிக்ரம 39, 42, & 48 ரன்கள் அடித்தார். இந்தத் தொடரில் நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்திய இலங்கை வீரர் சதீர தான்.

25 வது இதழ்

சகோதரக் கிரிக்கெட்

ஷான் மார்ஷ் **மிட்செல் மார்ஷ்**

இடதுகை பேட்டர்	**பேட்டிங்**	வலதுகை பேட்டர்
-	**பந்துவீச்சு**	வலதுகை மித வேகப்பந்து
126	**போட்டிகள்**	226
5293	**ரன்கள்**	7264
-	**விக்கெட்டுகள்**	125
48	**கேட்ச்கள்**	100
டெஸ்ட் போட்டிகளுக்கான பச்சை நிற தொப்பியை தனது தந்தையிடம் இருந்து பெற்றவர். அறிமுகப் டெஸ்ட் போட்டியிலே சதமடித்தவர்	**சிறப்பு**	உலகக்கோப்பை 2015ல் இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.
		தற்போதைய ஆஸ்திரேலிய அணியின் (வெள்ளைப் பந்து) கேப்டன்.

இவர்களது தந்தை ஜெஃப் மார்ஷ் சர்வதேசக் கிரிக்கெட் வீரர். ஆஸ்திரேலிய அணிக்காக 50 டெஸ்ட் மற்றும் 117 ஒருநாள் போட்டிகளில் ஆடியுள்ளார். இவர்களது சகோதரி மெல்லிஸா மார்ஷ் கூடைப்பந்து வீராங்கனை.

கிரிக்கெட் சர்ச்சை

ஜஸ்டின் லேங்கர் பேட்டில் பட்டு கீப்பருக்கு சென்ற பந்துக்கு, அம்பயர் பீட்டர் பார்கர் அவுட் கொடுக்கவில்லை.

நடந்தது என்ன?:

பாகிஸ்தான் அணி வாசிம் அக்ரம் தலைமையில் 1999-2000ல் ஆஸ்திரேலியா சுற்றுப்பயணம் மேற்கொண்டது. அதில் 2வது டெஸ்ட் ஹோபர்ட்டில் நடைபெற்றது. ஆஸ்திரேலிய அணிக்கு பாகிஸ்தான் 369 ரன்களை இலக்காக நிர்ணயித்தது. 5 விக்கெட்டுகளை 4ம் நாளில் இழந்தது ஆஸ்திரேலியா.

5ம் நாளில் ஜஸ்டின் லாங்கர் - ஆடம் கில்கிறிஸ்ட் இணை ஆடியது. ஆஸ்திரேலிய அணியின் ஸ்கோர் 236 ஆக இருந்த போது, வாசிம் அக்ரம் வீசிய பந்து லாங்கரின் பேட்டில் உரசி கீப்பர் மொயின்கானிடம் தஞ்சம் புகுந்தது.

பாகிஸ்தான் அணியினர் மகிழ்ச்சியில் திளைக்க, அம்பயர் பீட்டர் பார்கர் விரலை உயர்த்த மறுத்துவிட்டார். 76 ரன்களில் இருந்த லேங்கர் 127 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அப்போது ஆஸியின் ஸ்கோர் 364.

அம்பயர் செய்தது என்ன?: முன்னதாக முதல் இன்னிங்சில் லேங்கர் பேடில் பட்டுச் சென்ற பந்திற்கு அவுட் கொடுத்துள்ளார் பீட்டர். அதற்குப் பிறகு பீட்டர், லாங்கரிடம் மன்னிப்பு கோரியுள்ளார். அதற்கு பிராயச்சித்தமாக அவுட் கொடுக்காமல் இருந்தாரா? இல்லை ஆஸ்திரேலியா வெல்ல வேண்டும் என்று அவுட் கொடுக்கவில்லையா? என்று தெரியவில்லை. பீட்டர் பார்கர் ஆஸ்திரேலியர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜஸ்டின் லேங்கர் போட்டி முடிந்தபிறகு அந்தப் பந்து தனது பேட்டில் பட்டதை ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால் அம்பயர் அவுட் கொடுக்கவில்லை என்று போட்டியில் தொடர்ந்துள்ளார்.

ஆசிய அணி ஆஸ்திரேலியாவில் டெஸ்ட் வெற்றி பெறுவது சாதாரண விசயமல்ல. அம்பயரின் தவறான முடிவு ஒரு வெற்றியைத் தடுத்துள்ளது.

டக்வொர்த் லூயிஸ் மற்றும் ஜெயதேவன் ஒரு பார்வை

டிஎல்எஸ் முறை

கிரிக்கெட்டில் மழையால் அல்லது பிற காரணங்களால் ஓவர்கள் குறைக்கப்படும்போது அதை சரிகட்டும் விதமாக ரன்களில் மாற்றம் செய்யப்படும். அதற்கு ஆவரேஜ் ரன்ரேட் முறை மற்றும் புரோக்டிவ் ரன்ரேட் முறைகள் இருந்தன. இதில் பெரிய அளவில் பிரச்சினைகள் இருந்ததால் உருவானது தான் டக்வொர்த் லூயிஸ் முறை.

இங்கிலாந்தின் புள்ளியியல் நிபுணர்கள் பிராங்க் டக்வொர்த் மற்றும் டோனி லூயிஸ் கண்டுபிடித்த கணித அடிப்படையிலான முறை தான் டக்வொர்த் லூயிஸ் முறை. ஐசிசி 1997ல் முதல்முறையாகப் பயன்படுத்தியது. 1999 முதல் இந்த முறையைத் தொடர்ந்து பின்பற்றுகிறது.

டக்வொர்த் மற்றும் லூயிஸ் ஓய்வுக்குப் பிறகு ஆஸ்திரேலிய புள்ளியியல் நிபுணர் ஸ்டீவன் ஸ்டர்ன் இந்த முறையைக் கைப்பற்றி தேவையான மாற்றங்கள், பதிலீடுகள் செய்துவருவதால் இப்போது டிஎல்எஸ் (DLS) முறை என்று அழைக்கப்படுகிறது.



டிஎல்எஸ் முறை முழுக்கமுழுக்கக் கணிதம் சார்ந்த முறையாகும். 50 ஓவர்கள் மற்றும் 10 விக்கெட்டுகள் இருந்தால் 100% ரன்கள் அடிக்க வேண்டும் என்ற அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. விக்கெட்டுகள் விழ விழப் பெரிய அளவில் மாறும். டிஎல்எஸ்ஸின் சாராம்சம் முதலில் மெதுவாக ஆடுவார்கள், இறுதிக்கட்ட ஓவரில் ரன்குவிப்பு மிகமிக அதிகமாக இருக்கும் என்ற அடிப்படையில்.

டிஎல்எஸ் முறையில் விக்கெட் இழந்தால் தேவைப்படும் ரன்கள் அதிகமாவது குறித்து எதிர்ப்புக் குரல்கள் எழுந்ததுள்ளன.

ஜெயதேவன் முறை

ஜெயதேவன், ஒரு இந்தியப் பொறியாளர் ஆவார். இவரும் ஓவர்கள் குறைக்கப்படும் போட்டிகளுக்கு ஒரு கணிதக் கணக்கீட்டு முறையைக் கண்டறிந்துள்ளார்.

ஜெயதேவன் முறை விஜெடி முறை என்று அழைக்கப்படுகிறது. ஜெயதேவன் முறையில் டிஎல்எஸ் முறை போல் ஒற்றைக் கோட்டுரு இல்லாமல் இரட்டைக் கோட்டுரு பயன்படுத்தப்படுகிறது. கோட்டுருவில் ஓவர்கள் மற்றும் ரன்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. ஒரு முதல் கோட்டுரு சாதாரணமாக ரன்குவிக்கும் வண்ணமும், 2ம் கோட்டுரு மழை பெய்தால் வேகமாக அடிக்கும் தன்மையுடைய கோட்டுரு. இந்த கோட்டுருக்கான விளக்கம் கீழே.

ஜெயதேவன் முறையில் முதல் 5 ஓவர்கள் பேட்டர்கள் செட் ஆக, 6-15 ஓவர்கள் பீல்டிங் கட்டுப்பாட்டைப் பயன்படுத்தி ரன்குவித்தல், 16 -25 ஓவர்கள் நிலைநிறுத்தும் ஆட்டம் I, 26- 30 ஓவர்கள் நிலைநிறுத்தும் ஆட்டம் II, 31-40 ஓவர்கள் வேகம் அதிகரிக்கத் தொடங்குதல், 41-45 ஓவர்கள் இரண்டாம் கட்ட வேகம் அதிகரித்தல் ஆட்டம், 46-50 ஓவர்கள் இறுதிக்கட்ட அதிரடி என்று எடுத்துக் கொள்ளப்படுகிறது.

ஜெயதேவன் முறையில் விக்கெட்டுகள் பற்றிய கவலை இல்லை. ஆனால் இதுவும் கணித முறையிலானது. கேரளா கிரிக்கெட் லீக்கில் ஜெயதேவன் முறை பின்பற்றப்படுகிறது.

டெஸ்ட் சாம்பியன்ஷிப் (2025-2027) புள்ளிப் பட்டியல்							
இடம்	அணிகள்	போட்டி	வெற்றி	தோல்வி	டிரா	புள்ளி	%
1	ஆஸ்திரேலியா	4	4	0	0	48	100.00
2	தென் ஆப்பிரிக்கா	4	3	1	0	36	75.00
3	இலங்கை	2	1	0	1	16	66.67
4	பாகிஸ்தான்	2	1	1	0	12	50.00
5	இந்தியா	9	4	4	1	52	48.15
6	இங்கிலாந்து	6	2	3	1	26	36.11
7	பங்களாதேஷ்	2	0	1	1	4	16.67
8	வெஸ்ட் இண்டீஸ்	5	0	5	0	0	0.00
-	நியூஸிலாந்து	-	-	-	-	-	-

**இந்தியாவுடனான போட்டியில் பந்து வீச அதிக நேரம் எடுத்ததால் இங்கிலாந்து அணி இரண்டு புள்ளிகளை இழந்தது.

துடுப்பாட்டம்

யார்க்கர்

சிறுகதை

- சு. பழனி செல்வகுமார்

வெற்றி பெற 3 ரன்களே தேவை, எதிரணிக்கு நான்கு விக்கெட்டுகள் மீதமிருக்கிறது. எளிதாக வென்றுவிடுவார்கள் என்பதால் கார்த்திக்கிற்கு பந்துவீச அழைப்பு வந்தது. கல்லூரியில் சேர்ந்தபிறகு கடந்த பத்து நாட்களாகக் கிரிக்கெட் விளையாடினாலும் இன்றுதான் பந்துவீச வாய்ப்பு கிடைத்துள்ளது கார்த்திக்கிற்கு. சுழற்பந்து வீச்சாளருக்கான குறுகிய ரன்அப் பொசிசனில் நின்றான் கார்த்திக்.

கார்த்திக் ஒரு கிராமத்தில் பிறந்தவன். சிறிதளவு இடம் இருந்தாலே கிரிக்கெட் விளையாடலாம். ஆனால் கார்த்திக் ஊரில் அதற்கு வாய்ப்பு குறைவு. தரிசுநிலத்தில் முட்புதர்கள் நிறைந்திருக்கும் அது அவர்களின் விறகுக்கான ஆதாரம். பேருந்து நிலையத்தில் வெட்டவெளி உண்டு. நான்கு முறை மட்டுமே பேருந்து வந்து திரும்பி செல்லும் இடம் தான் பேருந்து நிலையம். அங்கே சீட்டு விளையாடலாம், வயதானவர்கள் தூங்கலாம், இரவில் மது அருந்தலாம், தங்கல்பேருந்து ஓட்டுநர், நடத்துநர் குளிக்கலாம், மாடு சாணி போடலாம். ஆனால் கிரிக்கெட் விளையாடினால் யாருக்காவது அடிபட வாய்ப்பு உள்ளதால் கிரிக்கெட் விளையாட அனுமதி இல்லை.



கிரிக்கெட் விளையாட ஒரே இடம் வற்றிய குளம் தான். வருடத்தில் 4 - 5 மாதங்கள் மட்டுமே குளத்தில் தண்ணீர் இருக்கும். மற்ற மாதங்களில் மைதானமாக செயல்படும்.

மைதானம் இருந்தாலும் ஒரே நேரத்தில் விளையாட 22 பேர் கிடைப்பதில்லை. 10 - 12 பேர் கிடைப்பதால் லெக் சைட் மட்டுமே வைத்து விளையாடுவார்கள். அதில் ஆறு - ஏழு பேர் மட்டுமே சிறப்பாக விளையாடுபவர்கள். கார்த்திக் மிகக்குறைந்த ரன்அப்பில் நல்லவேகத்தில் பந்துவீசக்கூடியவன். குறிப்பாக யார்க்கர் நன்றாகப் போடுவான். அவர்கள் ஊரில் ‘காலுக்குள்ள எறக்கு மாப்ள’ என்றே சொல்வார்கள்.

கார்த்திக் பேட்டிங்கும் சிறப்பாக செய்வான். இடுப்புக்கு மேலே, கழுத்துக்குக் கீழே வரும் பந்துகளை எவ்வளவு தூரத்திற்கு வேண்டுமானாலும் துரத்துவான். ஆனால் ஆஃப் சைடில் அடிக்க வராது. முட்டிக்குக் கீழே வரும் பந்துகளில் சிரமப்படுவான்.

எந்த ஊருக்குப்போய் விளையாண்டாலும் கார்த்திக்கின் பேட்டிங் மற்றும் பந்துவீச்சு களைகட்டும். ஆனாலும் அவர்கள் அணி பெரிய அளவில் வெற்றி பெறுவது இல்லை. ஏழெட்டு பேர் மட்டுமே விளையாண்டால் எப்படி வெற்றி பெறுவது.

கல்லூரி சென்றபின் ஆர்வமாகக் கிரிக்கெட் விளையாட களமிறங்கினான் கார்த்திக். ஸ்டம்புக்கு பின்னே சுவர் உண்டு, இடையில் கீப்பர் நிற்பான். ஆஃப் சைட், லெக் சைட் இருபக்கமும் உண்டு. கார்த்திக் தமிழ்வழி பயின்றவன் என்பதால் கல்லூரியில் எல்லா விசயத்திலும் தயங்கியே இருந்தான்.

கடந்த பத்து நாட்களாகக் கிரிக்கெட் விளையாடினாலும் கார்த்திக் ஒரு முறை மட்டுமே பேட்டிங் செய்தான். அதிலும் ஆஃப் சைட் வந்த பந்தை ஆட முடியாததால் அவனுக்கு பேட்டிங்கே வராது என முடிவு செய்து கடைசிப் பந்தில் சிங்கிள் எடுத்து, கார்த்திக்கை எதிர் முனையில் நிறுத்தினர்.

இப்போது பந்துவீச வாய்ப்பு. எதிரணி வெற்றிபெற 3 ரன்கள் தேவை. சுழற்பந்துவீச்சாளருக்கே உரித்தான குறைந்த ரன்அப்பில் நின்றான். ரன்அப் தூரத்தைக் கண்களாலே அளந்து கொள்வான் கார்த்திக். சிறு கல், ஒரு புல் அவன் ரன்அப் மார்க்கிங்காகக் கண்களால் அமைத்துக் கொள்வான்.

முதல்பந்தை வீசினான் கார்த்திக், பேட்ஸ்மேன் அந்த வேகத்தை எதிர்பார்க்கவில்லை. காற்றைக் கிழித்தது பேட், பந்தை நெருங்கவே இல்லை. கீப்பரும் அந்த வேகத்தை எதிர்பார்க்காமல் கையை உதறினான். அடுத்த பந்தை கார்த்திக் அவனது சிறப்பான யார்க்கராக வீசி ஸ்டம்பைப் பதம் பார்த்தான். அடுத்த பந்தில் கீப்பரிடம் ரகசியமாக சொல்லிவிட்டு வைடு போட்டான். பேட்ஸ்மேன் யார்க்கரை எதிர்பார்த்து வெளியே வந்து ஸ்டம்பிங் ஆனார். அந்த ஓவரில் கார்த்திக் வேகத்தால் ரன்கள் வரவில்லை. அடுத்த ஓவரில் எதிரணி வென்றது. ஆனால் இரட்டை விக்கெட் மெய்டன் வீசி கார்த்திக் பேசுபொருள் ஆனான்.

அதற்குப்பிறகு கார்த்திக்கிற்கு பேட்டிங்கும் கிடைத்தது. ஷார்ட் பால்களை பறக்கவிட்டான். இதை எல்லாம் கவனித்த தினேஷ், கார்த்திக்கிடம் பேசினான்.

மாப்ள, நீ நல்லா சிக்ஸ் அடிக்கிற, பவுலிங்கும் நல்லா போடுற என்றான் தினேஷ்.

முதல் சந்திப்பில் முதல் பேச்சில் மாப்ள என்றது கார்த்திக்கைக் கவர்ந்தது. தேங்க்ஸ் மாப்ள, நீ ஏன் கிரிக்கெட் விளையாட வர்றதில்லை எனக் கேட்டான் கார்த்திக்.

பூரா இங்கிலீஷ் மீடியம் படிச்ச பயலுக, ஓவரா சீன் போடுறானுக, அதுதான் எனக்கு செட் ஆகல என்றான் தினேஷ்.

நானும் தமிழ் மீடியம் தான். ஹைட்ரஜனுக்கு ஸ்பெல்லிங் தெரியலைன்னு பார்த்து எழுதினா சிரிக்கிறானுக. "தொட்டனைத் தூறும் மணற்கேணி" எழுதத் தெரியுமான்னு கேட்டா முறைக்கிறானுக என்றான் கார்த்திக். இருவரும் சிரித்தனர்.

மாப்ள, உன் பலவீனம் என்ன தெரியுமா? ஆஃப் சைட்ல அடிக்க வரல. முட்டிக்காலுக்குக் கீழ லோவா வந்தா சிரமப்படுற என்றான் தினேஷ்.

எப்படி மாப்ள கரெக்டா சொல்ற என்று வியந்து கேட்டான் கார்த்திக். நான்தான் நீ ஆடுறதத் தினமும் பார்க்கிறேனே....

சரி உனக்கு எப்படி ஆடுறதுன்னு சனி, ஞாயிறுல சொல்லித் தர்றேன். அவனுககிட்ட ரெண்டு பந்தையும், நீ சொந்தமா நாலு பந்தும் வாங்கி வை என்றான் தினேஷ்.

சனிக்கிழமை வந்தது. யாருமில்லா மைதானத்திற்குத் தினேஷ் மற்றும் கார்த்திக் வந்தனர். மாப்ள நல்ல பேட்ஸ்மேனுக்கு ஃபுட்வொர்க் ரொம்ப முக்கியம். நீ முன்னங்கால நகர்த்துற அளவுக்குப் பின்னங்கால நகர்த்துறது இல்ல. நல்ல பேட்ஸ்மேனுக்குக் கவர் டிரைவ் அழகா அமையும். நான் ஆஃப்சைடில் போடுறேன், நீ அடி. ஆறு பந்தையும் அடிச்சபிறகு ரெண்டு பேரும் போய் எடுத்துட்டு வருவோம் என்று பக்கத்தில் நின்று வாகாகத் தூக்கிப் போட்டு அடிக்க சொன்னான்.

கார்த்திக்கிற்கு மடக்கி லெக் சைடில் அடிக்கவே வந்தது. ரொம்ப நேரத்திற்குப் பிறகே ஓரளவுக்கு பிடிகிடைத்தது. மாப்ள, திங்கள்கிழமை நீயும் கிரிக்கெட் ஆட வா என்றான் கார்த்திக். மாப்ள, சச்சின் டெண்டுல்கருக்கு பேட்டிங் நல்லா வரும். ஆனா கேப்டன்சி சரியா வராது. அது மாதிரிதான் நானும், எனக்குக் கிரிக்கெட் பத்தி பேச வரும், ஆனா விளையாட வராது என்றான் தினேஷ்.

நீ அடிக்கடி சிக்ஸ் அடி, அதுவும் சீனியர்கள் கண்ணில் படுற மாதிரி. நான் உனக்கு சீனியர்கள் கிட்ட பேசி மேட்ச்ல விளையாட ஏற்பாடு பண்றேன் என்றான்.

உங்க அண்ணன் சீனியரா? ரொம்ப ஆர்வமாகக் கேட்டான் கார்த்திக். நானே சீனியர் தான்டா, இம்ப்ரூவ்மென்ட் எழுதி வந்தேன். என் ப்ரெண்ட் காலேஜ் டீம்ல இருக்கான் என்றான் தினேஷ்.

கார்த்திக் எதுவும் பேசவில்லை. அதற்குப் பிறகு படிப்படியாக முன்னேறி கார்த்திக் கல்லூரி அணியில் ஒரு நட்சத்திர ஆட்டக்காரர்.

அலுவலகத்தில் சேர்ந்த பிறகு ஆண்டிற்கு ஒருமுறை கிரிக்கெட் போட்டி நடக்கும். கார்த்திக் ஆடிய முதல் போட்டியிலே பேட்டிங், பவுலிங் கிடைத்தது. அந்தப் போட்டியின் சூப்பர் ஓவரில் பேட்டிங் இறங்கி வெற்றிபெற வைத்தான்.

பிறகு ஒரு அணியைத் திரட்டி, மைதானங்களை மணிக்கணக்கில் வாடகைக்கு எடுத்து வாராவாரம் கிரிக்கெட் விளையாடினார்கள்.

இப்போது கார்த்திக் கிரிக்கெட் ஆடி பல வருடங்கள் ஆகிவிட்டது. கார்த்திக் தனது மகனைக் கிரிக்கெட் அகாடமியில் பயிற்சிக்கு சேர்த்துள்ளான். பயிற்சி மாணவர்களின் பெற்றோர்கள் ஆடும் டென்னிஸ்பால் போட்டி நடக்கிறது. கார்த்திக்கும் ஒரு அணியில் மகனுக்காக.

எதிரணி பேட்டிங் செய்தது. ஒரு பேட்டர் தொடர்ந்து விளையாடி வருவார் போல, அதிரடியாக ஆடினார். ஓடும்போது மட்டுமே சிரமப்பட்டார். பவர்ப்ளே முடிந்தபிறகு கார்த்திக்கைப் பந்துவீச அழைத்தான் கேப்டன். இவர் ஒருத்தர அவுட் ஆக்கினா வெற்றிபெறலாம். நீங்க போட்டுப் பாருங்க என்றான், நம்பிக்கை இல்லாத வார்த்தைகள் அவை.

கார்த்திக் சுழற்பந்து வீச்சாளருக்கே உரித்தான குறுகிய ரன்அப் எடுத்து வீசினான். பார்வையாளராக கார்த்திக் மகன் ஆர்ப்பரித்தான். சரியான யார்க்கர் ஸ்டம்பைப் பிடுங்கி எறிந்தது.

ஹால் சோஃபாவில் உட்கார்ந்திருந்த கார்த்திக்கிடம் மகன் கேட்டான், நீங்கதான் நல்லா விளையாடுறீங்களே டாடி, ஏன் நீங்க லீக் எண்ட்ல விளையாடக்கூடாது.

கல்யாணம் ஆகிட்டா ஆண்கள் கிரிக்கெட் விளையாடப் போகக்கூடாதுடா என்றான் கார்த்திக். பெட்ரூமில் இருந்து வந்த குரலுக்குக் கார்த்திக் சொன்ன பதில் உங்கள் யூகம் சரியே " பேசிட்டு இருக்கேன்மா"

****

ஷார்ட்ஸ்

டெஸ்டில் அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய பங்களாதேஷ் பந்து வீச்சாளர் என்ற சாதனையை ஷகீப் அல் ஹசனிடம் இருந்து பறித்தார் தைஜுல் இஸ்லாம்.

அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவர்கள்

தைஜுல் இஸ்லாம் - 250

ஷகீப் அல் ஹசன் - 246

மெகிதி ஹசன் மிராஸ் - 210

முகமது ரபீக் - 100

முஸ்ரபி மோர்டாஸா - 78

சாதித்துக் காட்டிய பெண்கள்

- முனைவர் ப. மணிகண்டன் (@NAPA_Manikandan)

உலகம் தொடங்கிய காலத்திலிருந்து இன்றுவரை பெண்கள் என்றால் அவர்களுக்கு எதுவும் தெரியாது, அவர்களால் எதுவும் செய்ய முடியாது, அவர்கள் வலிமையற்றவர்கள் இப்படி எண்ணற்ற வசைச்சொற்கள் அவர்கள் மீது விழுந்துகொண்டேயிருக்கிறது. இப்படிப்பட்ட வசைச்சொற்கள் அனைத்தையும் கடந்து எங்களால் முடியும், நாங்கள் வெல்வோம், நாங்கள் வென்றெடுப்போம், நாங்கள் சாதிப்போம் என்று இந்த உலகிற்கு உரக்கச் சொன்னது நடந்து முடிந்த பெண்கள் உலகக் கோப்பை மட்டைப்பந்து விளையாட்டு.

உலகத்தில் உள்ள எல்லோருமே உற்றுநோக்கிக் கொண்டிருந்தனர். ஆஸ்திரேலியாவை வீழ்த்திய இந்திய அணி, இறுதி ஆட்டத்தில் தென்ஆப்பிரிக்கா அணியை வீழ்த்திவிடும் என்று கணித்திருந்தனர். அதுபோலவே தென்னாப்பிரிக்க மகளிர் மட்டைப்பந்து அணியை இந்திய மகளிர் மட்டைப்பந்து அணி வீழ்த்தி உலகக் கோப்பையைத் தன்வசப்படுத்தியது.

ஒட்டுமொத்த உலகமும், ஒட்டுமொத்த இந்திய தேசமும் கொண்டாடித் தீர்த்தது. இன்றைக்கு நாமெல்லாம் அறிவியல் தொழில்நுட்பத்திலும்,

தொழில்நுட்பத் துறையிலும், செயற்கை நுண்ணறிவுத் துறையிலும் வளர்ந்தும் உயர்ந்தும் நிற்கின்றோம். இந்தத் தருணங்களில் பெண்களுடைய முன்னேற்றம் என்பதும் பன்மடங்கு உயர்ந்து நிற்கிறது. அவர்கள் இல்லாத துறைகளே இல்லை. பெண்களுடைய வளர்ச்சி தான் ஒட்டுமொத்த தேசத்தின் வளர்ச்சி. பெண்களே! கல்வியை கற்றுக் கொள்ளுங்கள். உலகெங்கும் உங்களுடைய பங்களிப்பையும் எல்லா மக்களுக்கும் வழங்குங்கள்.

வளரும் பெண்களுக்கும், வளர்ந்துவிட்ட பெண்களுக்கும், வளரப்போகும் பெண்களுக்கும் உலகம் உள்ளவரை ஓர் எடுத்துக்காட்டாகவும், தன்னம்பிக்கையாகவும் மகளிர் உலகக்கோப்பை மட்டைப்பந்து போட்டி அமையும். மகளிர் உலகக்கோப்பை மட்டைப்பந்து இறுதிப் போட்டியும், நம்முடைய இந்திய மட்டைப்பந்து மகளிரின் வெற்றியும் சரித்திரப் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்படட்டும். நம்முடைய மகளிர் மட்டைப்பந்து வீராங்கனைகளுக்கு, என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஷார்ட்ஸ்

மகளிர் பார்வைத்திறன் குறைவுற்றோர் டி20 உலகக்கோப்பையை முதல் முறையாக இந்திய அணி வென்றுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் நேபாள் அணி முதலில் பேட்டிங் செய்து 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 114 ரன்கள் எடுத்தது. சேஸ் செய்த இந்தியா, 12 ஓவர்களில் 3 விக்கெட்டுகள் இழப்பிற்கு 117 ரன்கள் எடுத்து கோப்பையை வென்றது.

ஜிம்பாப்வே - ஆப்கானிஸ்தான் டி20 தொடர்

டெஸ்டில் பலமில்லாத அணியுடன் களமிறங்கி பல்பு வாங்கிய ஆப்கானிஸ்தான் டி20 தொடருக்கு முழு பலமிக்க அணியை இறக்கியது. பங்களாதேஷிடம் மூன்று போட்டிகளில் தோற்ற வடுவும் இருந்தது ஆப்கானிஸ்தான் அணியிடம்.

முதல் போட்டியில் ஆப்கானிஸ்தான் முதலில் பேட்டிங் செய்தது. துவக்க வீரர்கள் அதிரடியாக ஆடி முதல் விக்கெட்டிற்கு 74 ரன்கள் சேர்த்தனர். இப்ராஹிம் ஷத்ரான் (52) அரைசதம் அடித்தார். மற்ற வீரர்கள் அளித்த சிறிய பங்களிப்பால் ஆப்கானிஸ்தான் 180 ரன்களை எட்டியது. ஜிம்பாப்வே கேப்டன் சிக்கந்தர் ரஸா சிறப்பாகப் பந்து வீசி 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

சேஸ் செய்த ஜிம்பாப்வே அணியில் யாரும் சொல்லிக்கொள்ளும்படி ஆடவில்லை. பென்னட் வழக்கமான ஆட்டத்தை ஆடினார். இறுதிக்கட்ட வீரர்கள் பிராட் இவான்ஸ் 24 ரன்களும், டினோடென்டா மபோஸா 32 ரன்களும் அடித்தனர். ஜிம்பாப்வே 127 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. முஜீப் உர் ரஹ்மான் 4 விக்கெட்டுகளையும், அஸ்மத்துல்லா ஓமர்சாய் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

2வது போட்டியில் ஜிம்பாப்வே முதலில் பேட்டிங் செய்தது. கேப்டன் சிக்கந்தர் ரஸா மட்டும் போராடி 37 ரன்கள் அடித்தார். ரஷீத்கான் 3 விக்கெட்டுகளையும், முஜீப் & அப்துல்லா அகமதுசாய் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்த ஜிம்பாப்வே 125 ரன்களுக்கு சுருண்டது.

எளிய இலக்கை இப்ராஹிம் ஷத்ரான் மீண்டும் அரைசதம் (57*) அடித்து எட்ட வைத்தார். பிராட் இவான்ஸ் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார். ஆப்கானிஸ்தான் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

தொடரை வென்றதால் 3வது போட்டியில் ரஷீத்கானுக்குப் பதிலாக ஷராபுதீன் அஸ்ரப் மற்றும் ஓமர்சாய்க்குப் பதிலாக பஸல்ஹக் பரூக்கி அணியில் இருந்தனர். முதலில் பேட்டிங் செய்த ஆப்கானிஸ்தான் அணி அதிரடியாக ஆடியது. ரஹ்மானுல்லா குர்பாஸ் 92 ரன்கள் எடுத்தார். பொறுப்புக் கேப்டன் இப்ராஹிம் ஷத்ரான் இந்தப் போட்டியிலும் அரைசதம் (60) அடித்தார். ஆப்கானிஸ்தான் 3 விக்கெட்டுகள் இழப்பிற்கு 210 ரன்கள் எடுத்தது.

பெரிய இலக்கைத் துரத்திய ஜிம்பாப்வே அணியின் துவக்க வீரர் டியான் மேயர்ஸ் துரதிர்ஷ்டவசமாக ரன்அவுட் ஆனார். பென்னட் 47, ரஸா 51, புருல் 37, முஸேகாவா 28 எனப் போராடினர் ஜிம்பாப்வே பேட்டர்கள். தேவையான நேரத்தில் விக்கெட்டுகளை வீழ்த்தியதால் ஆப்கானிஸ்தான் தொடரை முழுமையாக வென்றது. அப்துல்லா அகமதுசாய் 3 விக்கெட்டுகளையும், பரீத் அகமது & பரூக்கி தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

தொடர் நாயகன் - இப்ராஹிம் ஷத்ரான் - 169 ரன்கள்

மகளிர் கிரிக்கெட் போட்டி முடிவுகள்

மகளிர் ஒரு நாள் உலகக் கோப்பை, நவம்பர் 02, நவி மும்பை

இந்தியா - 298/7	**தென் ஆப்பிரிக்கா - 246**

இந்தியா 52 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - ஷபாலி வர்மா - 87 & 2/36

ஐசிசி எமர்ஜிங் டி20 கோப்பை, நவம்பர் 20, பாங்காங்

தாய்லாந்து - 117/7	**நெதர்லாந்து - 94**

தாய்லாந்து 23 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - சுலீபோர்ன் லயோமி - 2/11

ஐசிசி எமர்ஜிங் டி20 கோப்பை, நவம்பர் 20, பாங்காங்

பப்புவா நியூ கினி - 94/5	**எமிரேட்ஸ் - 95/2**

எமிரேட்ஸ் 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - தீர்த்தா சதிஷ் - 45

ஐசிசி எமர்ஜிங் டி20 கோப்பை, நவம்பர் 20, பாங்காங்

நமீபியா - 118/5	**தான்சானியா - 119/2**

தான்சானியா 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - சம் மடே - 55

ஐசிசி எமர்ஜிங் டி20 கோப்பை, நவம்பர் 20, பாங்காங்

ஸ்காட்லாந்து -115/9	**உகாண்டா - 100/6**

ஸ்காட்லாந்து 15 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - டார்சி கார்ட்டர் - 54

ஐசிசி எமர்ஜிங் டி20 கோப்பை, நவம்பர் 21, பாங்காங்

எமிரேட்ஸ் - 93	**நெதர்லாந்து - 94/6**

நெதர்லாந்து 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - ஸ்டெர்ரே காலிஸ் - 40

ஐசிசி எமர்ஜிங் டி20 கோப்பை, நவம்பர் 21, பாங்காங்

பப்புவா நியூ கினி - 92/9	**தாய்லாந்து - 84/8**

பப்புவா நியூ கினி 8 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - பவ்கே சியாகா - 4/12

மகளிர் கிரிக்கெட் போட்டி முடிவுகள்

ஐசிசி எமர்ஜிங் டி20 கோப்பை, நவம்பர் 21, பாங்காங்

நமீபியா - 83/8	**உகாண்டா - 71/7**

நமீபியா 12 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - லே மாரி விஸ்ஸர் - 3/10

ஐசிசி எமர்ஜிங் டி20 கோப்பை, நவம்பர் 21, பாங்காங்

ஸ்காட்லாந்து - 153/5	**தான்சானியா - 148/8**

ஸ்காட்லாந்து 5 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - டார்சி கார்ட்டர் - 76 & 3/23

ஐசிசி எமர்ஜிங் டி20 கோப்பை, நவம்பர் 23, பாங்காங்

தான்சானியா - 62	**நெதர்லாந்து - 63/3**

நெதர்லாந்து 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - ஐரிஷ் ஸ்வில்லிங் - 3/13

ஐசிசி எமர்ஜிங் டி20 கோப்பை, நவம்பர் 23, பாங்காங்

உகாண்டா - 117/4	**பப்புவா நியூ கினி - 113/7**

உகாண்டா 4 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - ஜானெட் பாபாஸி - 60 & 2/21

ஐசிசி எமர்ஜிங் டி20 கோப்பை, நவம்பர் 23, பாங்காங்

எமிரேட்ஸ் - 93/8	**ஸ்காட்லாந்து - 94/0**

ஸ்காட்லாந்து 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - டார்சி கார்ட்டர் - 54

ஐசிசி எமர்ஜிங் டி20 கோப்பை, நவம்பர் 23, பாங்காங்

தாய்லாந்து - 115/6	**நமீபியா - 88/8**

தாய்லாந்து 27 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - சதுரோங்கிராட்டனா - 3/19

ஐசிசி எமர்ஜிங் டி20 கோப்பை, நவம்பர் 25, பாங்காங்

தாய்லாந்து - 110/6	**தான்சானியா - 59**

தாய்லாந்து 51 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - சதுரோங்கிராட்டனா - 3/4

மகளிர் கிரிக்கெட் போட்டி முடிவுகள்

ஐசிசி எமர்ஜிங் டி20 கோப்பை, நவம்பர் 25, பாங்காங்

உகாண்டா - 75/8	**எமிரேட்ஸ் - 76/0**

எமிரேட்ஸ் 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - இஷா ஓஸா - 48 & 1/11

ஐசிசி எமர்ஜிங் டி20 கோப்பை, நவம்பர் 25, பாங்காங்

நமீபியா - 74	**ஸ்காட்லாந்து - 76/3**

ஸ்காட்லாந்து 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - கேத்ரின் பிரேசர் - 3/9

ஐசிசி எமர்ஜிங் டி20 கோப்பை, நவம்பர் 25, பாங்காங்

பப்புவா நியூ கினி - 126/2	**நெதர்லாந்து - 118/9**

பப்புவா நியூ கினி 8 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - ஹெய்னோ தாமஸ் - 3/24

ஐசிசி எமர்ஜிங் டி20 கோப்பை, நவம்பர் 26, பாங்காங்

தான்சானியா - 46	**எமிரேட்ஸ் - 50/3**

எமிரேட்ஸ் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - வைஷ்ணவி மகேஷ் - 3/7

ஐசிசி எமர்ஜிங் டி20 கோப்பை, நவம்பர் 26, பாங்காங்

உகாண்டா - 55	**தாய்லாந்து -58/2**

தாய்லாந்து 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - திப்பாட்சா புத்தவோங் - 5/6

ஐசிசி எமர்ஜிங் டி20 கோப்பை, நவம்பர் 26, பாங்காங்

நெதர்லாந்து - 164/6	**நமீபியா - 113**

நெதர்லாந்து 51 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - பிரெட்ரிக் ஓவர்டிச் - 4/18

ஐசிசி எமர்ஜிங் டி20 கோப்பை, நவம்பர் 26, பாங்காங்

பப்புவா நியூ கினி - 118/8	**ஸ்காட்லாந்து -121/4**

ஸ்காட்லாந்து 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - சோலே ஆபேல் - 5/13

மகளிர் கிரிக்கெட் போட்டி முடிவுகள்

ஐசிசி எமர்ஜிங் டி20 கோப்பை, நவம்பர் 28, பாங்காங்

எமிரேட்ஸ் - 80	**தாய்லாந்து - 73**

எமிரேட்ஸ் 7 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - வைஷ்ணவி மகேஷ் - 4/10

ஐசிசி எமர்ஜிங் டி20 கோப்பை, நவம்பர் 28, பாங்காங்

தான்சானியா - 54	**உகாண்டா - 55/3**

உகாண்டா 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - இமகுலேட் நகிஸ்ஸுயி - 2/12

ஐசிசி எமர்ஜிங் டி20 கோப்பை, நவம்பர் 28, பாங்காங்

பப்புவா நியூ கினி - 94/7	**நமீபியா - 93/7**

பப்புவா நியூ கினி 1 ரன் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - பவ்கே சியாகா -3/15

ஐசிசி எமர்ஜிங் டி20 கோப்பை, நவம்பர் 28, பாங்காங்

நெதர்லாந்து - 148/7	**ஸ்காட்லாந்து - 121/8**

நெதர்லாந்து 27 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - ஸ்டெர்ரே காலிஸ் - 55

ஐசிசி எமர்ஜிங் டி20 கோப்பை, நவம்பர் 30, பாங்காங்

உகாண்டா - 111/6	**நெதர்லாந்து -112/4**

நெதர்லாந்து 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - ரோமின் ரிஜ்கே - 36 & 1/2

ஐசிசி எமர்ஜிங் டி20 கோப்பை, நவம்பர் 30, பாங்காங்

எமிரேட்ஸ் - 153/3	**நமீபியா - 125/7**

எமிரேட்ஸ் 28 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - இஷா ஓஸா - 68 & 2/36

ஐசிசி எமர்ஜிங் டி20 கோப்பை, நவம்பர் 30, பாங்காங்

ஸ்காட்லாந்து - 63	**தாய்லாந்து - 65/7**

தாய்லாந்து 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - திப்பாட்சா புத்தவோங் - 4/17

மகளிர் கிரிக்கெட் போட்டி முடிவுகள்

ஐசிசி எமர்ஜிங் டி20 கோப்பை, நவம்பர் 30, பாங்காங்

பப்புவா நியூ கினி - 100 | **தான்சானியா - 80/8**

பப்புவா நியூ கினி 20 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - ஹெய்னோ தாமஸ் - 47 & 2/15

ஐசிசி மகளிர் கிரிக்கெட்டை மேம்படுத்த எமர்ஜிங் நேசன்ஸ் டி20 தொடரை நடத்தியது. பாங்காங்கில் நடைபெற்ற இந்தத் தொடரில் தாய்லாந்து, எமிரேட்ஸ், பப்புவா நியூ கினி, ஸ்காட்லாந்து, நெதர்லாந்து, உகாண்டா, தான்சானியா, நமீபியா என எட்டு அணிகள் பங்கேற்றன. ஒவ்வொரு அணியும் மற்ற ஏழு அணிகளுடனும் மோதின. இதில் இறுதிப் போட்டி கிடையாது. வெற்றிகள் அடிப்படையில் தாய்லாந்து அணி பட்டம் வென்றது.

அதிக ரன்கள் அடித்த வீராங்கனைகள்	அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வீராங்கனைகள்
டார்சி கார்ட்டர் [ஸ்காட்] - 248	திப்பாட்சா புத்தவோங் [தாய்] - 15
ஸ்டெர்ரே காலிஸ் [நெதர்] - 239	வைஷ்ணவி மகேஷ் [எமி] - 15
இஷா ஓஸா [எமி] - 187	சதுரோங்கிராட்டனா [தாய்] - 14
ப்ரெண்டா டா [தாய்] - 167	பவ்கே சியாகா [பப்பு] - 13
நட்டதகன் சந்தம் [தாய்] - 160	சுலீபோர்ன் லயோமி [தாய்] - 12

பங்களாதேஷ் - அயர்லாந்து டெஸ்ட்

- ✓ முதல் டெஸ்ட் சில்கெட் நகரில் நடைபெற்றது. பங்களாதேஷ் அணியில் ஹசன் முரட், அயர்லாந்து அணியில் காடே கார்மிக்கேல், ஜோர்டன் நீல் ஆகியோர் அறிமுகமானார்கள்.
- ✓ முதலில் பேட்டிங் செய்த அயர்லாந்து அணியின் பால் ஸ்டிர்லிங் (60) மற்றும் காடே கார்மிக்கேல் (59) அரைசதம் அடித்தனர்.
- ✓ அயர்லாந்து அணியின் கேப்டன் ஆன்டி பால்பெர்னி மற்றும் மேத்யூ ஹெம்ப்ரேஸ் டக்அவுட் ஆனார்கள். அயர்லாந்து முதல் இன்னிங்சில் 286 ரன்கள் எடுத்தது.
- ✓ மெஹிதி ஹசன் மிராஸ் 3 விக்கெட்டுகளையும், தைஜுல் இஸ்லாம், ஹசன் மஹ்முத் மற்றும் ஹசன் முரட் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.
- ✓ ஹசன் முரட் தனது முதல் சர்வதேச விக்கெட்டாக கர்டிஸ் கேம்பரை வெளியேற்றினார்.
- ✓ பங்களாதேஷ் 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 587 ரன்கள் எடுத்து முதல் இன்னிங்ஸை டிக்ளேர் செய்தது.

- ✓ துவக்க வீரர் மக்முதுல் ஹசன் ஜாய் டெஸ்ட்போட்டியில் தனது அதிகபட்ச ரன்னைப் (171) பதிவுசெய்தார். கேப்டன் சாண்டோவும் (100) சதமடித்தார்.
- ✓ சத்மன் இஸ்லாம் (82), மோமினுல் ஹக் (80) மற்றும் லிட்டன் தாஸ் (60) அரைசதம் அடித்தனர்.
- ✓ அயர்லாந்து அணியின் இடதுகை சுழற்பந்துவீச்சாளர் மேத்யூ ஹெம்ப்ரேஸ் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். டெஸ்ட் போட்டிகளில் 5 விக்கெட்டுகளை வீழ்த்துவது இரண்டாவது முறையாகும்.

- ✓ அயர்லாந்தின் 2வது இன்னிங்ஸில் ஆல்ரவுண்டர் ஆன்டி மெக்பிரைன் (52) அரைசதம் அடித்தார். அயர்லாந்து 254 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது.
- ✓ பங்களாதேஷ் இன்னிங்ஸ் மற்றும் 47 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது. ஹசன் முரட் 4 விக்கெட்டுகளையும், தைஜுல் இஸ்லாம் 3 விக்கெட்டுகளையும், நாகித் ராணா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகன் - மக்முதுல் ஹசன் ஜாய் - 171

- ✓ மிர்பூரில் நடைபெற்ற 2வது டெஸ்டில் அயர்லாந்து அணியில் கெவின் கோய் மற்றும் ஸ்டீபன் தொகானி அறிமுகமானார்கள்.

- ✓ முதலில் பேட்டிங் செய்த பங்களாதேஷ் 476 ரன்கள் எடுத்தது. 100வது டெஸ்ட் ஆடிய முஸ்பிகூர் ரஹீம் (106) சதமடித்தார். விக்கெட்கீப்பர் லிட்டன் தாஸும் (128) சதமடித்தார்.

- ✓ மோமினுல் ஹக் (63) அரைசதம் அடித்தார். ஆன்டி மெக்பிரைன் 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

- ✓ மேத்யூ ஹெம்ப்ரேஸ் மற்றும் கெவின் கோய் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர். கெவின் கோய் தனது முதல் டெஸ்ட் விக்கெட்டாக மெகிதி ஹசன் மிராஸ் விக்கெட்டை வீழ்த்தினார்.
- ✓ அயர்லாந்து முதல் இன்னிங்சில் 265 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. லோர்கன் டக்கர் (75*) அரைசதம் அடித்தார். ஜோர்டன் நீல் 49 ரன்கள் அடித்தார்.
- ✓ தைஜுல் இஸ்லாம் 4 விக்கெட்டுகளையும், காலேத் அகமது மற்றும் ஹசன் முரட் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.
- ✓ பாலோ ஆன் கொடுக்காமல் பங்களாதேஷ் பேட்டிங் செய்தது. 4 விக்கெட்டுகள் இழப்பிற்கு 297 ரன்கள் எடுத்து டிக்ளேர் செய்தது.
- ✓ மக்முதுல் ஹசன் ஜாய் (60), சத்மன் இஸ்லாம் (78), மோமினுல் ஹக் (87) மற்றும் முஸ்பிகூர் ரஹீம் (53*) அரைசதங்கள் அடித்தனர்.
- ✓ 509 என்ற மாபெரும் இலக்கைத் துரத்திய அயர்லாந்து அணியின் ஹாரி டெக்டார் (50) அரைசதம் அடித்தார்.
- ✓ கர்டிஸ் கேம்பர் (71*) டிராவை நோக்கி நகர்த்தப் போராடினார். ஆனால் தேநீர் இடைவேளைக்கு சற்று முன்பாக அயர்லாந்து ஆல் அவுட் ஆனது. பங்களாதேஷ் 217 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.
- ✓ ஹசன் முரட் மற்றும் தைஜுல் இஸ்லாம் தலா 4 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

ஆட்டநாயகன் - முஸ்பிகூர் ரஹீம் - 106 & 53*

தொடர் நாயகன் - தைஜுல் இஸ்லாம் – 13 விக்கெட்டுகள்

(டி20 தொடர் அடுத்த இதழில்)

*****

ரைசிங் ஸ்டார்ஸ் ஆசியக் கோப்பை

ரைசிங் ஸ்டார்ஸ் ஆசியக் கோப்பை 2025, கத்தார் தலைநகர் தோகாவில் நடைபெற்றது. ஏ பிரிவில் பங்களாதேஷ் ஏ, இலங்கை ஏ, ஆப்கானிஸ்தான் ஏ மற்றும் ஹாங்காங் அணிகளும், பி பிரிவில் பாகிஸ்தான் ஏ, இந்தியா ஏ, ஓமன் மற்றும் எமிரேட்ஸ் அணிகளும் பங்கேற்றன.

ஓமன், எமிரேட்ஸ் மற்றும் ஹாங்காங் பிரதான அணிகளே பங்கேற்றதால் ஓமன் - எமிரேட்ஸ் போட்டி மட்டும் சர்வதேசப் போட்டியாக நடந்தது.

லீக் சுற்றில் எமிரேட்ஸ்க்கு எதிரான போட்டியில் இந்தியா 297 ரன்கள் குவித்தது. வைபவ் சூர்யவன்சி 42 பந்துகளில் 144 ரன்கள் (11x4 15x6) அடித்தார். கேப்டன் ஜித்தேஷ் சர்மா 32 பந்துகளில் 83 ரன்கள் அடித்தார்.

பங்களாதேஷ் ஏ அணிக்கு எதிரான போட்டியில் ஆப்கானிஸ்தான் ஏ அணி 78 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது.

பாகிஸ்தான் ஏ அணிக்கு எதிரான போட்டியில் எமிரேட்ஸ் அணி 59 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது.

ஏ பிரிவில் பங்களாதேஷ் ஏ, ஆப்கானிஸ்தான் ஏ அணியை வென்றது. ஆப்கானிஸ்தான் ஏ, இலங்கை ஏ அணியை வென்றது. இலங்கை ஏ, பங்களாதேஷ் ஏ அணியை வென்றது. நிகர ரன்ரேட் அடிப்படையில் பங்களாதேஷ் ஏ இலங்கை ஏ அணிகள் அரையிறுதிக்கு சென்றன.

பி பிரிவில் பாகிஸ்தான் ஏ மூன்று போட்டிகளிலும் வென்றது. இந்தியா ஏ அணி, பாகிஸ்தான் ஏ அணியிடம் தோற்றது. இவை இரண்டும் அரையிறுதிக்கு சென்றன.

<u>அரையிறுதி 1, நவம்பர் 21</u>

பங்களாதேஷ் ஏ - 194/6

ஹபிபுல் ரஹ்மான் சோகன் - 65

மெஹரூப் - 48

குர்ஜப்நீட் சிங் - 2/39

இந்தியா ஏ - 194/6

வைபவ் சூர்யவன்சி - 38

பிரியான்ஷ் ஆர்யா - 44

ரகிபுல் ஹசன் - 2/39

ஆட்டம் டை ஆனது.

சூப்பர் ஓவரில் கேப்டன் ஜித்தேஷ் மற்றும் அஸுடோஷ் சர்மா முதல் இரண்டு பந்துகளில் அவுட்டாக இந்தியா ரன் எடுக்காமலே சூப்பர் ஓவரை முடித்தது. சூப்பர் ஓவரை சூப்பராக வீசியவர் ரிப்போன் மோன்டல்.

இந்தியா ஏ அணியின் சுயாஷ் சர்மா வீசிய முதல் பந்தில் யாசிர் அலி அவுட்டானார். அடுத்து சுயாஷ் வைடு வீச பங்களாதேஷ் ஏ அணி இறுதிப்போட்டிக்கு சென்றது.

அரையிறுதி 2, நவம்பர் 21

பாகிஸ்தான் ஏ - 153/9

காஸி ஹோரி - 39*

பிரமோத் மதுஷன் - 4/29

ட்ரவீன் மேத்யூ - 3/22

இலங்கை ஏ - 148

மிலன் ரத்னாயகே - 40

சாத் மசூத் - 3/18

சுபியன் முக்கிம் - 3/12

பாகிஸ்தான் ஏ 5 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

ஆட்டநாயகன் - சாத் மசூத் - 22 & 3/18

இறுதிப் போட்டி, நவம்பர் 23

பாகிஸ்தான் ஏ - 125

சாத் மசூத் - 38

ரிப்போன் மோன்டல் - 3/25

ரகிபுல் ஹசன் - 2/16

பங்களாதேஷ் ஏ - 125/9

ஹபிபுல் ரஹ்மான் - 26

ரகிபுல் ஹசன் - 24

சுபியன் முக்கிம் - 3/11

அரபாத் மின்கஸ் - 2/5

அகமது தானியேல் - 2/11

சூப்பர் ஓவரில் பங்களாதேஷ் பேட்டர்கள் தவறான ஷாட் ஆடி அவுட்டானார்கள். அகமது தானியேல் லெக் சைடில் வீசியதில் வைடாக 5 ரன்கள் கிடைத்தது.

7 ரன்களை பாகிஸ்தான் ஏ எளிதாக எட்டி மூன்றாம் முறையாக சாம்பியன் பட்டம் வென்றது.

ஆட்டநாயகன் - அகமது தானியேல் - 2/11

<u>அதிக ரன்கள் அடித்த வீரர்கள்</u>

- ✓ மாஸ் சடாகத் - 258
- ✓ வைபவ் சூர்யவன்சி - 239
- ✓ ஹபிபுல் ரஹ்மான் சோகன் - 228
- ✓ ஜித்தேஷ் சர்மா - 125
- ✓ நாமன் திர் - 106

<u>அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய வீரர்கள்</u>

- ✓ ரிப்போன் மோன்டல் - 11
- ✓ சுபியன் முக்கிம் - 10
- ✓ சாத் மசூத் - 8
- ✓ மாஸ் சடாகத் - 8
- ✓ ட்ரவீன் மேத்யூ - 8

டெஸ்ட் போட்டி முடிவுகள்

பங்களாதேஷ் - அயர்லாந்து முதல் டெஸ்ட், நவம்பர் 11-15, சில்கெட்

அயர்லாந்து - 286	**பங்களாதேஷ் - 587/8 டிக்**
அயர்லாந்து - 254	**பங்களாதேஷ் -**

பங்களாதேஷ் இன்னிங்ஸ் & 47 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - மஹ்முதுல் ஹசன் ஜாய் - 171

இந்தியா -தென்னாப்பிரிக்கா முதல் டெஸ்ட், நவம்பர் 14-18, கொல்கத்தா

தென்னாப்பிரிக்கா - 159	**இந்தியா - 189**
தென்னாப்பிரிக்கா - 189	**இந்தியா - 93**

தென்னாப்பிரிக்கா 30 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - சைமன் ஹார்மெர் - 4/30 & 4/21

பங்களாதேஷ் - அயர்லாந்து 2வது டெஸ்ட், நவம்பர் 19-23, மிர்பூர்

பங்களாதேஷ் - 476	**அயர்லாந்து - 265**
பங்களாதேஷ் - 297/4 டிக்	**அயர்லாந்து - 291**

பங்களாதேஷ் இன்னிங்ஸ் 217 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - முஸ்பிகூர் ரஹீம் - 106 & 53*

ஆஸ்திரேலியா -இங்கிலாந்து, முதல் டெஸ்ட், நவம்பர் 21-25, பெர்த்

இங்கிலாந்து - 172	**ஆஸ்திரேலியா -132**
இங்கிலாந்து - 164	**ஆஸ்திரேலியா - 205/2**

ஆஸ்திரேலியா 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - மிட்செல் ஸ்டார்க் - 7/58 & 3/55

இந்தியா -தென்னாப்பிரிக்கா 2வது டெஸ்ட், நவம்பர் 22-26, குவஹாத்தி

தென்னாப்பிரிக்கா - 489	**இந்தியா - 201**
தென்னாப்பிரிக்கா - 260/5 டிக்	**இந்தியா - 140**

தென்னாப்பிரிக்கா 408 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - மார்கோ யென்சென் - 93, 6/48 & 1/23

ஷார்ட்ஸ்

ஒரு நாள் போட்டிகளில் அதிக சிக்ஸர் அடித்த வீரர் என்ற சாதனையை ரோகித் சர்மா படைத்தார். முந்தைய சாதனையான அப்ரிடியின் 351 ஐ இன்று ரோகித் முறியடித்தார் .

டி20 போட்டி முடிவுகள்*

பாகிஸ்தான் - தென்னாப்பிரிக்கா 3வது டி20, நவம்பர் 01, லாகூர்

தென்னாப்பிரிக்கா - 139/9	**பாகிஸ்தான் - 140/6**

பாகிஸ்தான் 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - பாபர் அசாம் - 68

ஆஸ்திரேலியா - இந்தியா, 3வது டி20, நவம்பர் 02, ஹோபர்ட்

ஆஸ்திரேலியா -186/6	**இந்தியா - 188/5**

இந்தியா 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - அர்ஷ்தீப் சிங் - 3/35

ஜிம்பாப்வே - ஆப்கானிஸ்தான் 3வது டி20, நவம்பர் 02, ஹராரே

ஆப்கானிஸ்தான் - 210/3	**ஜிம்பாப்வே - 201**

ஆப்கானிஸ்தான் 9 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - ரஹ்மானுல்லா குர்பாஸ் - 92

நியூஸிலாந்து - வெஸ்ட் இண்டீஸ் முதல் டி20, நவம்பர் 05, ஆக்லாந்து

வெஸ்ட் இண்டீஸ் - 164/6	**நியூஸிலாந்து - 157/9**

வெஸ்ட் இண்டீஸ் 7 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - ராஸ்டன் சேஸ் - 28 & 3/26

நியூஸிலாந்து - வெஸ்ட் இண்டீஸ் 2வது டி20, நவம்பர் 06, ஆக்லாந்து

நியூஸிலாந்து - 207/5	**வெஸ்ட் இண்டீஸ் - 204/8**

நியூஸிலாந்து 3 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - மார்க் சாப்மேன் - 78 & 3 கேட்ச்

ஆஸ்திரேலியா - இந்தியா, 4வது டி20, நவம்பர் 06, கோல்ட் கோஸ்ட்

இந்தியா - 167/8	**ஆஸ்திரேலியா -119**

இந்தியா 48 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - அக்சர் படேல் - 21* & 2/20

ஆஸ்திரேலியா - இந்தியா, 5வது டி20, நவம்பர் 08, பிரிஸ்பேன்

இந்தியா - 52/0	**ஆஸ்திரேலியா -**

முடிவு இல்லை

டி20 போட்டி முடிவுகள்*

நியூஸிலாந்து - வெஸ்ட் இண்டீஸ் 3வது டி20, நவம்பர் 09, நெல்சன்

நியூஸிலாந்து - 177/9	**வெஸ்ட் இண்டீஸ் - 168**

நியூஸிலாந்து 9 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - இஷ் சோதி - 3/34

நியூஸிலாந்து - வெஸ்ட் இண்டீஸ் 4வது டி20, நவம்பர் 10, நெல்சன்

வெஸ்ட் இண்டீஸ் - 38/1	**நியூஸிலாந்து -**

முடிவு இல்லை

நியூஸிலாந்து - வெஸ்ட் இண்டீஸ் 5வது டி20, நவம்பர் 13, டுனிடின்

வெஸ்ட் இண்டீஸ் - 140	**நியூஸிலாந்து - 141/2**

நியூஸிலாந்து 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - ஜேக்கப் டஃப்பி - 4/35

முத்தரப்பு டி20 தொடர், நவம்பர் 18, ராவல்பிண்டி

ஜிம்பாப்வே - 147/8	**பாகிஸ்தான் - 151/5**

பாகிஸ்தான் 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - முஹமது நவாஸ் - 2/22 & 21*

முத்தரப்பு டி20 தொடர், நவம்பர் 20, ராவல்பிண்டி

ஜிம்பாப்வே - 162/8	**இலங்கை - 95**

ஜிம்பாப்வே 67 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - சிக்கந்தர் ரசா - 47 & 1/23

முத்தரப்பு டி20 தொடர், நவம்பர் 22, ராவல்பிண்டி

இலங்கை - 128/7	**பாகிஸ்தான் - 131/3**

பாகிஸ்தான் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - முஹமது நவாஸ் - 3/16

முத்தரப்பு டி20 தொடர், நவம்பர் 23, ராவல்பிண்டி

பாகிஸ்தான் - 195/5	**ஜிம்பாப்வே - 126**

பாகிஸ்தான் 69 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - உஸ்மான் தாரிக் - 4/18

முத்தரப்பு டி20 தொடர், நவம்பர் 25, ராவல்பிண்டி

ஜிம்பாப்வே - 146/5	**இலங்கை - 148/1**

இலங்கை 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - பதும் நிஸங்க - 98*

டி20 போட்டி முடிவுகள்*

பங்களாதேஷ் - அயர்லாந்து முதல் டி20, நவம்பர் 27, சாட்டோகிராம்

அயர்லாந்து - 181/4	**பங்களாதேஷ் - 142/7**

அயர்லாந்து 39 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - மேத்யூ ஹெம்ப்ரேஸ் - 4/13

முத்தரப்பு டி20 தொடர், நவம்பர் 27, ராவல்பிண்டி

இலங்கை - 184/5	**பாகிஸ்தான் - 178/7**

இலங்கை 6 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - துஷ்மந்த சமீர - 4/20

பங்களாதேஷ் - அயர்லாந்த 2 வது டி20, நவம்பர் 29, சாட்டோகிராம்

அயர்லாந்து - 170/6	**பங்களாதேஷ் - 174/6**

பங்களாதேஷ் 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - லிட்டன் தாஸ் - 57 & 2 ஸ்டம்பிங்

முத்தரப்பு டி20 தொடர், நவம்பர் 29, ராவல்பிண்டி

இலங்கை - 114	**பாகிஸ்தான் - 118/4**

பாகிஸ்தான் 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - முஹமது நவாஸ் - 3/17

*முக்கிய அணிகளின் போட்டி மட்டுமே தரப்பட்டுள்ளது

ஒரு நாள் போட்டி முடிவுகள்

நியூஸிலாந்து - இங்கிலாந்து, 3வது ஒருநாள், நவம்பர் 01, வெலிங்டன்

இங்கிலாந்து - 222	**நியூஸிலாந்து - 226/8**

நியூஸிலாந்து 2 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - பிளேர் டிக்னர் - 4/64 & 18*

உலகக் கோப்பை லீக் 2, நவம்பர் 01, துபாய்

நேபாள் - 271	**அமெரிக்கா - 273/6**

அமெரிக்கா 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - மிலிந்த் குமார் - 70

உலகக் கோப்பை லீக் 2, நவம்பர் 03, துபாய்

அமெரிக்கா - 292/3	**எமிரேட்ஸ் - 49**

அமெரிக்கா 243 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - சாய்தேஜா முக்கமல்லா - 137*

பாகிஸ்தான் - தென்னாப்பிரிக்கா, முதல் ஒருநாள், நவம்பர் 04, பைசலாபாத்

தென்னாப்பிரிக்கா - 263	**பாகிஸ்தான் - 264/8**

பாகிஸ்தான் 2 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - சல்மான் அஹா - 62

உலகக் கோப்பை லீக் 2, நவம்பர் 05, துபாய்

நேபாள் - 239/9	**எமிரேட்ஸ் - 243/6**

எமிரேட்ஸ் 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - முஹமது ஷஷாத் - 96

பாகிஸ்தான் - தென்னாப்பிரிக்கா, 2வது ஒருநாள், நவம்பர் 06, பைசலாபாத்

பாகிஸ்தான் - 269/9	**தென்னாப்பிரிக்கா - 270/2**

தென்னாப்பிரிக்கா 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் -குயின்டன் டீ காக் - 123*

பாகிஸ்தான் - தென்னாப்பிரிக்கா, 3வது ஒருநாள், நவம்பர் 08, பைசலாபாத்

தென்னாப்பிரிக்கா - 143	**பாகிஸ்தான் - 144/3**

பாகிஸ்தான் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - அப்ரார் அஹமது - 4/27

பாகிஸ்தான் - இலங்கை, முதல் ஒருநாள், நவம்பர் 11, ராவல்பிண்டி

பாகிஸ்தான் - 299/5	**இலங்கை - 293/9**

பாகிஸ்தான் 6 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - சல்மான் அஹா - 105*

ஒரு நாள் போட்டி முடிவுகள்

பாகிஸ்தான் - இலங்கை, 2வது ஒருநாள், நவம்பர் 14, ராவல்பிண்டி

இலங்கை - 288/8	**பாகிஸ்தான் - 289/2**

பாகிஸ்தான் 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - பாபர் அசாம் - 102*

நியூஸிலாந்து - வெஸ்ட் இண்டீஸ் முதல் ஒருநாள், நவம்பர் 16, கிறிஸ்ட்சர்ச்

நியூஸிலாந்து - 269/7	**வெஸ்ட் இண்டீஸ் - 262/6**

நியூஸிலாந்து 7 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - டேரில் மிட்செல் - 119

பாகிஸ்தான் - இலங்கை, 3வது ஒருநாள், நவம்பர் 16, ராவல்பிண்டி

இலங்கை - 211	**பாகிஸ்தான் - 215/4**

பாகிஸ்தான் 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - முஹமது வாசிம் - 3/47

நியூஸிலாந்து - வெஸ்ட் இண்டீஸ் 2வது ஒருநாள், நவம்பர் 19, நேப்பியர்

வெஸ்ட் இண்டீஸ் - 247/9	**நியூஸிலாந்து - 248/5**

நியூஸிலாந்து 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - சாய் ஹோப் - 109*

நியூஸிலாந்து - வெஸ்ட் இண்டீஸ் 3வது ஒருநாள், நவம்பர் 22, ஹாமில்டன்

வெஸ்ட் இண்டீஸ் - 161	**நியூஸிலாந்து - 162/6**

நியூஸிலாந்து 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - மாட் ஹென்றி - 4/43

இந்தியா -தென்னாப்பிரிக்கா முதல் ஒருநாள், நவம்பர் 30, ராஞ்சி

இந்தியா - 349/8	**தென்னாப்பிரிக்கா - 332**

இந்தியா 17 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - விராட் கோலி - 135

டக்வொர்த் லீவிஸ் முறைப்படி

ஆஷஸ் தொடர்

ஆஷஸ் தொடரின் முதல்போட்டி பெர்த் மைதானத்தில் (டபிள்யூ ஏ சி ஏ மைதானத்தில் அல்ல) நடைபெற்றது. வாம்மா மின்னல் என்ற கதியில் இரண்டே நாளில் முடிந்து போனது.

ஆஸ்திரேலிய அணியில் வேகப்பந்து வீச்சாளர் பிரண்டன் டாகெட் மற்றும் துவக்க வீரர் ஜேக் வெதாரால்ட் அறிமுகமானார்கள். இங்கிலாந்து டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்தது. கம்மின்ஸ், ஹேசல்வுட் இல்லாததால் ஸ்டார்க் பந்துவீச்சுக்குத் தலைமை ஏற்று முதல் ஓவரிலேயே ஸாக் கிராவ்லியை வெளியேற்றினார்.

அடித்து ஆடிய பென் டக்கெட் 7வது ஓவரில் ஸ்டார்க் வலையில் வீழ்ந்தார். அடுத்த வந்த ரூட் ரன்கணக்கைத் துவங்காமல் ஸ்டார்க் பந்தில் வீழ்ந்தார். ஆலி போப் - ஹாரி புரூக் இணை சரிவை சரிக்கட்டப் பார்த்தது. ஆனால் பந்துவீச வந்த க்ரீன் முதல் ஓவரிலேயே போப்பை வெளியேற்றினார். உணவு இடைவேளையின் போது இங்கிலாந்து 105/4.

இடைவேளைக்குப் பிறகு ஸ்டார்க், இங்கிலாந்து கேப்டன் ஸ்டோக்ஸை க்ளீன் பவுல்டாக்கினார். ஹாரி புரூக் - ஜேமி ஸ்மித் அடித்து ஆடத் தொடங்கினர். அரைசதம் அடித்த புரூக்கைத் தனது முதல் சர்வதேச விக்கெட்டாக வீழ்த்தினார் டாகெட்.

விக்கெட்டுகள் தொடர்ந்து சரிந்து இங்கிலாந்து 178 ரன்களுக்கு ஆட்டத்தை முடித்தது. மிட்செல் ஸ்டார்க் 7 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

ஆஸ்திரேலிய அறிமுகத் துவக்கவீரர் வெதாரால்ட் முதல் ஓவரிலே ஆர்ச்சருக்கு பலியானார். ஆஸ்திரேலியா 10 ஓவர்களில் 15 ரன்களே அடிக்க, தேநீர் பருகி மகிழ்ந்தது இங்கிலாந்து.

ஆட்டநேர இறுதியில் ஆஸ்திரேலியா 9 விக்கெட்டுகள் இழப்பிற்கு 123 ரன்கள் எடுத்தது. பென் ஸ்டோக்ஸ் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். ஆஸ்திரேலியா தரப்பில் அதிகபட்சமாக அலெக்ஸ் கேரி 26 ரன்கள் அடித்தார்.

2ம் நாளில் ஆஸ்திரேலியா 132 ரன்களுக்கு ஆல்அவுட் ஆனது. 46 ரன்கள் முன்னிலை பெற்ற இங்கிலாந்து, இரண்டாவது இன்னிங்ஸில் மீண்டும் முதல் ஓவரில் ஸாக் கிராவ்லியை இழந்தது. ஸ்டார்க் பிடித்தது அபாரமான கேட்ச் என்பது குறிப்பிடத்தக்கது.

உணவு இடைவேளையின் போது 59/1 என்றிருந்த இங்கிலாந்து 164 ரன்களுக்கு ஆல்அவுட் ஆகி தேநீர் இடைவேளைக்கு சென்றது. ஹாஸ் அட்கின்சன் 37 ரன்கள் அடித்தார். ஸ்காட் போலன்ட் 4 விக்கெட்டுகளையும், ஸ்டார்க் மற்றும் டாகெட் தலா 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

205 ரன்களைத் துரத்திய ஆஸ்திரேலிய அணியின் துவக்கவீரர், இங்கிலாந்து பந்துவீச்சாளர்களைத் துவம்சம் செய்ய ஆஸ்திரேலியா 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது. ஹெட் 16 ஃபோர்கள், 5 சிக்ஸர்கள் உட்பட 123 ரன்கள் அடித்தார். லபுசேன் 51 அரைசதம் அடித்தார்.

ஆட்ட நாயகன் - மிட்செல் ஸ்டார்க் – 7/58 & 3/55

பிரையன் லாரா

- *ஆன்டனி தினேஷ்*

1990 ஆம் ஆண்டு சர்வதேசக் கிரிக்கெட்டில் அறிமுகம் ஆனவர் லாரா. அந்தக் காலகட்டங்களில் விளையாடிய உலகின் தலைசிறந்த பந்துவீச்சாளர்கள் சிலர் டெஸ்ட் கிரிக்கெட்டில் சச்சினை விட லாராவுக்குப் பந்துவீசுவது கடினம் என்று ஒப்புக்கொண்டு விட்டார்கள். உலகில் எந்த நாட்டுக்குக் கிரிக்கெட் விளையாடச் சென்றாலும் அங்கே லாராவுக்கு ரசிகர்கள் உண்டு. கிரிக்கெட் கடவுள் என்று வர்ணிக்கப்படும் சச்சின் டெண்டுல்கரே லாராவின் ரசிகர் தான்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் முன்னணி வீரர்கள் சிலர் இருந்தாலும், அவர்களுக்கும் லாராவுக்கும் இடையே பேட்டிங் அணுகுமுறையில் வித்தியாசம் உண்டு. களத்தில் நிற்கும்வரை பந்துவீச்சாளர்கள் மேலே "ஆதிக்கம்" செலுத்துவார். ஆகவே லாரா களத்தில் நிற்கும்போது அவர்மேலே மட்டுமே எதிரணியின் முழு கவனம் இருக்கும். ஆகவே, அவருடன் சேர்ந்து விளையாடும் பேட்ஸ்மேன் அழுத்தம் இல்லாமல் விளையாடுவார். முழுக்க முழுக்கப் பந்துவீச்சுக்கு சாதகமான பிட்ச்களில் உலகப் புகழ்பெற்ற பந்துவீச்சாளர்களுக்கு எதிராக ஆதிக்கம் செலுத்தியவர் லாரா. தனி ஆளாக நிலைத்து நின்று மேற்கு இந்தியத் தீவுகள் அணியை நிறைய போட்டிகளில் வெற்றிபெறவும், போட்டியை டிரா செய்யவும் வைத்திருக்கிறார்.

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான ஒரு டெஸ்ட் போட்டியில் 308 ரன்களைத் துரத்திப் பிடித்தபோது கடைநிலை பேட்ஸ்மேன்களை எதிரில் நிப்பாட்டி

வைத்துக்கொண்டு, ஐந்தாம் நாள் ஆட்ட முடிவில் 153 ரன்கள் சேர்த்து தனி ஆளாக மேற்கு இந்தியத் தீவுகள் அணியை ஒரு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்தார். இன்னொரு டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக 417 ரன்களை விரட்டிப் பிடித்து வெற்றிபெற்ற போட்டியில் மூன்றாம் நாள் ஆட்டத்தில் அவர் வேகமாக அடித்த 68 ரன்கள் வெற்றிக்கு முக்கியக் காரணம் ஆனது.

இலங்கைக்கு எதிராக மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் மூன்றிலும் மேற்கு இந்தியத் தீவுகள் அணி தோற்றது. ஆனால் அந்தத் தொடரில் லாரா அடித்த மொத்த ரன்கள் 688. அந்தத் தொடரில் சுழற்பந்து வீச்சுக்கு சாதகமான மைதானங்களில் விக்கெட்டுகளை அள்ளிக்குவித்த முத்தையா முரளிதரனால் லாராவுக்கு எதிராக ஒன்றுமே பண்ணமுடியவில்லை. டெஸ்ட் கிரிக்கெட்டில் ஒரே இன்னிங்சில் அதிக ரன்கள் (375) சேர்த்த லாராவின் சாதனையை ஆஸ்திரேலிய வீரர் ஹைடன் ஒரே இன்னிங்சில் 380 ரன்கள் சேர்த்து முறியடித்தபோது, அடுத்த சில மாதங்களில் ஒரே இன்னிங்சில் 400 ரன்கள் சேர்த்து சாதனையைத் தன்வசப்படுத்தியவர் லாரா. அவருடைய 375 ரன்கள் மற்றும் 400 ரன்கள் இரண்டுமே இங்கிலாந்து அணிக்கு எதிராக வந்தவை.

வேகப்பந்து வீச்சாளர்களுக்கு எரிச்சலூட்டும் "ஷாட்"களை லாரா எளிதாகவும் ஸ்டைலாகவும் அடிப்பார். புல் ஷாட், ஸ்கொயர் கட், கவர் ட்ரைவ், ஸ்வீப் ஷாட், லாஃப்டெடு ஸ்ட்ரெயிட் ட்ரைவ் போன்ற "ஷாட்"களை மிகநேர்த்தியாக அடிப்பார். 1990 காலகட்டங்களில் பந்துவீச்சில் சிறந்து விளங்கிய தென் ஆப்ரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு

எதிராக நிறைய ரன்களைக் குவித்தார். டெஸ்ட் கிரிக்கெட்டில் சதம் அடித்தாலே பெரிதாகப் பார்க்கப்பட்ட காலகட்டத்தில் 34 டெஸ்ட் சதங்கள் அடித்தவர். அதில் 9 இரட்டைசதங்கள் அடங்கும். அந்த 9 இரட்டைசதங்களில், 2 முச்சதங்கள் அடங்கும். டெஸ்ட் கிரிக்கெட்டில் ஒரே ஓவரில் 28 ரன்களை அடித்த சாதனையை 18 ஆண்டுகளாகத் தக்கவைத்துக் கொண்டு இருந்தார். முதல்தரக் கிரிக்கெட்டில் ஒரே இன்னிங்சில் அதிக ரன்கள் (500) எடுத்த வீரரும் லாரா தான்.

வங்கதேசம் அணிக்கு எதிராக ஒருநாள் போட்டியில் 45 பந்துகளில் அவர் அடித்த சதம், அவருடைய அதிரடிக்கு சான்று. 1996 ஆம் ஆண்டு நடந்த உலகக்கோப்பைப் போட்டியில் தென் ஆப்ரிக்கா அணிக்கு எதிராக அவர் 94 பந்துகளில் அடித்த 111 ரன்கள் மேற்கு இந்தியத் தீவுகள் அணியை காலிறுதிப் போட்டியில் வெற்றிபெற வைத்தது. 1995 ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிரான ஒருநாள் போட்டியில் 129 பந்துகளில் 169 ரன்களை அவர் அடித்தபோது, உலக அரங்கில் அந்த சதம் ஒரு சாதனையாகப் பார்க்கப்பட்டது. ஒருநாள் போட்டிகளில் மூன்று முறை 150 ரன்களுக்கு மேலே குவித்தவர்.

2006 ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான ஒரு டெஸ்ட் போட்டியில், ஸ்லிப் திசையில் பீல்டிங் செய்துகொண்டிருந்த இன்சமாம் பந்துவீச்சாளர் டேனிஷ் கனீரியாவுக்கு ஒரு அறிவுரை வழங்கினார். "பந்து வீசும் போது லாராவைக் கோபப்படுத்து. அவர் அவுட் ஆக வாய்ப்பு இருக்கிறது" என்று. கனீரியா வீசிய ஒரு பந்தை லாரா ஸ்ட்ரோக் செய்தபோது "நல்லா விளையாடுகிறாய் பிரையன்" என்று நக்கலான பாணியில் வஞ்சப்புகழ்ச்சி அணியைக் கொண்டு லாராவை சீண்டினார் கனீரியா. பதிலடி கொடுக்க ஆரம்பித்தார் லாரா. அந்த இன்னிங்சில் மட்டும் கனீரியாவுக்கு எதிராகக் கிட்டத்தட்ட 60 ரன்களை 30

பந்துகளில் அடித்த லாரா, இரட்டைசதம் விளாசினார். அதில் அவர் கனீரியாவுக்கு எதிரான ஒரே ஓவரில் மூன்று சிக்சர்கள் உட்பட 26 ரன்கள் அடித்ததும் அடங்கும். கிரிக்கெட்டில் பந்துவீசும்போது ஒருசில பேட்ஸ்மேன்களை சீண்டிப் பார்க்கக்கூடாது. அந்த பட்டியலில் லாராவும் ஒருவர்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் 11,953 ரன்கள் குவித்த லாரா அதை 60 ஸ்ட்ரைக் ரேட்டில் குவித்தார். டெஸ்டில் அவரது பேட்டிங் ஆவரேஜ் 52. ஆச்சரியம் என்னவென்றால், இந்தியாவுக்கு எதிராக டெஸ்ட் கிரிக்கெட்டில் அவரது பேட்டிங் ஆவரேஜ் 34 மட்டுமே. இந்திய மைதானங்கள் அவருக்கு மிகவும் சவாலாக இருந்தன. முக்கியமாக இந்திய சுழற்பந்து வீச்சாளர்கள் கும்ப்ளே ஐந்து முறையும், வெங்கடபதி ராஜு நான்கு முறையும் லாராவை அவுட் செய்தார்கள். ஒரு நாள் கிரிக்கெட்டில் 10,405 ரன்களை 80 ஸ்ட்ரைக் ரேட்டில் சேர்த்த லாராவை அதிகமுறை (5) அவுட் செய்தவர் சச்சின் டெண்டுல்கர். இரண்டாவது அதிகமுறை (4) அவுட் செய்தவர் கும்ப்ளே. இலங்கையின் முரளிதரன் மற்றும் ஆஸ்திரேலியாவின் வார்னே போன்றோரை எளிதாக எதிர்கொள்ளும் லாரா, இந்தியாவின் டெண்டுல்கர், கும்ப்ளே, ராஜு போன்றோரின் சுழலில் அவ்வப்போது சிக்கியது கொஞ்சம் ஆச்சரியமான விஷயமே.

சர்வதேசக் கிரிக்கெட்டில் 53 சதங்கள் விளாசிய லாரா 1995 ஆம் ஆண்டு விஸ்டன் கிரிக்கெட் விருதைப்பெற்று, பின்னர் கிரிக்கெட்டில் ஓய்வு பெற்ற பிறகு, 2012 ஆம் ஆண்டு ஐசிசியின் ஹால் ஆஃப் ஃபேம் விருதைப் பெற்றார். கிரிக்கெட் விளையாட்டு இந்த உலகில் இருக்கும் வரை, பிரையன் லாராவின் பெயர் மேலோங்கி நிற்கும். கிரிக்கெட்டில் அவர் ஒரு GOAT (Greatest Of All Time).

#BeTheBetterInvestor
மியூச்சுவல் ஃபண்ட்
முதலீடு சரியானது...
ஆனால் எது?
இதற்கு யார்
வழிகாட்டுவார்கள்?
இப்பொழுதே பதிவு செய்து
ஒரு மியூச்சுவல் ஃபண்ட் விநியோகஸ்தரிடமிருந்து முறையான வழிகாட்டுதலைப் பெறுங்கள்
Nj WEALTH
இந்தியாவின் மிகப்பெரிய மியூச்சுவல் ஃபண்ட் விநியோகஸ்தர்
என்ஜே இந்தியா இன்வெஸ்ட் பிரைவேட் லிமிடெட் - ஏஎம்எஃப்ஐ பதிவு செய்த மியூச்சுவல் ஃபண்ட் விநியோகஸ்தர்
மியூச்சுவல் ஃபண்ட் முதலீடுகள் சந்தை அபாயங்களுக்கு உட்பட்டவை. திட்டம் சார்ந்த எல்லா ஆவணங்களையும் கவனமாகப் படிக்கவும்.
MIS
Mahalakshmi Investment Services
M S RAMASUBRAMANIAN
MOBILE: 9894458655
Email: ramasubbums@gmail.com
Website: http://p.njw.bz/30935
M S RAMASUBRAMANIAN - AMFI REGISTERED MUTUAL FUND DISTRIBUTOR

மைல் கல்லை எட்டியவர்கள்		
	ஆப்கானிஸ்தான் அணியின் விக்கெட் கீப்பர் ரஹ்மானுல்லா குர்பாஸ் சர்வதேச டி20 போட்டிகளில் 2000 ரன்களைக் கடந்தார்.	2000
1000	அமெரிக்க அணியின் மிலிந்த் குமார் ஒருநாள் போட்டிகளில் 1000 ரன்களைக் கடந்தார்.	
	நேபாள் அணியின் கேப்டன் ரோகித் பவ்டெல் ஒருநாள் போட்டிகளில் 2000 ரன்களைக் கடந்தார்.	2000
50	இந்திய அணியின் ஆல்ரவுண்டர் வாசிங்டன் சுந்தர் சர்வதேச டி20 போட்டிகளில் தனது 50வது விக்கெட்டை வீழ்த்தினார்.	
	இந்திய அணியின் துவக்க வீரர் அபிஷேக் சர்மா சர்வதேச டி20 போட்டிகளில் 1000 ரன்களைக் கடந்தார்.	1000

மைல் கல்லை எட்டியவர்கள்		
	தென்னாப்பிரிக்க அணியின் விக்கெட் கீப்பர் குயின்டன் டீ காக் ஒருநாள் போட்டிகளில் 7000 ரன்களைக் கடந்தார்.	7000
50	நியூசிலாந்து அணியின் ஆல்ரவுண்டர் ஜேம்ஸ் நீஸம் சர்வதேச டி20 போட்டிகளில் தனது 50வது விக்கெட்டை வீழ்த்தினார்.	
	நியூசிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜேக்கப் டஃப்பி சர்வதேச டி20 போட்டிகளில் தனது 50வது விக்கெட்டை வீழ்த்தினார்.	50
4000	இந்திய அணியின் கேஎல் ராகுல் டெஸ்ட் போட்டிகளில் 4000 ரன்களைக் கடந்தார்.	
	இந்திய அணியின் ஆல்ரவுண்டர் ரவீந்திர ஜடேஜா டெஸ்ட் போட்டிகளில் 4000 ரன்களைக் கடந்தார்.	4000

மைல் கல்லை எட்டியவர்கள்		
	வெஸ்ட் இண்டீஸ் அணியின் கேப்டன் சாய் ஹோப் ஒருநாள் போட்டிகளில் 6000 ரன்களைக் கடந்தார்.	6000
3000	பங்களாதேஷ் அணியின் விக்கெட் கீப்பர் லிட்டன் தாஸ் டெஸ்ட் போட்டிகளில் 3000 ரன்களைக் கடந்தார்.	
	ஜிம்பாப்வே கேப்டன் சிக்கந்தர் ரஸா சர்வதேச டி20 போட்டிகளில் தனது 100வது விக்கெட்டை வீழ்த்தினார்.	100
1000	பங்களாதேஷ் துவக்க வீரர் மக்முதுல் ஹசன் ஜாய் டெஸ்ட் போட்டிகளில் 1000 ரன்களைக் கடந்தார்.	
	பங்களாதேஷ் அணியின் சுழற்பந்து வீச்சாளர் தைஜுல் இஸ்லாம் டெஸ்ட் போட்டிகளில் தனது 250வது விக்கெட்டை வீழ்த்தினார்.	250

25 வது இதழ்

மைல் கல்லை எட்டியவர்கள்		
	பாகிஸ்தான் அணியின் துவக்க வீரர் சைம் அயூப் சர்வதேச டி20 போட்டிகளில் 1000 ரன்களைக் கடந்தார்.	1000

மறக்க முடியாத போட்டி

- கா. இராமச்சந்திரன்

இன்று இந்திய மகளிர் கிரிக்கெட் பெற்றுள்ள வளர்ச்சியும் அதில் ஏற்பட்டுள்ள மாற்றமும், இந்திய மகளிர் கிரிக்கெட்டின் பக்கம் பெருவாரியான ரசிகர்களின் பார்வை திரும்பியிருப்பதையும் கண்கூடக் காண்கிறோம். இந்த மாற்றங்களுக்கெல்லாம் தொடக்கப்புள்ளியான ஒரு ஆட்டத்தைப்பற்றித் தான் இந்த மறக்க முடியாத போட்டியில் அசைபோட இருக்கிறோம். மித்தாலி ராஜ், ஜூலன் கோஸ்வாமி போன்ற அனுபவமிக்க வீரர்களுடன் இன்றைய நட்சத்திரங்கள் ஸ்மிருதி, தீப்தி, ஹர்மன்ப்ரீத் அவர்களும் இருந்த அணி. ஆனால் ஆஸ்திரேலியாவை Knockout போட்டியில் வெல்லும் என்று யாரும் நம்பிக்கை வைக்காத ஒரு நிலை தான்.

ஜூலை 20-2017 டெர்பி கவுண்டி மைதானத்தில் இந்தப் போட்டி நடைபெறுகிறது. நானோ ஊட்டி மலை மீது இருந்தேன். மித்தாலி ராஜ், ஜூலனின் 11 வருடக் கிரிக்கெட் வாழ்க்கைக்கு ஒரு அங்கீகாரம் வேண்டும் என்று ரசிகர்கள் எதிர்பார்த்த தொடர் அது. முழுவதும் ஆட்டம் பார்க்க வாய்ப்பு அமையவில்லை. அங்கும் இங்குமாய் பார்த்து, பின்பு படித்துத் தெரிந்துகொண்ட ஆட்டம்.

டாஸ் வென்ற இந்திய அணி முதலில் பேட்டிங்கைத் தேர்வு செய்தது. மழை காரணமாக 42 ஓவர் ஆட்டமாக மாற்றப்பட்டிருந்தது. முதல் ஓவரிலேயே ஸ்மிருதி மந்தனா தனது விக்கெட்டை இழக்க, 10 ஓவர்களில் இந்தியா இரண்டு விக்கெட்டை இழக்க, பின்பு களம்கண்ட மித்தாலி ராஜ் பொறுமையான ஆட்டத்தை வெளிப்படுத்தி 36 ரன்கள் எட்டிய நிலையில் இந்திய அணி 101

ரன்களில் இருந்தது. மித்தாலி தனது விக்கெட்டை கிறிஸ்டன் பீம்ஸ் பந்துவீச்சில் பறிகொடுத்தார். பின்பு ரசிகர்களின் எதிர்பார்ப்புப்படியே ஆட்டம் செல்வதாகத்தான் இருந்தது. ஆஸ்திரேலியா தொடக்கம் முதலே தங்களின் ஆதிக்கத்தை பந்துவீச்சில் செலுத்தி வந்தனர்.

அந்த நேரத்தில் யாரும் சற்றும் எதிர்பார்த்திருக்க மாட்டோம், ஒரு சூறாவளிப் புயல் அந்தக் களத்தில் வீசப்போகிறது என்று. ஆம், ஹர்மன்ப்ரீத் கவுர் தான் அந்த சூறாவளி. அதுவரை இந்திய மகளிர் கிரிக்கெட்டில் இப்படி ஒரு அதிரடியை யாரும் பெரும்பாலும் பார்த்ததில்லை என்பது தான் உண்மை. ஆஸ்திரேலியா ஹர்மன்ப்ரீத்தை சமாளிக்க முடியாமல் திணறியது கண்கூடாகத் தெரிந்தது.

7 ஆறுகள் மற்றும் 20 நான்குகள்னு மொத்தம் 171 ரன்கள் வெறும் 115 பந்துகளில். ஆஸ்திரேலியாவின் வலுவான பந்துவீச்சை மைதானத்தின் எல்லாத் திசைகளிலும் அடித்து விளாசினார் ஹர்மன்ப்ரீத்.

தீப்தி சர்மா & வேதா கிருஷ்ணமூர்த்தியோட சிறு சிறு பார்ட்னர்ஷிப்கள்னு இந்தியா 42 ஓவரின் முடிவில் 281/4 ரன்களை எட்டியது. 282 என்ற இலக்குடன் ஆஸ்திரேலியா களம் இறங்கியது.

இந்திய அணி சார்பில்

ஹர்மன்ப்ரீத் - 171* (115) & மித்தாலி ராஜ் – 36 (61)

10 ஓவர்களின் முடிவில் ஷிகா பாண்டே, ஜூலன் & தீப்தி பந்துவீச்சில் தலா ஒரு விக்கெட் வீழ்த்தி, ஆஸ்திரேலியா 3 விக்கெட்களை இழந்து தடுமாறியது. அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்திய எலைஸ் விலானி 75 ரன்களில் இருந்தபொழுது ஷிகா பாண்டே தனது இரண்டாவது ஸ்பெல்லில் வீழ்த்தினார். இருப்பினும் ஆஸ்திரேலிய ரன்ரேட் சிறப்பாக இருந்தது

அதற்குப்பின்பு களம் இறங்கிய அலெக் பிளாக்வெல் ஆஸ்திரேலிய அதிரடியைக் களத்தில் காட்டி, பந்தை நாலாபக்கமும் விளாசத் தொடங்கினார். மறு முனையில் சீரான இடைவேளையில் விக்கெட்கள் வீழ்ந்தது இந்திய அணிக்கு சற்று ஆறுதலாக இருந்ததது. 126/4 ல் இருந்து 169/9 என்ற நிலைக்கு ஆஸ்திரேலியா தள்ளப்பட்டது.

ஆஸ்திரேலியா சற்றும் மனம்தளராமல் கடைசி விக்கெட்டில் ஒரு போராட்டத்தை வெளிப்படுத்தத் தொடங்கினர். அந்த இணை 75 ரன்கள் குவித்ததே அதற்கு சாட்சி. அலெக்ஸ் பிளாக்வெல் 56 பந்துகளுக்கு 90 ரன்கள் என்ற நிலையில் தீப்தி ஷர்மாவின் பந்துவீச்சில் தனது விக்கெட்டை இழந்த நிலையில் தான் இந்தியாவிற்கு இந்த வரலாற்று வெற்றி சாத்தியப்பட்டது. கடைசி வரை ஆஸ்திரேலியா போராடியது இந்த ஆட்டத்தில் மேலும் சுவாரஸ்யத்தை ஏற்படுத்தியது.

பந்து வீச்சில் இந்திய அணி சார்பாக

தீப்தி சர்மா - 3/59 (7.1)

ஷிகா பாண்டே - 2/17 (6)

ஜூலன் கோஸ்வாமி- 2/35 (8)

பூனம் யாதவ் - 1/60 (9)

ராஜேஸ்வரி கைக்வாட் - 1/62 (9)

என அனைவரும் தங்களது பங்களிப்பை அளித்திருந்தனர். 36 ரன்கள் வித்தியாசத்தில் வென்று இறுதிப்போட்டிக்குத் தகுதியடைந்தது. இறுதிப்போட்டி இந்தியாவிற்கு சாதகமாக அமையாவிட்டாலும் இந்த அரையிறுதி வெற்றி, இந்திய மகளிர் அணியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது என்றுதான் கூறவேண்டும். இதை எழுதிக்கொண்டிருக்கும்பொழுது இந்தியா முதல் முறையாக ஒரு நாள் உலகக்கோப்பையை வென்றுள்ளது. இந்த இமாலய சாதனைக்கான விதையாகத்தான் அந்த 2017 அரையிறுதியை நான் காண்கிறேன்.

கிரிக்கெட் நிர்வாகிகள், கிரிக்கெட் ரசிகர்கள் என்று எல்லோரின் பார்வையையும் மகளிர் அணியை நோக்கித் திருப்பி அந்த அணியின் மீது அளப்பரிய அன்பையும், நம்பிக்கையையும் வைப்பதற்கு வித்திட்ட இந்த 2017 மகளிர் ஒரு நாள் உலகக்கோப்பை அரையிறுதி எனக்கு என்றும் மறக்க முடியாத போட்டியே.

அன்று ஆட்டநாயகியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஹர்மன்ப்ரீத் கவுர் தான் இன்று வரலாற்றில் முதல் முறையாக மகளிர் அணி ஒரு நாள் உலகக்கோப்பையை வென்று கோப்பையுடன் எங்களை மட்டற்ற மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளார்.

புத்தகக் கிரிக்கெட்

சில மாதங்களுக்குப்பிறகு மீண்டும் புத்தகக் கிரிக்கெட் பகுதியில் ஒரு புத்தகம் குறித்து எழுதுவதில் மகிழ்ச்சி அடைகிறோம். இந்த மாத புத்தகக் கிரிக்கெட்டில் இடம் பெறுவது தி கிரேட் இந்தியன் கிரிக்கெட் சர்க்கஸ் (The Great Indian Cricket Circus).



அபிஷேக் முகர்ஜி மற்றும் ஜாய் பட்டாச்சார்யா எழுதியுள்ள இந்தப் புத்தகத்தில் இந்தியக் கிரிக்கெட் பற்றிய துணுக்குகள் இடம்பெற்றுள்ளன. பல்வேறு புள்ளிவிவரங்கள் மற்றும் வரலாற்று சம்பவங்களைத் துணுக்காகவே கொடுத்துள்ளதால் வாசிக்க சுவாரஸ்யமாக உள்ளது.

கிட்டத்தட்ட 400+ பக்கங்கள் கொண்ட இந்தப் புத்தகத்தை ஆய்வுநூல் என்றுகூட சொல்லலாம். நிறைய ஆய்வு செய்து எழுதியுள்ளனர்.

கிரிக்கெட் வீரர்கள் நினைவாக பெயரிடப்பட்ட இடங்கள் பகுதியில் திகார் ஜெயிலில் ஒரு ப்ளாக், மனோஜ் பிரபாகர் ப்ளாக் என்றிருந்ததாம். மனோஜ் பிரபாகர் மேட்ச் பிக்சிங்கில் சிக்கியபிறகு அந்தப் பெயர் நீக்கபட்டதாக சொல்கிறார்கள்.

இந்திய சினிமாவில் நடித்த கிரிக்கெட் வீரர்கள் பற்றிய பகுதியில் சலீம் துராணியில் ஆரம்பித்து சடகோபன் ரமேஷ், ஸ்ரீசாந்த் மற்றும் வருண் சக்ரவர்த்தி (ஜீவா) வரை எழுதியுள்ளனர்.

யுஸ்வேந்திர சகால் தேசிய அளவில் செஸ் போட்டிகளில் ஆடியுள்ளார் என்பது போன்ற சுவாரஸ்யத் தகவல்கள் புத்தகம் முழுக்க நிரம்பியுள்ளது.

1983 உலகக்கோப்பையில் இந்தியா - ஜிம்பாப்வே போட்டி (கபில்தேவ் 175 அடித்த போட்டி) பிபிசி வேலைநிறுத்தத்தால் நேரடி ஒளிபரப்பு செய்யப்படவில்லை. அதனால் அந்தப் போட்டியின் வீடியோ இல்லை என நாம் கேள்விப்பட்டிருப்போம். ஆனால் உண்மை அதுவல்ல. அன்று மட்டுமே 4 உலகக்கோப்பை போட்டிகள் நடந்ததால் மிக முக்கியமான இரண்டு போட்டிகளுக்கு மட்டுமே வீடியோ எடுக்க சென்றார்கள் என்று குறிப்பிட்டுள்ளனர்.

2008/09 நியூசிலாந்து தொடரில் பயிற்சிப் போட்டிகள் இல்லாததால் ராகுல் டிராவிட், லட்சுமண், பாலாஜி, முரளி விஜய் ஆகியோர் நியூசிலாந்து உள்ளூர் அணிக்காக முதல்தரப் போட்டியில் ஆடியுள்ளனர். எந்தெந்த அணிக்கு யார் யார் ஆடினார்கள் என்ற தகவலும் உள்ளது.

29. Curious Selections 225

30. Indian International Cricketers Born outside India 233

31. The Radcliffe Curse: Partition 'Transfers' 237

32. Curious Legacies: Things Named after Cricketers 241

33. Did You Know?: Unusual Feats by Indians outside International Cricket 247

34. The Rovers: Cricketers Who Played for Several Teams 257

35. Did that Really Happen?: Popular Myths in Indian Cricket 261

36. Unholy Smoke: Cricketing Effigies and Posters Burnt in India 273

37. Microphone Men: Iconic, Controversial, Unusual 279

38. Standing Out in the Stands 287

39. Divine Acts: Religion and Indian Cricket 293

40. Not Quite Cricket: Indian Cricketers Who Faced Racism 301

41. Comebacks Like None Other: Cricketers Who Overcame Grief to Return to the Field 309

42. Pieces of Wood: Famous Bats of Indian Cricket 315

43. The Plate Group: Food and Indian Cricket 323

44. They Did *That?*: How Indian Fans Have Followed Cricket 333

45. Big Hits: Iconic Sixes in Indian Cricket 339

46. End of Innings: Indian Cricketers Who Died Unnatural Deaths 347

மொத்தத்தில் இந்தப் புத்தகம் ஒரு தகவல் களஞ்சியம். கிரிக்கெட் ஆர்வலர்கள் வாசிக்கத் தரமான புத்தகம். அட்டைப்பட வடிவமைப்பு மட்டுமே சொதப்பல்.

12த் மேன்

- *கா. இராமச்சந்திரன்*

கர்நாடக மாவட்டத்தைச் சேர்ந்த ராகவேந்திர திவேதி, ரகு என்று கிரிக்கெட் வட்டாரத்தில் சமீபத்தில் அதிகம் பேசுபொருளானவர். இந்திய ஆடவர் அணியின் அன்சங் ஹீரோ. உத்தரக் கர்நாடகாவில் பிறந்து தனது கிரிக்கெட் பயணத்தை ஹூப்ளி தார்வாட் அணிக்காகத் தொடங்கியவர். அவரின் எதிர்பாரா காயம் காரணமாக அவரால் வீரராகக் கிரிக்கெட் பயணத்தைத் தொடரமுடியவில்லை. கிரிக்கெட் மீது கொண்ட அதீதபற்று காரணமாகப் பயிற்சியாளராகக் களமிறங்கி, கர்நாடக ரஞ்சி அணிக்குப் பயிற்சியளித்தார். பின்பு 2008ல் பிசிசிஐயுடன் இணைந்தார்.

2011ல் சச்சின் டெண்டுல்கரால் இவரின் திறமை அறியப்பட்டு இந்திய ஆடவர் அணியின் பயிற்சியாளர் குழுவில் இணைந்தார். அன்றிலிருந்து கிட்டத்தட்ட 15 ஆண்டுகளாக இவர் ஆடவர் அணியில் “த்ரோ டவுன் ஸ்பெஷலிஸ்ட்” ஆகப் பணியாற்றி வருகிறார்.

த்ரோ டவுன் என்பது கிரிக்கெட்டைப் பொறுத்தவரை சைட் ஆர்ம் டூல் பயன்படுத்தி பேட்ஸ்மேன்களுக்குப் பந்துவீச்சு செய்வது. இதன்மூலம் வேகப்பந்து வீச்சாளர்களின் பந்துவீச்சைப் போன்ற பயிற்சி கிடைக்கும்.

இதை செய்வது அவ்வளவு எளிது அல்ல. ரகு அவர்கள் வெவ்வேறு வேகப்பந்து வீச்சாளர்களின் பந்துவீச்சு முறைக்கு ஏற்ப த்ரோ டவுன் செய்வதில் ஸ்பெஷலிஸ்ட். இந்தியக் கிரிக்கெட் ஜாம்பவான்கள் பலரும் இவரின் த்ரோ டவுன் எப்படித் தங்களின் பேட்டிங்கில் மாற்றத்தை ஏற்படுத்த உதவியுள்ளது என விவரித்துள்ளனர். இந்திய பேட்ஸ்மேன்களின் இங்கிலாந்து, ஆஸ்திரேலிய மைதானங்களின் சமீபத்திய சிறப்பான செயல்பாட்டிற்கு இவரும் ஒரு முக்கியக் காரணம். 140-150 கிமீ வேகத்தில் பந்தை வீசுவதில் ரகு வல்லவர். இது பேட்ஸ்மேன்களுக்கு ஃபுட் ஒர்க், ஷாட் தேர்ந்தெடுப்பு நுட்பங்களை சரிசெய்யப் பெரிதும் உதவும். நின்றுவீசப்படும் இந்த வேகப்பந்தை சிறப்பாக எதிர்கொண்டால் களத்தில் வேகப்பந்து வீச்சை எதிர்கொள்ள நன்றாக நேரம் கிடைப்பது போல் உணர்வர்.

விளையாட்டு உலகில் கிடைக்கும் ஒவ்வொரு வெற்றிக்கும், திரைக்குப் பின்பாக பலரின் உழைப்புகள் இருக்கும். அதுபோலத்தான் கிரிக்கெட்டிலும். அப்படியான ஒன்றாக இந்திய ஆடவர் அணியின் வெற்றிக்குப்பின் 15 வருடங்களாகப் பயணிக்கும் ரகு அவர்களின் திறைமையையும், சிறப்பான பங்களிப்பையும் நினைவுகூர்வதில் துடுப்பாட்டம் மகிழ்ச்சி கொள்கிறது.

மாதம் ஒரு மங்கை

ஜூலன் கோஸ்வாமி 2002 முதல் 2022 வரை இந்திய அணிக்காக விளையாடிய வேகப்பந்து வீச்சாளர். ஜூலன் பிறந்தது மேற்கு வங்காள மாநிலத்தில் சக்டகா என்ற ஊரில்.

நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த ஜூலன் சக்டகாவில் பயிற்சிசெய்ய வழி இல்லாததால் தினமும் ரயிலேறி வந்து கொல்கத்தாவில் பயிற்சி பெற்றார்.

பெங்கால் அணிக்காக விளையாடிய ஜூலன் தனது வேகப்பந்துவீச்சு மூலம் 19 வயதிலே இந்திய அணிக்குத் தேர்வானார்.

மிதாலி ராஜ் உடன் இணைந்து இந்திய மகளிர் அணியை சீர்தூக்கியவர் ஜூலன் கோஸ்வாமி. பபுல், சக்டா எக்ஸ்பிரஸ் என்று செல்லமாக அழைக்கப்பட்ட ஜூலன் 2007ல் ஐசிசியின் சிறந்த வீராங்கனை விருதைப் பெற்றார்.

2010ல் அர்ஜுனா விருதைப் பெற்ற ஜூலன், 2012ல் பத்மஸ்ரீ விருதைப் பெற்ற இரண்டாவது மகளிர் கிரிக்கெட் வீராங்கனையானார். டயானா எடுல்ஜி பத்மஸ்ரீ விருதைப் பெற்றுள்ளார்.

ஆசிய அணிகளில் வேகப்பந்துவீச்சாளர்கள் கோலோச்ச முடியாது என்ற நிலையை மாற்றி அமைத்த ஜூலன், 2017ல் ஒருநாள் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய பந்துவீச்சாளர் என்ற உலக சாதனையைப் படைத்தார். இன்று வரை இந்தச் சாதனை ஜூலன் வசமே உள்ளது.

2017 உலகக்கோப்பை இறுதிப்போட்டியில் ஜூலன் 10 ஓவர்கள் வீசி 3 மெய்டன்களுடன் 23 ரன்கள் கொடுத்து 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். பேட்டிங்கில் டக்கவுட் ஆகாமல் இரண்டு போர்கள் அடித்திருந்தால் அன்றே மகுடம் சூடியிருக்க வாய்ப்பு இருந்தது.

ஜூலனைக் கௌரவிக்கும்விதமாக தபால் தலை வெளியிடப்பட்டுள்ளது. கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் ஜூலன் கோஸ்வாமி ஸ்டாண்ட் உள்ளது. ஜூலனின் கிரிக்கெட் வாழ்க்கையை மையமாக வைத்து, கொல்கத்தா விவேகானந்தா பூங்கா முதல் லண்டன் லார்டஸ் வரை பயணிக்கும் கதை சக்டகா எக்ஸ்பிரஸ் என்ற பெயரில் படமாக்கப்பட்டது. ஆனால் வெளியீடு தாமதமாகிறது.

துடுப்பாட்டம் ஜூலன் கோஸ்வாமியை கௌரவிக்கும் வகையில் இந்தப் புதிய பகுதியின் முதல் மங்கையாக ஜூலனை நினைவு கூர்கிறோம்.

	போட்டிகள்	**இன்னிங்ஸ்**	**விக்கெட்**	**பெஸ்ட்**	**கேட்ச்**
டெஸ்ட்	12	21	44	5/25	5
ஒரு நாள்	204	203	255	6/31	69
டி 20	68	67	56	5/11	23

நியூசிலாந்து - வெஸ்ட் இண்டீஸ்

டி20 தொடர்

பங்களாதேஷில் மூன்று இருபது-20 போட்டிகளை வென்ற களிப்பில் நியூசிலாந்து சென்றது வெஸ்ட் இண்டீஸ். ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்திடம் தொடரை இழந்து, கவலையில் இருந்தது நியூசிலாந்து.

முதல் போட்டி ஆக்லாந்தில் நடைபெற்றது. நியூசிலாந்து டாஸ் வென்று வெஸ்ட் இண்டீஸைப் பேட்செய்ய சொன்னது. வெஸ்ட் இண்டீஸ் கேப்டன் ஷாய் ஹோப் அரைசதம் (53) அடிக்க, ராவ்மேன் பவல் (33), ராஸ்டன் சேஸ் (28) உதவ 164 ரன்களை எட்டியது. ஜேக்கப் டஃப்பி மற்றும் ஸாக் பவுல்க்ஸ் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

நியூசிலாந்து பேட்டர்கள் யாரும் சரியாக ஆடவில்லை. கேப்டன் சான்ட்னரின் அரைசதம் (55*) வீணாய்ப் போனது. வெஸ்ட் இண்டீஸ் 7 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது. ஜெய்டன் ஷீல்ஸ் மற்றும் ராஸ்டன் சேஸ் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

ஆட்டநாயகன் - ராஸ்டன் சேஸ் – 28 & 3/26

2வது போட்டியும் ஆக்லாந்தில் நடைபெற்றது. நியூசிலாந்து முதலில் பேட்டிங் செய்தது. மார்க் சாப்மேன் அதிரடியால் நியூசிலாந்து 207 ரன்கள் எடுத்தது. சாப்மேன் 28 பந்துகளை எதிர்கொண்டு 6 ஃபோர்கள், 7 சிக்ஸர்கள் உட்பட 78 ரன்கள் எடுத்தார். ராஸ்டன் சேஸ் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இலக்கைத் துரத்திய வெஸ்ட் இண்டீஸ் அணி அதானேஸ் (33), ராவ்மேன் பவல் (45), ஷெப்பர்ட் (34) பங்களிப்பால் இலக்கின் அருகில் நெருங்கியது. கடைசிப் பந்தில் 5 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற நிலையில் மாத்யூ போர்ட் ஒரு ரன் மட்டுமே எடுக்க வெற்றி நியூசிலாந்து வசமானது. நியூசிலாந்து 3 ரன்கள்

வித்தியாசத்தில் வென்றது. சுழற்பந்து வீச்சாளர்கள் இஷ் சோதி மற்றும் மிட்செல் சாண்ட்னர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

ஆட்டநாயகன் - மார்க் சாப்மேன் – 78

3வது போட்டி நெல்சன் நகரில் நடைபெற்றது. நியூசிலாந்து முதலில் பேட்டிங் செய்தது. துவக்கவீரர் கான்வே (56) அரைசதம், டேரில் மிட்செல் 41 ரன்கள் அடிக்க நியூசிலாந்து 177 ரன்கள் எடுத்தது. மேத்யூ போர்ட், ஜேசன் ஹோல்டர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

வெஸ்ட் இண்டீஸ் பேட்டர்கள் பெரிய அளவில் ஆடவில்லை. ரோமாரியோ ஷெப்பர்ட் அதிரடியாக ஆடி 49 ரன்கள் அடித்தார். சமர் ஸ்பிரிங்கர் 39 ரன்கள் அடித்தார். ஆனால் வெஸ்ட் இண்டீஸ் 168 ரன்களுக்கு ஆல்அவுட் ஆனது. ஜேக்கப் டஃப்பி மற்றும் இஷ் சோதி தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர். நியூசிலாந்து 9 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

ஆட்டநாயகன் - இஷ் சோதி 3/34

4வது போட்டியும் நெல்சனில் நடைபெற்றது. வெஸ்ட் இண்டீஸ் பேட்டிங் செய்து 6.3 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 38 ரன்கள் எடுத்தபோது மழை குறுக்கிட்டது. போட்டி முடிவு இல்லாமல் போனது.

5வது போட்டி டுனிடினில் நடைபெற்றது. வெஸ்ட் இண்டீஸ் முதலில் பேட்டிங் செய்து 140 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. ராஸ்டன் சேஸ் 36 ரன்களும், ஷெப்பர்ட் 36 ரன்களும் அடித்தனர். ஜேக்கப் டஃப்பி 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

நியூசிலாந்து 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் எளிதாக வென்றது. டிம் ராபின்சன் 45 ரன்களும், டெவோன் கான்வே 47* ரன்களும் அடித்தனர்.

ஆட்டநாயகன் - ஜேக்கப் டஃப்பி - 4/35

தொடர் நாயகன் - ஜேக்கப் டஃப்பி 10 விக்கெட்டுகள்

ஒருநாள் தொடர்

முதல் ஒருநாள் போட்டி கிறிஸ்ட்சர்ச் நகரில் நடைபெற்றது. நியூசிலாந்து முதலில் பேட்டிங் செய்தது. டேரில் மிட்செல் (119) பொறுமையாக ஆடி சதமடித்தார். துவக்க வீரர் டேவோன் கான்வே 49 ரன்கள் அடித்தார். நியூசிலாந்து 269 ரன்கள் எடுத்தது. ஜெய்டன் ஷீல்ஸ் 3 விக்கெட்டுகளையும், மேத்யூ போர்ட் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

சேஸ் செய்த வெஸ்ட் இண்டீஸ் அணியில் பேட்டர்களின் பங்களிப்பு 20-40 என்பதாகவே இருந்தது. ரூதர்போர்டு அரைசதம் (55) அடித்தார். இறுதிக்கட்டத்தில் ஜஸ்டின் க்ரீவ்ஸ்(38*) மற்றும் ரோமாரியோ ஷெப்பர்ட்(26*) போராடினார்கள். ஆனாலும் வெஸ்ட் இண்டீஸ் 7 ரன்கள் வித்தியாசத்தில் தோற்றது. கடைசி ஓவரில் 20 ரன்கள் தேவைப்பட அந்த ஓவரை சிறப்பாக வீசினார் ஜேக்கப் டஃப்பி. கைல் ஜெமிசன் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

ஆட்டநாயகன் - டேரில் மிட்செல் - 119

2வது போட்டி நேப்பியர் நகரில் நடைபெற்றது. மழை காரணமாக போட்டி 34 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது. வெஸ்ட் இண்டீஸ் கேப்டன் ஷாய் ஹோப் அதிரடியாக ஆடி 69 பந்துகளில் 13 ஃபோர்கள் மற்றும் 4 சிக்ஸர்கள் உட்பட 109 ரன்கள் அடித்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதன் மூலம் டெஸ்ட் ஆடும் 11 அணிகளுக்கும் எதிராக சதமடித்த முதல்வீரர் ஆனார் ஹோப். வெஸ்ட் இண்டீஸ் 247 ரன்களைக் குவித்தது. நாதன் ஸ்மித் 4 விக்கெட்டுகளையும், கைல் ஜெமிசன் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

நியூசிலாந்து துவக்க வீரர்கள் இணை 106 ரன்களை சேர்த்தது. ரச்சின் 56 ரன்களும், கான்வே 90 ரன்களும் அடித்தனர். கேப்டன் மிட்செல் சாண்ட்னர் 15 பந்துகளில் 34 ரன்கள் அடிக்க நியூசிலாந்து 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

ஆட்டநாயகன் - ஷாய் ஹோப் – 109*

3வது போட்டி ஹாமில்டன் நகரில் நடைபெற்றது. மாட் ஹென்றி 4 விக்கெட்டுகளையும், ஜேக்கப் டஃப்பி, சாண்ட்னர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்த வெஸ்ட் இண்டீஸ் 161 ரன்களுக்கு சுருண்டது. ராஸ்டன் சேஸ் போராடி 38 ரன்கள் அடித்தார்.

சேஸ் செய்த நியூசிலாந்து அணியில் விக்கெட்டுகள் விழுந்தாலும் மார்ச் சாப்மேன் அரைசதத்தால் (64) 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது. மேத்யூ போர்ட் மற்றும் ஜெய்டன் ஷீல்ஸ் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

ஆட்டநாயகன் - மாட் ஹென்றி - 4/43

தொடர் நாயகன் - கைல் ஜெமிசன் – 7 விக்கெட்டுகள்

****

லாரா வோல்வார்ட்

2025 ஐசிசி மகளிர் ஒருநாள் உலகக்கோப்பையில் லாரா வோல்வார்ட்டின் சாதனை படைத்த செயல்திறனானது, தென்னாப்பிரிக்க அணியின் தலைவராகவும், ஒரு பேட்டராகவும் இந்தத் தொடரில் சிறப்பாக செயலாற்றினார் என்பதே. அலிசா ஹீலியின் சாதனையை முறியடித்து மகளிர் ஒருநாள் உலகக் கோப்பையின் ஒரே பதிப்பில் அதிக ரன்கள் எடுத்த வீராங்கனையாக அவர் ஆனார்.

லாரா வோல்வார்ட் ஒருநாள் போட்டியில் தென்னாப்பிரிக்காவிற்காகக் குறைந்த வயதில் சதம் அடித்து சாதனை புரிந்த வீராங்கனை. 17 வயது 105 நாட்களில் அயர்லாந்துக்கு எதிராக 2016ல் சதம் அடித்தார். ஆனால் அந்த நேரத்தில் அந்தப் போட்டி ஒளிபரப்புகூட செய்யப்படவில்லை.

ஒருகட்டத்தில், அவர் மிகவும் மெதுவாக பேட்டிங் செய்தார் என்ற கருத்து எழுந்தது. ஒருநாள் போட்டிகளில் தனது முதல்ஆண்டில் 60க்கும் குறைவான ஸ்ட்ரைக் ரேட்டும், 2022 உலகக்கோப்பை வரை 70 ஸ்ட்ரைக் ரேட்டும் இருந்தது. ஆனால் அவர் குறிப்பிடத்தக்க அளவு டி20 கிரிக்கெட்டில் விளையாடி முன்னேற்றம் அடைந்தார். 2023 டி20 உலகக்கோப்பைக்குப் பிறகு அவர் கேப்டனாக நியமிக்கப்பட்ட நேரத்தில், தனது பேட்டிங்கில் திறம்பட செயல்பட்டு ஸ்ட்ரைக் ரேட்டை அதிகப்படுத்தி ரன்களைக் குவித்தார்.

வோல்வார்ட் கேப்டனாகப் பொறுப்பேற்றதற்குப் பின்பு தனது ஏழாவது இன்னிங்ஸில் ஒரு சதத்தையும், இரண்டு வருட இடைவெளியில் ஆறு சதங்களையும் அடித்திருந்தார். இந்த உலகக்கோப்பைக்கு முன்பு, வோல்வார்ட் ஒருநாள் போட்டிகளில் சராசரியாக 56.40 மற்றும் டி20 போட்டிகளில் 40.37 ரன்களைக் கேப்டனாக 122.30 ஸ்ட்ரைக் ரேட்டுடன் எடுத்தார்.

இந்த வலுவான திறமைகளுடன் இந்த உலகக்கோப்பையில் களம் இறங்கிய வோல்வார்ட்டின் முதல் இரண்டு போட்டிகள் 5 & 14 என்று மந்தமாகத் தொடங்கியது. அதற்குபின்பு தான் சூறாவளி தொடங்கியது என்று கூறலாம். இந்தியாவிற்கு எதிராக 70, இலங்கைக்கு எதிராக 60* மற்றும் பாகிஸ்தானுக்கு எதிராக 90 என்று வோல்வார்ட்டின் பேட்டிங் கிராஃப் மேலேசெல்ல ஆரம்பித்தது.

பின்னர்தான் அவர் தனது வாழ்நாளிற்கான இரண்டு இன்னிங்ஸ்களை விளையாடினார். அரையிறுதியில் இங்கிலாந்துக்கு எதிராக, வழக்கத்திற்கு மாறாக ஒரு அதிரடி ஆட்டத்தை ஆடினார். அந்தப்போட்டியில் தொடக்க ஆட்டக்காரராகக் களம் இறங்கி 48 ஓவர்கள் களத்தில் நின்று 20 ஃபோர் & 4 சிக்ஸ் என 143 பந்துகளில் 169 ரன்களைக் குவித்து, தென்னாப்பிரிக்கா 319 ரன்களைக் குவிக்க உதவினார். வலுவான இங்கிலாந்து அணியை 125 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றனர்.

இறுதிப்போட்டியிலும் இந்திய அணியின் பந்துவீச்சுக்கு சிம்ம சொப்பனமாக இருந்தது வோல்வார்ட்டின் பேட்டிங். தென்னாப்பிரிக்கா இறுதிப்போட்டியில் தோல்வியைத் தழுவினாலும் வோல்வார்ட் களத்தில் இருந்த வரை, அவர்களுக்கான வெற்றி நம்பிக்கையும் இருந்தது எதிரணிக்கு ஒரு அச்சமும் இருந்தது என்பதை மறுக்க முடியாது. 98 பந்துகளில் 11 ஃபோர் & 1 சிக்ஸ் என 101 ரன்களைக் குவித்து அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டியில் சதம் அடித்தார்.

ஒருநாள் உலகக்கோப்பைத் தொடரின் ஒரு பதிப்பில் அதிக ரன் எடுத்த வீரர் என்ற சாதனையை 571 ரன்கள் குவித்த லாரா வோல்வார்ட் படைத்தார்.

இந்தத் தொடரின்போது 5000 ரன்களைக் கடந்த வோல்வார்ட், தென்னாப்பிரிக்க மகளிர் அணியில் அதிக ரன் எடுத்த வீரர்களில் முதலிடத்திலும் சர்வதேச அளவில் 6 வது இடத்திலும் உள்ளார். தென்னாப்பிரிக்க மகளிர் அணியின் பெரும்நம்பிக்கையாக வோல்வார்ட்டின் பேட்டிங் இந்தத் தொடரில் இருந்துள்ளது.

லாரா வோல்வார்ட்டின் சர்வதேசப் பங்களிப்பு:

டெஸ்ட் - 4 போட்டிகள் - 1 சதம் / 1 அரை சதம் - 255 ரன்கள்

ஒரு நாள் - 119 போட்டிகள் - 11 சதங்கள் / 38 அரை சதங்கள் - 5222 ரன்கள்

T20 - 83 போட்டிகள் - 1 சதம் / 12 அரை சதங்கள்- 2088 ரன்கள்

தென்னாப்பிரிக்கா இறுதிப்போட்டியில் தோற்றாலும் லாரா வோல்வார்ட் பேட்டிங் மற்றும் கேப்டன்சியின் மூலம் கிரிக்கெட் ரசிகர்களால் பெரிதும் பாராட்டப்பெற்றார்.

"வாழ்த்துகள் லாரா வோல்வார்ட்"

அபுதாபி டி10 தொடர்

அபுதாபி டி10 தொடர் நவம்பர் 18 முதல் 30 வரை நடைபெற்றது. அன்பின் ஸ்டாலியன்ஸ், குவெட்டா கவல்ரி, அஜ்மன் டைட்டனின், விஸ்டா ரைடர்ஸ், நார்தர்ன் வாரியர்ஸ், யுஏஈ ஃபுல்ஸ், டெக்கான் கிளாடியேட்டர்ஸ், ராயல் சாம்ப்ஸ் என 10 அணிகள் பங்கேற்றன. ஹர்பஜன் சிங், ஸ்ரீசாந்த், முரளி விஜய் மற்றும் சில இந்திய வீரர்களும் ஆடினார்கள்.

முக்கியப்போட்டி என்றால், ராயல் சாம்ப்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் டெக்கான் கிளாடியேட்டர்ஸ் அணி 133 ரன்களை சேஸ் செய்து வென்றது. டேவிட் விஸே 21 பந்துகளில் 59* ரன்களும், மார்க்கஸ் ஸ்டோய்னிஸ் 22 பந்துகளில் 40* ரன்களும் அடிக்க 4 பந்துகளை மீதம் வைத்து வென்றது டெக்கான் கிளாடியேட்டர்ஸ்.

யுஏஈ ஃபுல்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் விஸ்டா ரைடர்ஸ் அணி 75 ரன்களே எடுத்தது. இந்த சீசனில் குறைந்தபட்ச ரன்கள் இது தான். முகமது ரோஹிட் 2 ஓவர்கள் வீசி 7 ரன்கள் மட்டுமே கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினார்.

குவெட்டா கவல்ரி - விஸ்டா ரைடர்ஸ் அணிகளுக்கு இடையிலான போட்டி டையில் முடிந்தது. முகமது அமீர் வீசிய சூப்பர் ஓவரில் விஸ்டா ரைடர்ஸ் அணி 12 ரன்கள் எடுத்தது. சேஸ் செய்த குவெட்டா கவல்ரி அணி ஒரு விக்கெட்டை இழந்தாலும் லியாம் லிவிங்ஸ்டன் சிக்ஸரால் வென்றது.

குவாலிபயர் 1, நவம்பர் 29

குவெட்டா கவல்ரி - 102/6

அன்ரிஸ் கோஸ் - 26

கரீம் ஜானட் - 2/9

அஸ்பின் ஸ்டாலியன்ஸ் - 103/3

ஸர்பேன் ரூதர்போர்டு - 66*

முகமது அமீர் - 1/5

அஸ்பின் ஸ்டாலியன்ஸ் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

ஆட்டநாயகன் ஸர்பேன் ரூதர்போர்டு - 66*

<u>எலிமினேட்டர், நவம்பர் 29</u>

யுஏஈ ஃபுல்ஸ் - 162/3

இந்த சீசனில் அடிக்கப்பட்ட அதிகபட்ச ரன்கள் இது.

பில் சால்ட் - 59

வாசிம் அக்ரம் - 1/27

அஜ்மன் டைட்டன்ஸ் - 115/4

அனேய்ரின் டோனால்ட் - 37

ஜுனைட் சித்திக் - 2/12

யுஏஈ ஃபுல்ஸ் 47 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

ஆட்டநாயகன் - பில் சால்ட் - 59

<u>குவாலிபயர் 2, நவம்பர் 30</u>

குவெட்டா கவல்ரி - 104/8

அன்ரிஸ் கோஸ் - 25

ஜேசன் ஹோல்டர் - 25*

முகமது ரோஹிட் - 3/13

யுஏஈ ஃபுல்ஸ் - 105/3

டிம் டேவிட் - 57*

முகமது அமீர் -2/22

யுஏஈ ஃபுல்ஸ் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

ஆட்டநாயகன் - முகமது ரோஹிட் - 3/13

<u>இறுதிப் போட்டி, நவம்பர் 30</u>

யுஏஈ ஃபுல்ஸ் - 150/1

டிம் டேவிட் - 98*

ஆஷ்மெட் நெட் வீசிய கடைசி ஓவரில் 5 சிக்ஸர்கள் உட்பட 32 ரன்கள் அடித்தார் டேவிட்.

ஹபீஸ் உர் ரெஹ்மான் - 1/25

அஸ்பின் ஸ்டாலியன்ஸ் - 70/4

ரஹ்மானுல்லா குர்பாஸ் - 18

பஸல்ஹக் பரூக்கி - 1/2

யுஏஈ ஃபுல்ஸ் 80 ரன்கள் வித்தியாசத்தில் சீசன் 9 கோப்பையை வென்றது.

ஆட்டநாயகன் - டிம் டேவிட் 98*

அதிக ரன்கள் அடித்த வீரர்கள்

- ✓ டிம் டேவிட் - 393
- ✓ பில் சால்ட் - 256
- ✓ ஜான்சன் சார்லஸ் - 249
- ✓ ரஹ்மானுல்லா குர்பாஸ் - 220
- ✓ பிரெண்டன் மெக்முலன் – 206

அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர்கள்

- ✓ ஆன்ட்ரே டை - 13
- ✓ அகிப் ஜாவேத் - 11
- ✓ ஸோகெர் இக்பால் - 10
- ✓ ஜுனைட் சித்திக் - 10
- ✓ கிறிஸ் க்ரீன் - 9

சத நாயகன்

மிர்பூரில் அயர்லாந்துக்கு எதிரான டெஸ்டில் ஆடிய முஸ்பிகூர் ரஹீமுக்கு அது 100வது டெஸ்ட் போட்டியாகும். 100 டெஸ்ட் போட்டிகளில் ஆடிய முதல் பங்களாதேஷ் வீரர் முஸ்பிகூர் ரஹீம். பங்களாதேஷ் அணி இதுவரை 156 டெஸ்ட் போட்டிகளில் ஆடியுள்ளது.

100வது டெஸ்ட் போட்டியில் சதமடித்தவர்கள் பட்டியலில் தன்னை இணைத்துக்கொண்டார் ரஹீம்.

100வது டெஸ்ட் போட்டியில் சதமடித்தவர்கள்

1. காலின் கவுட்ரே - இங்கிலாந்து - 1968
2. ஜாவெத் மியான்டட் - பாகிஸ்தான் - 1989
3. கார்டன் கிரினிட்ஜ் - வெஸ்ட் இண்டீஸ் - 1990
4. அலெக் ஸ்டுவர்ட் - இங்கிலாந்து - 2000
5. இன்சமாம் உல் ஹக் - பாகிஸ்தான் - 2005
6. ரிக்கி பாண்டிங் - ஆஸ்திரேலியா - 2006
7. க்ரீம் ஸ்மித் - தென்னாப்பிரிக்கா - 2012
8. ஹசிம் அம்லா - தென்னாப்பிரிக்கா - 2017
9. ஜோ ரூட் - இங்கிலாந்து - 2021
10. டேவிட் வார்னர் - ஆஸ்திரேலியா - 2022
11. முஸ்பிகூர் ரஹீம் - பங்களாதேஷ் - 2025

முத்தரப்புத் தொடர்

முதல் போட்டியில் பாகிஸ்தான் - ஜிம்பாப்வே அணிகள் மோதின. ஜிம்பாப்வே முதலில் பேட்டிங் செய்து 147 ரன்கள் எடுத்தது. துவக்கவீரர் பிரையன் பென்னட் வழக்கமான ஆட்டத்தை ஆடி 49 ரன்கள் எடுத்தார். கேப்டன் சிக்கந்தர் ரஸா 34* ரன்கள் அடித்தார். முகமது நவாஸ் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பாகிஸ்தான் 54 ரன்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்தபோதும், மிடில் ஆர்டரில் இறங்கிய பக்கர் ஸமான் 44, உஸ்மான் கான் 37* அடிக்க பாகிஸ்தான் 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது. பிராட் இவான்ஸ் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

ஆட்டநாயகன் - முகமது நவாஸ் - 2/22 & 21*

இரண்டாவது போட்டியில் இலங்கை - ஜிம்பாப்வே அணிகள் மோதின. இலங்கை அணிக்குக் கேப்டனாக தசுன் சானக செயல்பட்டார். ஈஸான் மலிங்கா இந்தப் போட்டியில் அறிமுகமானார்.

ஜிம்பாப்வே முதலில் பேட்டிங் செய்தது. பிரையன் பென்னட் மீண்டும் ஒரு 49, கேப்டன் ரஸா 47 ரன்கள் அடிக்க ஜிம்பாப்வே 162 ரன்களை சேர்த்தது. வானிந்து ஹசரங்க 3 விக்கெட்டுகளையும், ஈஸான் மலிங்கா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இலங்கை அணியில் கேப்டன் ஷானக (34) தவிர யாரும் பெரிய அளவில் ஆடவில்லை. இலங்கை 95 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. ஆசியக் கோப்பைக்கு முன்பாக ஜிம்பாப்வே உடனான போட்டியில் 100க்குக் குறைவான ரன்களில் இலங்கை ஆல்அவுட் ஆனது குறிப்பிடத்தக்கது.

பிராட் இவான்ஸ் 3 விக்கெட்டுகளையும், ரிச்சர்ட் இங்காரவா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். ஜிம்பாப்வே 67 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

ஆட்டநாயகன் - சிக்கந்தர் ரஸா - 47 & 1/23

3வது போட்டியில் பாகிஸ்தான் - இலங்கை அணிகள் மோதின. இலங்கை அணியில் விஜயகாந்த் வியாஸ்காந்த் மற்றும் ஜனித் லியனாகே இடம் பெற்றனர். இலங்கை அணியினரால் வேகமாக ரன்குவிக்க முடியவில்லை. 20 ஓவர்களில் 128 ரன்களே எடுத்தது. அதிகபட்சமாக லியனாகே 41* ரன்கள் அடித்தார். முகமது நவாஸ் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பாகிஸ்தான் துவக்கவீரர் ஷாகிப்ஸடா பர்ஹான் அதிரடியாக ஆடி 80* ரன்கள் அடிக்க பாகிஸ்தான் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் எளிதாக வென்றது.

ஆட்டநாயகன் - முகமது நவாஸ் - 3/16

4வது போட்டியில் பாகிஸ்தான் - ஜிம்பாப்வே அணிகள் மீண்டும் மோதின. ஷாகிப்ஸடா பர்ஹான் (63) & பாபர் அசாம் (74) அரைசதங்களால் பாகிஸ்தான் 195 ரன்கள் எடுத்தது. அதே சமயம் பக்கிம் அஸ்ரப் (3) & முகமது நவாஸ் (4) ஆகியோரை 4வது, 5வது களமிறக்கிய முயற்சி தோல்வியில் முடிந்தது. சிக்கந்தர் ரஸா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

சிக்கந்தர் ரஸா (23) மற்றும் ரியான் ப்ரூல் (63*) இரட்டை இலக்க ரன்கள் எடுத்ததால் ஜிம்பாப்வே 126 ரன்கள் எடுத்தது. பாகிஸ்தான் 69 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது. உஸ்மான் தாரிக் 4 விக்கெட்டுகளையும், முகமது நவாஸ் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகன் - உஸ்மான் தாரிக் - 4/18

5வது போட்டியில் பென்னட் (34), ரஸா (37) & ப்ரூல் (37*) எனப் பங்களிக்க ஜிம்பாப்வே 146 ரன்களை எடுத்தது. தீக்சானா மற்றும் ஹசரங்க தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இலங்கை அணியின் துவக்கவீரர் பதும் நிஸங்க 98* ரன்கள் அடிக்க 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது. நிஸங்க இரண்டு ஃபோர்கள் அடித்தால் சதமும் அடிக்கலாம், அணியும் வெற்றிபெறும் என்ற நிலையில் அவர் அடித்த பந்து சிக்ஸராகப் பறக்க சதத்தைத் தவறவிட்டார்.

ஆட்டநாயகன் - பதும் நிஸங்க - 98*

6வது போட்டியில் இலங்கை - பாகிஸ்தான் அணிகள் மோதின. இலங்கை வென்றால் இறுதிப்போட்டிக்கு செல்லும் என்ற நிலை. கமில் மிஸாரா அரைசதம் (76) அடித்தார். குஷால் மெண்டிஸ் 40 ரன்கள் அடித்தார். இலங்கை 184 ரன்களை எட்டியது. அப்ரார் அகமது 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இலங்கை, பாகிஸ்தான் விக்கெட்டுகளை சீரான இடைவெளியில் வீழ்த்தியது. கேப்டன் சல்மான் அகா - உஸ்மான் கான் இணை மற்றும் சல்மான் அகா - நவாஸ் இணை வெற்றிக்கு அருகில் கொண்டு சென்றது.

கடைசி ஓவரில் 10 ரன்கள் தேவைப்பட பக்கீம் அஸ்ரப் - சல்மான் அகா களத்தில் நின்றும் பெரிய ஷாட்கள் ஆடமுடியவில்லை. சிறப்பாக வீசினார் சமீர. இலங்கை 6 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

ஆட்டநாயகன் - துஷ்மந்த சமீர - 4/20

இறுதிப்போட்டியில் 10 ஓவர்கள் வரை சிறப்பாக பேட்டிங் செய்த இலங்கை, அதற்குப்பிறகு படுமோசமாக ஆடி 114 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. கமில் மிஸார அரைசதம் (59) அடித்தார். ஷாகின் அப்ரிடி, முகமது நவாஸ் தலா 3 விக்கெட்டுகளையும், அப்ரார் அகமது 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

சைம் அயூப் 36, பாபர் அசாம் 37* அடிக்க பாகிஸ்தான் எளிதாக 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது. பவன் ரத்னாயகே 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

ஆட்டநாயகன் - முகமது நவாஸ் - 3/17

தொடர் நாயகன் - முகமது நவாஸ் - 52 ரன்கள் & 10 விக்கெட்டுகள்

<u>அனாலிசிஸ்</u>

பாகிஸ்தான் அணிக்கு, பழகிய ஆடுகளம் என்பதால் போட்டியை எளிதாக எதிர்கொண்டது.

இலங்கை அணியைப் பொறுத்தவரை கேப்டன் காயம் காரணமாக வெளியேறியது பின்னடைவு. ஆசியக்கோப்பை போலவே கூடுதல் பேட்டரைக் களமிறக்கவா, கூடுதல் பந்துவீச்சாளரைக் களம் இறக்கவா என்ற குழப்பத்தில் இருந்தது. மீண்டு வந்து மீண்டும் தோற்றது.

ஜிம்பாப்வே அணிக்கு இலங்கையை வென்றது மாபெரும் உத்வேகத்தைக் கொடுத்து இருக்கும். பென்னட், ரஸா, ப்ரூல் பேட்டிங் நன்றாக உள்ளது. இங்காரவா, இவான்ஸ், ரஸா பந்துவீச்சு நன்றாக உள்ளது. இரண்டிலும் இன்னொரு துணை கிடைத்தால் உயரத்தைத் தொட வாய்ப்பு.

****

கிரிக்கெட் சினிமா

சபாஷ் மித்து (2022)

இந்திய அணியின் முன்னாள் கேப்டன் மிதாலி ராஜ்ஜின் கிரிக்கெட் பயணம் குறித்த படம். சில சமரசங்கள் செய்யப்பட்டு படமாக உள்ளது.



2017 மகளிர் உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் இந்திய அணி தோற்றபிறகு இந்தப் படத் தயாரிப்பு குறித்து பேசப்பட்டு, இடையில் கோவிட் காரணமாக நிறுத்தப்பட்டு, இயக்குநரை மாற்றி 2022ல் வெளியானது.

பரத நாட்டியம் ஆடிக்கொண்டு இருந்த மிதாலி, அவரது தோழி நூரி மூலமாகக் கிரிக்கெட் விளையாடப் பழகி, அதற்கான பயிற்சிகள் பெற்று, மகளிர் கிரிக்கெட் அரசியலை எதிர்கொண்டு, இந்திய அணியில் இடம் பெற்று, உலகக் கோப்பை இறுதிப் போட்டி வரை எப்படி சென்றார் என்று படம் சொல்கிறது.

மிதாலியாக டாப்ஸி உடல்மொழி மற்றும் நடிப்பில் ஈர்க்கிறார். அவரது குடும்பம் தமிழ் குடும்பம் என்பதால் அம்மாவாக தேவதர்ஷினியைத் தேர்வு செய்துள்ளனர். பயிற்சியாளராக விஜய் ராஸ்.

ஈகோவில் இருக்கும் கேப்டன், அதற்குத் தனது பேட்டின் மூலமாகப் பதில்சொல்லும் மிதாலி. இந்தியக் கிரிக்கெட்டில் மகளிருக்குப் பெரிய ஆதரவு இருக்காது என்று விரக்தி அடைந்து வீட்டிற்குப் போய் தோசை சுடுவது எனக் காட்சிகளில் கச்சிதம் காட்டி இருக்கிறார் இயக்குநர்.

நீலுவின் வருங்காலக் கணவர், நீ எனக்கு சச்சின் டெண்டுல்கரைக் காட்ட வேண்டும் என்று சொல்லும் நீலு, மிதாலியை இதுதான் எங்க சச்சின் டெண்டுல்கர் என்று சொல்லும் இடத்தில், சச்சினோடு ஒப்பிடுகிறார்கள் என்று சந்தோசப்படுவதா? ஏன் சச்சினோடு ஒப்பிட வேண்டும், தமக்கென

அங்கீகாரம் கிடைக்காதா என சந்தோஷம், தயக்கம் இரண்டையும் காட்டும் டாப்ஸி நடிப்பு சூப்பர்.

2017ல் இந்தியா திரும்பும்போது விமான நிலையத்தில் ரசிகர்கள் கத்த, அதே நேரத்தில் பிரதமரிடம் இருந்து வரும் அழைப்பு கண்கலக்க வைக்கிறது.

இந்தப் படம் நல்ல விமர்சனங்கள் பெற்று தயாரிப்பாளருக்கு லாபத்தைத் தரவில்லையாம். ஏன் என்று தெரியவில்லை. தமிழ் டப்பிங்கும் உள்ளது. கிரிக்கெட் நேசர்கள் தாராளமாகப் பார்க்கலாம்.

ஷார்ட்ஸ்

கைக்கு எட்டியது

மகளிர் பிக்பாஷ் தொடரில் அடிலெய்டு ஸ்ட்ரைக்கர்ஸ் - சிட்னி தண்டர் அணிகளுக்கு இடையிலான போட்டி 5 ஓவர்களாக நடைபெற்றது. அடிலெய்டு ஸ்ட்ரைக்கர்ஸ் அணி 45 ரன்கள் எடுத்தது. சேஸ் செய்த சிட்னி தண்டர் அணியின் கேப்டன் லிட்ச்பீல்ட் 15 பந்துகளில் 38 ரன்கள் எடுக்க 2.5 ஓவர்களில் 43 ரன்கள் எடுத்தது. அப்போது தூறல் விழ அம்பயர்கள் போட்டியைக் கைவிட்டனர். இன்னும் 3 ரன்கள் எடுத்தால் சிட்னி அணி வென்றிருக்கும். ஆனால் முடிவு இல்லாமல் போனது.

நியூசிலாந்து - இங்கிலாந்து ஒருநாள் தொடர்

முதல் ஒருநாள் போட்டி மவுண்ட் மங்கனுய்யில் நடைபெற்றது. நியூசிலாந்து முதலில் பந்துவீச முடிவுசெய்தது. மாட் ஹென்றி போட்டியின் முதல்பந்திலேயே ஜேமி ஸ்மித்தை வெளியேற்றினார். இங்கிலாந்து ஒருநாள் போட்டி என்பதை மறந்து 56 ரன்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்தது.

கேப்டன் ஹாரி புரூக் மற்றும் ஜேமி ஓவர்டன் இணை ஓரளவுக்கு தாக்குப்பிடித்து ஆடியது. ஹாரி புரூக் போராடி மூவிலக்க ரன்களை (135) எட்டினார். ஓவர்டன் தனது பங்காக 46 ரன்கள் எடுத்தார். வேறு யாரும் இரட்டை இலக்க ரன்கள் எடுக்கவில்லை. இங்கிலாந்து 223 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. ஸாக் பவுல்க்ஸ் 4 விக்கெட்டுகளையும், ஜேக்கப் டஃப்பி 3 விக்கெட்டுகளையும் வீழத்தினர்.

இங்கிலாந்தும் பந்து வீச்சில் பட்டையக் கிளப்பியது. 24 ரன்களுக்கு 3 விக்கெட்டுகளை வீழ்த்தியது. டேரில் மிட்செல் (78*) மற்றும் மைக்கேல் பிரேஸ்வெல் (51) அரைசதங்களால் நியூசிலாந்து 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது. பிரைடன் கார்ஸ் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

தோற்றாலும் தனித்துப் போராடிய ஹாரி புரூக் ஆட்டநாயகன் ஆனார்.

இரண்டாவது ஒருநாள் போட்டி ஹாமில்டனில் நடைபெற்றது. இந்தப் போட்டியிலும் ஹாரி புரூக் - ஜேமி ஓவர்டன் மட்டுமே ஆடினார்கள். ஓவர்டன் 42 ரன்கள் அடித்தார், ஹாரி புரூக் 34 ரன்களே அடித்தார். இங்கிலாந்து எடுத்தது 175 ரன்கள். பிளேர் டிக்னர் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். நாதன் ஸ்மித் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

டேரில் மிட்செல் இந்தப் போட்டியிலும் அரைசதம் (56*) அடித்து ஆட்டமிழக்காமல் இருந்தார். ரச்சின் ரவீந்திராவும் அரைசதம் (54) அடிக்க

நியூசிலாந்து 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது. ஆனால் நியூசிலாந்து ஆர்ச்சர் பந்துவீச்சைக் கவனமாக எதிர் கொண்டது. ஆர்ச்சர் 10 ஓவர்கள் வீசி 4 மெய்டன்களுடன் 23 ரன்களே கொடுத்து 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

ஆட்டநாயகன் - பிளேர் டிக்னர் - 4/34

3வது ஒருநாள் போட்டி வெலிங்டனில் நடைபெற்றது. இங்கிலாந்தின் இறுதிக்கட்ட வீரர்கள் இரட்டை இலக்க ரன்கள் எடுக்க இங்கிலாந்து எடுத்தது 222. ஜேமி ஓவர்டன் 68 ரன்கள் எடுத்தார். ஜாஸ் பட்லர் & பிரைடன் கார்ஸ் முறையே 38, 36 ரன்கள் எடுத்தனர். டிக்னர் 4 விக்கெட்டுகளையும், டஃப்பி 3 விக்கெட்டுகளையும் வீழத்தினர்.

இங்கிலாந்து இந்தப் போட்டியில் சிறப்பாகப் பந்துவீசியது. கான்வே, லாத்தம் இருவரும் பந்துவீச்சாளர் கைபட்டு வந்த பந்துகள் மறுமுனை ஸ்டம்பில் பட்டு

ரன்அவுட் ஆனார்கள். டேரில் மிட்செல்லை (44) ஒரு வழியாக அவுட் ஆக்கினார் சாம் கர்ரன். ஆனால் 9வது விக்கெட்டை வீழ்த்த முடியாமல் போனதால் நியூசிலாந்து 2 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது. சாம் கர்ரன், ஓவர்டன் தலா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

ஆட்டநாயகன் - பிளேர் டிக்னர் - 4/64 & 18*

<u>அலசல்</u>: - டி20 போட்டிகளில் சாதாரணமாக 200+ அடிக்கும் இங்கிலாந்து, ஒருநாள் போட்டிகளில் போராடித்தான் 200+ அடித்தது. அதுவும் நியூசிலாந்தின் சிறிய மைதானங்களில். பாஸ்பால் ஆட்டமுறை தான் இதற்குக் காரணமாக இருக்கமுடியும். ஒருநாள் போட்டிகளில் அடித்தாடி விக்கெட்டை இழந்தால் மீண்டு வரமுடியாது. அது மட்டுமின்றி இங்கிலாந்து பேட்டர்கள் ஒருநாள் போட்டிகளின் தன்மைக்கு மாறவே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அழகு
மசாலா
An Initiative of a Group of Woman
fssai
22424031000208
Home Made
PRODUCT
NO
Artificial flavors
Preservatives
Added colors
விலைப்பட்டியல்
(1 கிலோ) MRP புதிய விலை
மஞ்சள் தூள் ரூ.400 ரூ.300
தனி மிளகாய் தூள் ரூ.500 ரூ.350
மல்லி தூள் ரூ.350 ரூ.250
குழம்பு மிளகாய் தூள் ரூ.400 ரூ.320
ரசப்பொடி ரூ.700 ரூ.550
சாம்பார் பொடி ரூ.440 ரூ.350
பிரியாணி மசாலா ரூ.850 ரூ.700
கரம் மசாலா ரூ.750 ரூ.600
For Orders
888 30 29 301
Taste Made for you!
அனைத்து மசாலாக்களும் 50 கிராம் முதல் 1 கிலோ பேக்குகள் வரை கிடைக்கும்.
Page : 01

அழகு
மசாலா
An Initiative of a Group of Woman
fssai
22424031000208
Home Made PRODUCT
NO
Artificial flavors
Preservatives
Added colors
விலைப்பட்டியல்
(இட்லி பொடி வகைகள்)
(1 கிலோ) MRP புதிய விலை
இட்லி பொடி ரூ.350 ரூ.300
சென்னாகுன்னி பொடி ரூ.800 ரூ.600
கருவேப்பிலை பொடி ரூ.550 ரூ.450
Rice Mix
பருப்பு சாதம் பொடி ரூ.600 ரூ.400
For Orders
888 30 29 301
Taste Made for you!
அனைத்து மசாலாக்களும் 50 கிராம் முதல் 1 கிலோ பேக்குகள் வரை கிடைக்கும்.
Page : 02

அதிரடி கிரிக்கெட்

நேபாள் கிரிக்கெட் லீக்கில் லும்பினி லயன்ஸ் மற்றும் கர்னாலி யாக்ஸ் அணிகளுக்கு இடையிலான போட்டியில் லும்பினி லயன்ஸ் அணி முதலில் பேட்டிங் செய்து 156 ரன்கள் எடுத்தது.

சேஸ் செய்த கர்னாலி யாக்ஸ் அணியின் துவக்கவீரர் மார்க் வாட் (ஸ்காட்லாந்து) அதிரடியாக ஆடி 44 பந்துகளில் 114* ரன்கள் அடித்தார். இதனால் கர்னாலி யாக்ஸ் அணி 12.2 ஓவர்களில் இலக்கை எட்டியது. மார்க் வாட் 6 ஃபோர்களும் 12 சிக்ஸர்களும் அடித்தார். இதில் 5 சிக்ஸர்கள் எதிரணியின் கேப்டன் ரோகித் பவ்டெல் பந்துவீச்சில் என்பது குறிப்பிடத்தக்கது.

பங்களாதேஷ் - வெஸ்ட இண்டீஸ் இருபது - 20 தொடர்

ஒருநாள் தொடரை இழந்த வெஸ்ட் இண்டீஸ் அணி இருபது- 20 தொடருக்கு ஆக்ரோஷமாகக் களம் இறங்கியது. மூன்று போட்டிகளும் சாட்டோகிராம் நகரில் நடைபெற்றது.

முதல்போட்டியில் முதலில் பேட்டிங் செய்தது வெஸ்ட் இண்டீஸ். துவக்க வீரர்கள் இணை 59 ரன்களைச் சேர்த்தது. கேப்டன் சாய் கோப்பின் அதிரடி 46* மற்றும் ராவ்மென் பவல் அதிரடி 44* ரன்களால் வெஸ்ட் இண்டீஸ் 165 ரன்களை எட்டியது. தஸ்கின் அகமது 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இலக்கைத் துரத்திய பங்களாதேஷ் அணி பவர்ப்ளேவில் 4 விக்கெட்டுகளை இழந்தது. தான்ஸிம் ஹசன் ஷாகிப் அதிகபட்சமாக 33 ரன்களை எடுத்தார். பங்களாதேஷ் 149 ரன்களுக்கு ஆட்டம் இழந்தது. வேகப்பந்துவீச்சாளர்கள் ஜெய்டன் ஷீல்ஸ் மற்றும் ஜேசன் ஹோல்டர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர். அக்கீல் ஹொசைன் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார். வெஸ்ட் இண்டீஸ் தனது சிறப்பான பந்துவீச்சு மூலம் 16 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

2வது போட்டியிலும் வெஸ்ட் இண்டீஸ் முதலில் பேட்டிங் செய்தது. அணித்தலைவர் ஹோப் மீண்டும் அரைசதம் (55) அடித்தார். துவக்கவீரர் அலிக் அதானேஸ் பக்கபலமாக அரைசதம் (52) அடிக்க வெஸ்ட் இண்டீஸ் 9 விக்கெட்டுகளை இழந்து 149 ரன்களை எடுத்தது. முஸ்டாபிசூர் 3

விக்கெட்டுகளையும், நசும் அகமது மற்றும் ரிஷார்ட் ஹோசைன் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பங்களாதேஷ் துவக்க வீரர் டான்ஸிம் ஹசன் நிலைத்து நின்று ஆடி அரைசதம் (61) அடித்தார். மறுமுனையில் யாரும் துணைபுரியாததால் பங்களாதேஷ் 135 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. ரோமாரியோ ஷெப்பர்ட் மற்றும் அக்கீல் ஹொசைன் தலா 3 விக்கெட்டுகளையும், ஜேசன் ஹோல்டர் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். வெஸ்ட் இண்டீஸ் அணி 14 ரன்கள் வித்தியாசத்தில் போட்டியை வென்றதோடு தொடரையும் வென்றது.

3வது போட்டியில் பங்களாதேஷ் அணி முதலில் ஆடியது. துவக்கவீரர் டான்ஸிம் ஹசன் ஒன்பது ஃபோர்கள், 4 சிக்ஸர்கள் உட்பட 89 ரன்கள் எடுத்தார். மறுமுனையில் யாரும் துணைபுரியாததால் பங்களாதேஷ் 151 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. ரோமாரியோ ஷெப்பர்ட் 3 விக்கெட்டுகளையும், ஜேசன் ஹோல்டர் மற்றும் ஹாரி பிர்ரீ தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

வெஸ்ட் இண்டீஸ் அணியின் பொறுப்புக் கேப்டன் ராஸ்டன் சேஸ் மற்றும் அக்கீம் அகஸ்டே தலா 50 ரன்கள் எடுக்க 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது. ரிஷார்ட் ஹோசைன் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

ஷெப்பர்ட் 17வது ஓவரின் இறுதிப்பந்தில் நூருல் ஹசனை வீழ்த்தினார். 20வது ஓவரின் முதலிரு பந்துகளில் தான்ஸித் ஹசன் மற்றும் சோரிபுல் இஸ்லாமை வீழ்த்தி ஹாட்ரிக் விக்கெட் சாதனை படைத்தார்.

தொடர் நாயகன் - ரோமாரியோ ஷெப்பர்ட் - 7 விக்கெட்டுகள்

ஆஸ்திரேலியா - இந்தியா டி20 தொடர்

ஒருநாள் தொடரைப் பொறுத்தவரை புரியாத பார்மேட் போல் ஆடிய இந்திய அணி, டி20 தொடருக்கு நாங்கள் உலக சாம்பியன் என்று மார்தட்டிக் களமிறங்கியது.

முதல்போட்டி கான்பெர்ராவில் நடைபெற்றது. சுப்மன் கில் அணிக்குத் திரும்பியதால் சஞ்சு சாம்சன் இடம் கேள்விக்குறியானது. சஞ்சு அணியில் இருந்தார், ஆனால் துவக்க வீரராக இல்லை. ஆஸ்திரேலியா டாஸ் வென்று பந்துவீசியது. 5வது ஓவரில் பெய்த மழை, போட்டியை 18 ஓவர்களாகக் குறைத்தது. 10வது ஓவரில் பெய்த மழை போட்டியை முடித்து வைத்தது.

9.4 ஓவர்களில் 94 ரன்கள் அடித்து இந்தியா முத்திரை பதித்தது.

2வது போட்டி பாரம்பரியமிக்க மெல்போர்ன் மைதானத்தில் நடைபெற்றது. ஆஸ்திரேலியா இந்தப் போட்டியிலும் முதலில் பந்துவீசியது. ஜோஷ் ஹேசல்வுட் எந்தவிதப் போட்டி என்றாலும் எனது பந்து பேசும் என்கிற ரீதியில் வீசி 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். பார்லெட் & எல்லிஸ் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர். இந்தியா 125 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது.

அபிஷேக் சர்மா தனித்துப் போராடி அரைசதம் (68) அடித்தார். 3வது வீரராகக் களம் இறங்கி சஞ்சு சாம்சன் 2 ரன்களே எடுத்தார். துபேக்கு முன்பாகக் களமிறங்கிய ஹர்சித் ராணா 35 ரன்கள் அடித்தார். சிவம் துபே இந்திய அணிக்காக ஆடிய டி20 போட்டியில் முதல்தோல்வி என்று வரலாறு தன்னைப் பதிவு செய்துகொண்டது.

எளிய இலக்கைத் துரத்திய ஆஸ்திரேலியக் கேப்டன் மார்ஷ் அதிரடியாக ஆடி 46 ரன்கள் அடித்தார். இந்தியா இறுதிக்கட்டத்தில் சில விக்கெட்டுகளை வீழ்த்தியது. ஆனால் ஆஸ்திரேலியா 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது. பும்ரா, குல்தீப் மற்றும் வருண் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

ஆட்டநாயகன் - ஜோஷ் ஹேசல்வுட் - 3/13

3வது போட்டி ஹோபர்ட்டில் நடைபெற்றது. இந்தியா டாஸ் வென்று ஆஸ்திரேலியாவைப் பேட் செய்ய சொன்னது. இந்திய அணியில் குல்தீப், ராணா, சாம்சன் நீக்கப்பட்டு சுந்தர், அர்ஷதீப், ஜித்தேஷ் களம் கண்டனர்.

டிம் டேவிட் (74) & மார்க்கஸ் ஸ்டோய்னிஸ் (64) அரைசதங்களால் ஆஸ்திரேலியா 186 ரன்கள் எடுத்தது. அர்ஷதீப் 3 விக்கெட்டுகளையும், வருண் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பெரிய இலக்கை சேஸ் செய்த இந்திய அணியின் பேட்டர்கள் சிறிய பங்களிப்பை செய்தனர். வாசிங்டன் சுந்தர் (49*) - ஜித்தேஷ் சர்மா (22*) இணை வெற்றிக்கு அழைத்து சென்றது. இந்தியா 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது. நாதன் எல்லிஸ் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

ஆட்டநாயகன் - அர்ஷதீப் சிங் 3/35

4வது போட்டி கோல்ட் கோஸ்ட் நகரில் நடைபெற்றது. முதலில் பேட் செய்த இந்திய அணி தட்டுத்தடுமாறி 167 ரன்களை எட்டியது. சுப்மன் கில் 46 ரன்கள் அடித்தார். நாதன் எல்லிஸ் மற்றும் ஆடம் ஸாம்பா தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

ஆஸ்திரேலியத் துவக்க இணை சிறப்பாக ஆடினாலும், அதற்குப் பிறகு இந்தியா பந்துவீச்சில் இறுக்கியது. ஆஸ்திரேலியா 119 ரன்களுக்கு ஆல் அவுட் ஆக இந்தியா 48 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது. வாசிங்டன் சுந்தர் 3 விக்கெட்டுகளையும், அக்சர் பட்டேல் & சிவம் துபே தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகன் - அக்சர் பட்டேல் – 21* & 2/20

5வது போட்டி ஹப்பா மைதானத்தில் நடைபெற்றது. இந்திய அணியில் ரிங்கு சிங்கிற்கு வாய்ப்பு கிடைத்தது. இந்தியா முதலில் பேட்டிங் செய்து 4.5 ஓவர்களில் 52 ரன்கள் எடுத்த நிலையில் மழை வந்தது. கோப்பை இந்தியா வசம் வந்தது.

தொடர் நாயகன் - அபிஷேக் சர்மா - 163 ரன்கள்

ஷார்ட்ஸ்

கொல்கத்தா அணியில் இருந்து விடுவிக்கப்பட்ட ஆன்ட்ரே ரஸல் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். பாப் டு பிளசிஸ் மற்றும் மொயின் அலி பாகிஸ்தான் சூப்பர் லீக்கிற்கு செல்வதால் ஐபிஎல்லில் இருந்து விலகி உள்ளனர்.

இந்த மாதப் போட்டிகள் - டிசம்பர் 2025				
தேதி	**ஆடும் அணிகள்**		**மைதானம்**	**போட்டி**
டிசம்பர் 2-6	*நியூஸிலாந்து*	*வெஸ்ட் இண்டீஸ்*	*கிறிஸ்ட்சர்ச்*	*டெஸ்ட்*
டிசம்பர் 2	பங்களாதேஷ்	அயர்லாந்து	மிர்பூர்	டி20
டிசம்பர் 3	இந்தியா	தென் ஆப்பிரிக்கா	ராய்ப்பூர்	ஒருநாள்
டிசம்பர் 4-8	*ஆஸ்திரேலியா*	*இங்கிலாந்து*	*பிரிஸ்பேன்*	*டெஸ்ட்*
டிசம்பர் 6	இந்தியா	தென் ஆப்பிரிக்கா	விசாகப்பட்டினம்	ஒருநாள்
டிசம்பர் 9	இந்தியா	தென் ஆப்பிரிக்கா	கட்டாக்	டி20
டிசம்பர் 10-14	*நியூஸிலாந்து*	*வெஸ்ட் இண்டீஸ்*	*வெலிங்டன்*	*டெஸ்ட்*
டிசம்பர் 11	இந்தியா	தென் ஆப்பிரிக்கா	நியூ சண்டிகர்	டி20
டிசம்பர் 14	இந்தியா	தென் ஆப்பிரிக்கா	தரம்சாலா	டி20
டிசம்பர் 14-21	*ஆஸ்திரேலியா*	*இங்கிலாந்து*	*அடிலெய்டு*	*டெஸ்ட்*
டிசம்பர் 17	இந்தியா	தென் ஆப்பிரிக்கா	லக்னோ	டி20
டிசம்பர் 18-22	*நியூஸிலாந்து*	*வெஸ்ட் இண்டீஸ்*	*மவுண்ட் மங்கனுய்*	*டெஸ்ட்*
டிசம்பர் 19	இந்தியா	தென் ஆப்பிரிக்கா	அகமதாபாத்	டி20
டிசம்பர் 26-30	*ஆஸ்திரேலியா*	*இங்கிலாந்து*	*மெல்போர்ன்*	*டெஸ்ட்*

தென்னாப்பிரிக்காவின் இந்தியப் பயணம்

கடைசியாக ஆறு வருடங்களுக்கு முன்னதாக இந்திய மண்ணில் டெஸ்ட் போட்டியில் ஆடிய தென்னாப்பிரிக்க அணி, வேர்ல்டு டெஸ்ட் சாம்பியனாக இப்போது இந்தியா வந்துள்ளது டெஸ்ட் விளையாட. இரண்டு போட்டிகள் மட்டும் கொண்ட தொடராக இது அறிவிக்கப்பட்டுள்ளது. தென்னாப்பிரிக்க அணியிலுள்ள நிறைய வீரர்களுக்கு இது புதிதான இடம். அதிக சுழற்பந்துவீச்சாளர்களைக் கொண்ட இந்திய அணியைப் போலவே தென்னாப்பிரிக்க ஒட்டுமொத்த அணியிலும் 3 சுழற்பந்துவீச்சாளர்கள் இடம்பெற்றுள்ளனர்.

முதல் டெஸ்ட் போட்டியானது கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன் மைதானத்தில் தொடங்கியது. டாஸை வென்ற தென்னாப்பிரிக்காவின் கேப்டன் பவுமா பேட்டிங் செய்வதாக அறிவித்தார். அந்த அணியின் ஸ்டார் பவுலர் ரபாடா காயம் காரணமாக விளையாடவில்லை. இந்திய அணியின் விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேன் ரிஷாப் பண்ட் அணிக்குத் திரும்பினார். மற்றவர்கள் கடைசியாக மேற்கிந்தியத்தீவுகள் அணியுடனான டெஸ்ட்டில் விளையாடியவர்களே.

முதல் ரன் எக்ஸ்டராவில் நான்காக வந்ததில் இருந்து ஆட்டத்தைத் தொடங்கிய தென்னாப்பிரிக்கத் தொடக்க பேட்ஸ்மேன்கள் அதிரடி காட்டினர். ஒருபுறம் தனது முதல் ரன்னை அடிக்க 24 பந்துகள் மார்க்ரம் எடுத்துக்கொண்ட நிலையில் மறுபுறம் ரிக்கல்டன் பவுண்டரிகளாக நொறுக்கினார். 10 ஓவர்களில் 57 ரன்களை எடுத்திருந்தது அந்த அணி. ஆனால் அடுத்து 14 ரன்களை எடுப்பதற்குள் 3 விக்கெட்டுகளை இழந்தது. அதன்பிறகு டி சோர்ஸி மற்றும் முல்டர் கொஞ்சநேரம் தாக்குப்பிடித்தாலும் இவர்கள் அவுட்டானதும் மொத்தமாக சுருண்டது தென்னாப்பிரிக்க அணி 159 ரன்களுக்கு. மார்க்ரம் அடித்த 31 ரன்களே அதிகபட்சம். இந்தியப் பந்துவீச்சாளர் பும்ரா 5 விக்கெட்டுகளையும், சிராஜ் மற்றும் குல்தீப் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

முதல் பேட்டிங் இன்னிங்க்ஸைத் துவங்கிய இந்தியா நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. அதிலும் ஜெய்ஸ்வால் தான் சந்தித்த முதல் 12 பந்துகளில் ரன்கள் எதுவும் அடிக்கவில்லை. ஆனால் அதன்பின்பு அதிரடி காட்டிய ஜெய்ஸ்வால் 3 பவுண்டரிகள் அடித்ததோடு தனது வேலையை முடித்துக்கொண்டார். பதவி உயர்வுபெற்ற வாஷிங்டன் சுந்தர் அடுத்து ஆடவந்து இன்னும் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி 82 பந்துகளில் 29 ரன்களில் ஆட்டமிழந்தார். தனக்குக் கிடைத்த பதவி உயர்வை சரியாக அவர் பயன்படுத்தவில்லையோ என்று நினைத்த வேளையில் அடுத்தடுத்து வந்து ஆட்டமிழந்த இந்திய வீரர்களைப் பார்த்தபிறகு இவர் பரவாயில்லை என்று தோன்றியிருக்கும் ரசிகர்களுக்கு. ராகுல் 39, சுந்தர் 29, பண்ட் மற்றும் ஜடேஜா தலா 27 என அடிக்க 189 ரன்களுக்கு ஆல்அவுட் ஆனது இந்தியா. ஸ்பின்னர் ஹார்மர் 4 மற்றும் வேகப்பந்து யென்சன் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்கள்.

30 ரன்கள் பின்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸைத் துவங்கிய தென்னாப்பிரிக்க அணி பேட்ஸ்மேன்கள் முதல் இன்னிங்ஸைவிடத் துரிதமாக பெவிலியன் திரும்புவதில் ஆர்வம் காட்டினார்கள். 91 ரன்களுக்கு 7 விக்கெட்டுகளை வீழ்த்திய இந்திய பவுலர்கள் மீதி மூன்று விக்கெட்டுகளுக்கு 62 ரன்களை அடிக்கவிட்டார்கள். அதுவே அவர்களுக்கு பிரச்சினையாக அமைந்தது எனலாம். குறிப்பாக கோர்பின் போஸின் 25 ரன்கள் மிகமுக்கியமானவை. பவுமா கேப்டனுக்கான ஆட்டத்தை வெளிப்படுத்தி 55 ரன்கள் அடித்தார். ஜடேஜா 4 விக்கெட்டுகளும், குல்தீப் மற்றும் சிராஜ் தலா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினார்கள்.

காயம் காரணமாக முதல் இன்னிங்சில் வெளியேறிய சுப்மன் கில்லின் விக்கெட்டைக் கணக்கில் எடுத்துக்கொள்ளமுடியாமல் பண்ட் வழிநடத்த, வெறும் 124 ரன்களை சேஸ் செய்யக் களமிறங்கியது இந்தியா. மீண்டும் வாஷிங்டனின் 31 ரன்கள் தான் அதிகமான தனிநபர் ஸ்கோராக அமைய, மற்றவர்கள் விக்கெட் அணிவகுப்பு நடத்த, கடைசியில் அதிரடிகாட்டிப் போராடிய அக்சர் பட்டேலின் (26) ஆட்டமும் கைகொடுக்காமல் போக 30 ரன்கள் வித்தியாசத்தில் தோற்றுப்போனது இந்திய அணி. மீண்டும் ஹார்மர் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். யென்சன் மற்றும் மஹராஜ் தலா 2 விக்கெட்டுகளை எடுத்தார்கள்.

முடிவு: தென்னாப்பிரிக்க அணி 30 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி

ஆட்ட நாயகன்: சைமன் ஹார்மர் (8 விக்கெட்டுகள்)

முதல் போட்டியில் தோற்ற கவலை போதாது என்பதுபோல் காயம் காரணமாக அணித்தலைவர் சுப்மன் கில் இல்லாமல் களமிறங்கியது இந்திய அணி, இரண்டாவது போட்டியில். கில்லுக்குப் பதிலாக நிதிஷ் ரெட்டியும் அக்சருக்குப் பதிலாக சாய் சுதர்சனும் இடம்பெற்றார்கள். தென்னாப்பிரிக்க அணியில் போஸ்க்குப் பதிலாக முத்துசாமி களமிறங்கினார். டாஸை வென்ற பவுமா தென்னாப்பிரிக்க அணி பேட்டிங் செய்யும் என்று அறிவித்தார். முதல் போட்டியைவிட இந்தப் போட்டி நடக்கும் குவுகாத்தி மைதானத்தில் பேட்டிங் நன்றாக வரும் என்று கணிக்கப்பட்டிருந்தது. இந்த மைதானத்தில் நடக்கும் முதல் டெஸ்ட் போட்டி இது என்பது குறிப்பிடத்தக்கது.

கவனமாக ஆடத்தொடங்கியது தென்னாப்பிரிக்க அணியின் தொடக்க ஜோடி. அவ்வப்போது பவுண்டரிகளைப் பறக்கவிட்டாலும் ரன்ரேட் மெதுவாகவே இருந்தது. 14 வது ஓவரிலேயே சுழற்பந்தைக் கொண்டுவந்தார் பண்ட். ஆனாலும் தொடர்ந்து நன்றாக ஆடிய இந்த இணை 27 வது ஓவரில் தான் பிரிந்தது. அடுத்தடுத்து ஓப்பனர்கள் இருவரும் ஆட்டமிழந்தாலும் அதற்கடுத்து வந்தவர்களும் நன்றாக ஆட நல்ல ஸ்கோரை எடுத்தது தென்னாப்பிரிக்க அணி முதல் நாளின் முடிவில். இரண்டாம் நாளிலும் சோதனை கொடுத்தனர் அந்த அணியின் பின்வரிசை பேட்ஸ்மேன்கள். கடைசி 4 விக்கெட்டுகள் மட்டும் 243 ரன்களைக் குவித்தனர். முடிவில் 489 ரன்களுக்கு ஆட்டமிழந்தது அந்த அணி. ஹார்மரைத் தவிர மற்ற அனைவரும் இரண்டிலக்க ரன்களை அடித்தார்கள் அந்த அணியில். இந்த டெஸ்ட்டில் இடம்பெற்ற முத்துசாமி செஞ்சுரியை அடித்தார். யென்சன் தனது பங்கிற்கு 93 ரன்களை நொறுக்கினார் 91 பந்துகளில். குல்தீப் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இரண்டாவது இன்னிங்சைத் துவங்கிய இந்திய பேட்ஸ்மேன்களும் எச்சரிக்கையுடன் ஆடினர். ராகுல் முதல் விக்கெட்டாக விழுந்து தொடங்கிவைக்க, ஜெய்ஸ்வால் அடித்தது போதும் என அரைசதத்துடன் வெளியேற, மறுவாய்ப்பு பெற்ற சாய் சுதர்சனும் 15 ரன்களில் வெளியேற, பொறுப்பின்றி ஆடி கேப்டன் பண்ட்டும் அவுட்டாக, வாஷிங்டன் சுந்தர் போராடி அடித்த 48 மற்றும் குல்தீப்பின் 134 பந்துகளில் அடித்த 19 ரன்களால் 201 ரன்களுக்கு ஆட்டம் இழந்தது இந்திய அணி. தென்னாப்பிரிக்க அணியின் யென்சன் 6 மற்றும் ஹார்மர் 3 என விக்கெட்டுகளைப் பகிர்ந்துகொண்டனர். இந்திய மண்ணில் இந்திய பேட்ஸ்மேன்களின் ஆட்டம் மெச்சும்படி இல்லை தென்னாப்பிரிக்க அணியைக் கருத்தில்கொள்ளும்போது.

பாலோ-ஆன் ஆனபோதிலும் இந்தியாவை அடுத்த பேட்டிங் இன்னிங்ஸ் ஆடச்சொல்லாமல் தென்னாப்பிரிக்க அணி தனது ரெண்டாவது பேட்டிங் இன்னிங்ஸை ஆடியது. ஒப்பனர்கள் தங்களது பணியை மீண்டும் நன்றாக செய்து முதல் விக்கெட்டுக்கு 59 ரன்களை சேர்த்தார்கள். டி சோர்சி 49 மற்றும் ஸ்டப்ஸ் 94 என அடிக்க பின்னவர் அவுட்டானதும் தனது இன்னிங்க்ஸை முடித்துக்கொள்வதாக அறிவித்தது அந்த அணி. நான்காவது நாளில் இன்னும் 18 ஓவர்கள் இருக்கையில் தென்னாப்பிரிக்க அணி இந்திய அணியைப் பேட்டிங் செய்ய சொன்னது 549 என்ற டார்கெட்டை நோக்கி. ஜடேஜா 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

நான்காவது இன்னிங்சில் இமாலய இலக்கை நோக்கி நடைபோடத் தொடங்கிய இந்திய அணி நான்காவது நாளின் முடிவிலேயே 27 க்கு 2 விக்கெட்டுகளை இழந்து விழிபிதுங்கி நின்றது. ஐந்தாம் நாளில் தொடர்ந்து ஆடிய இந்திய பேட்ஸ்மேன்கள் வருவதும் போவதுமாக இருக்க ஜடேஜா

அடித்த அரைசதத்துடன் திருப்தியடைந்து 140 ரன்களுக்கு ஆல்அவுட்டாகி 408 ரன்கள் வித்தியாசத்தில் மிகப்பெரிய தோல்வியை அடைந்தது. 139 பந்துகளை சந்தித்து 14 ரன்களுடன் இந்த இன்னிங்சிலும் சோபிக்கவில்லை சாய் சுதர்சன். ஹார்மர் 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

ஆட்ட நாயகன்: யென்சன் (93 ரன்கள் மற்றும் 7 விக்கெட்டுகள்)

தொடர் நாயகன்: ஹார்மர்

அலசல்:

சொந்த மண்ணில் இவ்வளவு மோசமாக இந்திய அணி சமீப காலங்களில் ஆடியதில்லை. பேட்டிங் பவுலிங் ஆல்ரவுண்டர் காம்போ என ஆடும் பதினொன்று பேர்களில் தேர்வில் குறையிருந்தாலும், ஒவ்வொரு ஆட்டக்காரரும் தனித்திறமையுடன் இருந்தும் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பணியை சிறப்புற செய்யவில்லை எனலாம். பவுலிங் ஓரளவுக்கு சரியாகவே இருந்தாலும் பேட்ஸ்மேன்களின் சொதப்பல்தான் முழுக்காரணம் இந்தத் தொடர் தோல்விக்கு.

****

சாதனைத் துளிகள்

அதிக சர்வதேசப் போட்டிகள் கேப்டன்கள்

வ. எண்	வீரர்	அணி	வென்ற போட்டிகள்	டெஸ்ட்	ஒருநாள்	டி20
1	ரிக்கி பாண்டிங்	ஆஸ்திரேலியா	220	48	165	7
2	மகேந்திர தோனி	இந்தியா	178	27	110	41
3	க்ரீம் ஸ்மித்	தென் ஆப்பிரிக்கா	163	53	92	18
4	ஆலன் பார்டர்	ஆஸ்திரேலியா	139	32	107	-
5	விராட் கோலி	இந்தியா	135	40	65	30
6	ஸ்டீபன் பிளெமிங்	நியூஸிலாந்து	128	28	98	2
7	ஹன்சி குரேனே	தென் ஆப்பிரிக்கா	126	27	99	-
8	இயான் மோர்கன்	இங்கிலாந்து	118	-	76	42
9	ஸ்டீவ் வாஹ்	ஆஸ்திரேலியா	108	41	67	0
10	கேன் வில்லியம்சன்	நியூஸிலாந்து	107	22	46	39

ஐபிஎல் விடுவிக்கப்பட்ட வீரர்கள்

சென்னை சூப்பர் கிங்ஸ்

ரவீந்திர ஜடேஜா – 18 → ராஜஸ்தான் ராயல்ஸ்#

மதீஷா பதிரான - 13

*ரவிச்சந்திரன் அஸ்வின் – 9.75**

டேவோன் கான்வே - 6.25

ரச்சின் ரவீந்திரா - 4

ராகுல் திரிபாதி – 3.4

சாம் கர்ரன் -2.4 → ராஜஸ்தான் ராயல்ஸ்#

தீபக் ஹூடா – 1.7

விஜய் சங்கர் – 1.2

வன்ஷ் பேடி – 0.55

கமலேஷ் நாகர்கோட்டி – 0.3

ஷேக் ரஷீத் – 0.3

ஆன்ட்ரே சித்தார்த் – 0.3

டெல்லி கேப்பிட்டல்ஸ்

ஜேக் பிரேசர் மெக்கர்க் - 9

ஹாரி புரூக் – 6.25

முஸ்டாபிசூர் ரஹ்மான் - 6

மோகித் சர்மா – 2.2

*பாப் டு பிளசிஸ் – 2***

செடிக்குல்லா அடல் – 1.25

டோனோவன் பெரீரியா- 1 → ராஜஸ்தான் ராயல்ஸ்#

மன்வந்த் குமார் – 0.3

தர்ஷன் நல்கண்டே – 0.3

குஜராத் டைட்டன்ஸ்

ஷெர்பேன் ரூதர்போர்டு – 2.6 → மும்பை இந்தியன்ஸ்#

ஜெரால்ட் கோட்ஸி - 2.2

மஹிபால் லோம்ரார் – 1.7

கரீம் ஜானட் – 0.75

தசுன் ஷானக - 0.75

குஷால் மெண்டிஸ் - 0.75

குல்வந்த் கெஜோரோலியா – 0.3

<u>கொல்கத்தா நைட் ரைடர்ஸ்</u>

வெங்கடேஷ் ஐயர் – 23.75

*ஆன்ட்ரே ரஸல் – 12**

அன்ரிச் நோர்க்கே – 6.5

குயின்டன் டீ காக் – 6.6

ஸ்பென்சர் ஜான்சன் – 2.8

*மொயின் அலி – 2***

ரஹ்மானுல்லா குர்பாஸ் - 2

சேட்டன் சக்காரியா - 0.75

லுவ்னித் சிசோடியா – 0.75

சிவம் சுக்லா – 0.3

மயங்க் மார்கண்டே → மும்பை இந்தியன்ஸ்#

<u>லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ்</u>

ரவி பிஸ்னாய் - 11

ஆகாஷ் தீப்- 8

டேவிட் மில்லர் – 7.5

வில் ஓ ரூர்க்கி - 3

சர்துல் தாகூர் – 2 → மும்பை இந்தியன்ஸ்#

சமர் ஜோசப் - 0.75

யுவராஜ் சௌத்ரி – 0.3

ராஜ்வர்தன் ஹங்கரேகர் - 0.3

ஆர்யன் ஜுயல் – 0.3

<u>மும்பை இந்தியன்ஸ்</u>

ஜானி பேர்ஸ்டோ – 5.25

முஜீப் உர் ரஹ்மான் - 2

ரிச்சர்ட் கிளீஸன் - 1

சரித் அசலங்க - 0.75

ரீஸ் டாப்லே – 0.75

லிஸாட் வில்லியம்ஸ் - 0.75

கரன் சர்மா - 0.3

பெவோன் ஜேக்கப்ஸ் – 0.3

விக்னேஷ் புதூர் – 0.3

சத்யநாராயண ராஜூ – 0.3

கிருஷ்ணன் ஸ்ரீஜித் – 0.3

அர்ஜுன் டெண்டுல்கர் – 0.3 → லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ்#

<u>பஞ்சாப் கிங்ஸ்</u>

கிளென் மேக்ஸ்வெல் – 4.2

ஜோஷ் இங்லிஷ் – 2.6

கைல் ஜேமிசன் - 2

ஆரோன் ஹார்டி – 1.25

குல்தீப் சென் – 0.8

பிரவீன் துபே – 0.3

<u>ராஜஸ்தான் ராயல்ஸ்</u>

சஞ்சு சாம்சன் – 18 → சென்னை சூப்பர் கிங்ஸ்#

வானிந்து ஹசரங்க – 5.25

மகீஸ் தீக்சானா – 4.4

நித்திஷ் ராணா – 4.2 → டெல்லி கேப்பிட்டல்ஸ்#

பஸல்ஹக் பரூக்கி - 2

ஆகாஷ் மத்வால் – 1.2

குமார் கார்த்திகேயா – 0.3

குணால் சிங் ராத்தோர் – 0.3

அசோக் சர்மா – 0.3

<u>ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு</u>

லியான் லிவிங்ஸ்டன் – 8.75

டிம் செய்பிரட் - 2

லுங்கி நிகிடி - 1

மயங்க் அகர்வால் - 1

பிளசிங் முசாராபானி – 0.75

மனோஜ் பண்டாகே - 0.3

ஸ்வஸ்திக் சிக்காரா – 0.3

மோகித் ரதீ – 0.3

<u>சன்ரைசர்ஸ் ஹைதராபாத்</u>

முகமது சமி – 10 → லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ்#

ராகுல் சகார் – 3.2

அபினவ் மனோகர் – 3.2

ஆடம் ஸாம்பா – 2.4

ஸிமர்ஜித் சிங் – 1.5

வியான் முல்டர் – 0.75

சச்சின் பேபி -0.3

அதர்வா டைடே – 0.3

#அணி மாறிய வீரர்கள்

**ஒய்வு பெற்ற வீரர்கள்*

***ஐபிஎல்லை விட்டு வெளியேறிய வீரர்கள்*

ரசிகன்

துடுப்பாட்டம் தொடர்ந்து வாசிக்கிறீர்களா? நிறை குறை என்ன?

துடுப்பாட்டம் இதழைத் தொடர்ந்து வாசிக்கிறேன். தமிழில் முழுக்க முழுக்கக் கிரிக்கெட் பற்றிய இதழ் என்பது ஒரு பெரிய கனவு.

அதை நிறைவேற்றியதோடு மட்டுமல்லாமல், தொடர்ந்து சிறப்பாக இயங்கி வருகிறது. சுவாரசியமான கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிடுவது அதனுடைய நிறை.

குறை என்று பெரிதாக எதுவும் இல்லை.

உங்களுக்குப் பிடித்த கிரிக்கெட் வீரர் யார்? ஏன்?

கபில்தேவ். இந்தியாவின் கிரிக்கெட் போக்கையே மாற்றியவர் என்று சொல்லலாம்.

வேகப்பந்துவீச்சாளர் என்ற ஒரு இனமே இல்லாத இந்தியாவில் தன் உயிரைக் கொடுத்துப் போராடி அணியில் இடம்பிடித்து இந்திய அணி தலைநிமிரக் காரணமாக இருந்தவர்.

இன்றுவரை கபில்தேவ்போல ஒரு ட்ரூ பவுலிங் ஆல்ரவுண்டர் இந்திய அணிக்குக் கிடைக்கவில்லை.

83ல் மட்டும் உலகக்கோப்பை வென்றிருக்காவிட்டால் இவ்வளவு பேரைக் கிரிக்கெட் அப்போது சென்று சேர்ந்து இருக்குமா என்பது சந்தேகமே.

இன்றும் ஆச்சரியமாகவே இருக்கும். எப்படி ஒரு உலகத்தரமான வீரர் அத்தனை எதிரான அமைப்புகளையும் தாண்டி உருவானார் என்று.

அத்தனைக்கும் காரணம் கபில்தேவின் திறமையும் உழைப்போம் அஞ்சாத மனமும் தான்.

உங்கள் மனதுக்கு நெருக்கமான கிரிக்கெட் போட்டி எது?

இன்றுவரை என் மனதிற்கு மிகவும் நெருக்கமான கிரிக்கெட் போட்டி 1986 சேப்பாக்கத்தில் நடைபெற்ற இந்தியா ஆஸ்திரேலியா இடையிலான டெஸ்ட் போட்டி.

சென்னையில் நடைபெற்றதால் ரேடியோக்களில் தமிழ் கமெண்ட்ரி. தெருவில் இருந்த வசதியான ஒரு வீட்டில் கலர் டிவியில் பார்க்கக் கிடைத்த வாய்ப்பு.

இன்று வரை அந்த போட்டியின் ஒவ்வொரு வீரரின் ஸ்கோரும் ஞாபகத்தில் இருக்கிறது. முதலில் பேட்டிங் பிடித்த ஆஸ்திரேலியா 600 ரன்களைக் கடக்க, கிட்டத்தட்ட பாலோ ஆன் பெறும் நிலையில் இருந்த இந்தியாவைக் கபில்தேவ் சதம் அடித்துக் காக்க, ஆஸ்திரேலியா கேப்டன் அலன் பார்டர் இரண்டில் ஒன்று பார்த்துவிடுவோம் என்று விரைவாக ரன்களை சேர்த்து டிக்ளேர் செய்ய, அந்த ஐந்தாம் நாள் ஆட்டம், எத்தனை ஏற்ற இறக்கங்கள். ஒவ்வொரு ரன்னும் ஒவ்வொரு விக்கெட்டும் ஞாபகத்தில் இருந்து போகவே மாட்டேன் என்கிறது.

மேட்ச் டையில் முடிவடைந்தது என்று வானொலியில் சொன்னபோது அதைப்பற்றியே கிட்டத்தட்ட அன்று இரவு முழுவதும் பேசிக்கொண்டிருந்தோம்.

ஒரு ரன்னில் போச்சே ஒரு ரன்னில் போச்சே என்பதுதான் அப்போது எங்கள் மனநிலை.

உங்களுக்குப் பிடித்த கிரிக்கெட் பார்மேட் எது? ஏன்?

பிடித்த பார்மட் டெஸ்ட் கிரிக்கெட் தான். ஏனென்றால் அதுதான் பந்துவீச்சாளருக்கும் பேட்ஸ்மனுக்கும் சமமான வாய்ப்பு வழங்குவதாக இருக்கிறது.

எவ்வளவு பெரிய பவுலராக இருந்தாலும் ஒன் டே மற்றும் 20-20யில் நிர்ணயிக்கப்பட்ட ஓவர்கள் மட்டுமே வீச முடியும்.

பீல்டிங் ரெஸ்ட்ரிக்சன் வேறு. முழுக்க முழுக்க பேட்ஸ்மேன்களுக்கு சாதகமாகவே உருவாக்கப்பட்ட ஆட்டங்கள் ஒன் டே மட்டும் 20-20.

டெஸ்ட் மேட்ச் தான் சமமான வாய்ப்பை வழங்குவதோடு, ஒரு கிரிக்கெட் ஆட்டக்காரனின் அத்தனை திறமைகளையும் பரிசோதிக்கும்.

வீக்னஸ் இருக்கும் பேட்ஸ்மேன்கள் ஒன் டே மற்றும் 20-20 யில் சமாளித்து விடுவார்கள்.

ஆனால் டெஸ்ட் போட்டியில் வியூகம் அமைத்து வீழ்த்திவிடலாம். மற்ற போட்டிகளில் கொஞ்சம் ரன் போனாலே பயந்து போய் வியூகத்தைக் கலைத்துவிடுவார்கள்.

இங்கிலாந்து அணியில் ஒரு நாள் போட்டி அணுகுமுறை (உலகக்கோப்பை வெற்றிக்குப் பின்பு அந்த ஃபார்மட்டில் அவர்களின் டவுன் ஃபால்) குறித்து உங்கள் பார்வை.

காம்போசிட் பற்றி சொல்லும்போது சொல்வார்கள் அல்லது எளிய உதாரணத்திற்குக் கான்கிரீட் கலவையையும் எடுத்துக் கொள்ளலாம்.

எவ்வளவுதான் தரமான உறுதியான மெட்டீரியல் உபயோகித்தாலும், மேட்ரிக்ஸ் இல்லாவிட்டால் அது கட்டுக்கோப்பாக இருக்காது. வரும் லோடைத் தாங்க முடியாது.

உறுதியானதாக இல்லாமல் வெறும் மேட்ரிக்ஸ் மட்டும் இருந்தால் அதுவும் எளிதில் உடைந்துவிடும்.

எனவே கலவை சரியாக இருக்க வேண்டும். 80% அதிரடி ஆட்டக்காரர்கள் இருந்தால் 20% நிலைத்து நின்று ரொட்டேட் செய்பவர்கள் நிச்சயம் வேண்டும்.

அப்படியான ஆட்டக்காரர்களைத் தவிர்த்தால் தோல்வி கிடைக்கத்தான் செய்யும்.

ஆப்கானிஸ்தான், நமீபியா அணிகளின் எழுச்சி, வெஸ்ட் இண்டீஸ், ஜிம்பாப்வே அணிகள் வீழ்ச்சி குறித்து...

பொருளாதார ரீதியான பார்வையும் இதற்குத் தேவைப்படுகிறது.

ஆப்கானிஸ்தான், நமீபியா போன்ற நாடுகள் மற்றும் கிரிக்கெட் வீரர்களுக்கு கிரிக்கெட் மூலம் நல்ல வருமானம் கிடைக்க வாய்ப்பு உண்டு. நிறைய 20-20 மேட்ச்களில் பங்கெடுத்து வாழ்வில் உயரலாம் என்கிற ஆவல் அந்நாட்டு மக்களுக்கு வரும்பொழுது இயல்பாகவே ஒரு எழுச்சி ஏற்படும்.

மாறாக மேற்கிந்தியத்தீவுகள் அணியின் கிரிக்கெட் உச்சகட்டத்தில் இருந்தபோதுகூட அவர்களுக்குத் தேவையான பொருளாதார வசதி கிடைக்கவில்லை. அவர்களுடைய உயரம் மற்றும் உடல்திறன் காரணமாக பேஸ்கட்பால், பேஸ்பால் போன்ற விளையாட்டுகளுக்கு மிகத்

திறமையானவர்கள் இடம்பெயர்ந்தார்கள். கிரிக்கெட்டை விட அதிக பணம் கிடைக்கும் விளையாட்டுப் போட்டிகள் இருக்கும்பொழுது மிகத் திறமையானவர்கள் அங்கே இடம் பெயர நினைப்பார்கள்.

ஜிம்பாப்வே அணியைப் பொறுத்தவரை அவர்கள் நாட்டுப் பிரச்சனை மற்றும் இன ரீதியான பிரச்சனை ஆகியவை ஒரு தடையாக இருக்கிறது என நினைக்கிறேன்.

சமீபத்திய மகளிர் உலகக்கோப்பை வெற்றி, இந்திய மகளிர் அணி கடந்து வந்த பாதை உங்கள் பார்வையில்?

இந்திய அணியில் முன்னர் விளையாட்டு நுணுக்கம் தெரிந்த வீராங்கனைகள் இருந்தாலும் உடல்ரீதியாக மற்ற அணிகளோடு ஒப்பிடுகையில் வலுகுறைந்தவர்களாக இருந்தார்கள்.

தற்போது அதில் முன்னேற்றம் இருக்கிறது. அது வெற்றி வாய்ப்பை அதிகரிக்கிறது.

எப்படி கிரிக்கெட்டில் தொடர்ந்து ஆஸ்திரேலிய அணியால் ஆதிக்கம் செலுத்த முடிகிறது?

ஆஸ்திரேலியா அணியின் தொடர் வெற்றிக்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

முதல் காரணம் அங்கே இருக்கும் வலுவான உள்ளூர் கிரிக்கெட் அமைப்பு. அங்கே நன்றாக விளையாடி அந்தக் கூட்டத்திலிருந்து மேலே வருபவர்கள்தான் அணிக்கு உள்ளே வரமுடியும். ஹெய்டன், ஹசி போன்றவர்களுக்குக்கூட உள்ளே வருவது தாமதம் ஆனது.

அப்படி ஒரு திறமையான கிரிக்கெட் அமைப்பு கொண்டது ஆஸ்திரேலியா டொமஸ்டிக்.

அதற்கு அடுத்தபடியாக, அவர்கள் தொடர்ந்து பரிசோதனை முயற்சிகளை மேற்கொண்டே இருக்கிறார்கள்.

90களில் பீல்டிங்பற்றியே மற்ற அணிகள் யோசிக்காத நிலையில், இரண்டு கைகளாலும் துரோ செய்வது, பிக்கப் த்ரோ, மோஷன் ஸ்டடி (motion study), டைம் ஸ்டடி (time study) எல்லாம் செய்து எப்படி ஒரு ஃபீல்டர் பந்தை அப்ரோச் செய்ய வேண்டும் எப்படி த்ரோ செய்யவேண்டும் என்றெல்லாம் தொடர்ந்து ஆய்வுகள் ஒர்க்ஷாப்புகள் நடந்தன.

இதுபோலவே பேட்டிங், பௌலிங் என எல்லாத்துறைகளிலும் அவர்கள் தொடர்ச்சியாகத் தங்களை மேம்படுத்திக்கொள்வது முக்கியக் காரணம்.

இன்னொரு விஷயம் இந்திய அணியின் முக்கிய வீரர்களுக்கு இருக்கும் பிரஷர் போல அவர்களுக்கு வென்றே ஆகவேண்டும் என்ற பிரஷர்

இருப்பதில்லை. வெல்லவேண்டும் என்பதை ஒரு வாடிக்கையாக வைத்திருக்கிறார்களே தவிர அதனைத் தலைக்கு ஏற்றிக்கொள்வதில்லை.

அதனால் சிக்கலான நேரங்களில் அவர்கள் தெளிவாக சிந்தித்து விளையாடுகிறார்கள்.

நீங்கள் பள்ளி, கல்லூரி, மாவட்ட அணிகளில் அல்லது ஊர் அணியில் கிரிக்கெட் ஆடியுள்ளீர்களா?

தெரு அணியில் மட்டும்தான் விளையாடி இருக்கிறேன்.

துடுப்பாட்டம் அச்சுப்பிரதி வந்தால் வரவேற்பு இருக்குமா? உங்கள் பார்வை?

துடுப்பாட்டம் அச்சுப்பிரதி வந்தால் வாசிக்கும் பழக்கம் உடைய கிரிக்கெட் ஆர்வலர்களிடம் நல்ல வரவேற்பு இருக்கும்.

ஆனால் அதற்கு முன்னர் ஒரு குறைந்தபட்ச ஆதரவைத் தமிழ்கூறும் நல்லுலகில் பெருக்கிக்கொள்வது நல்லது.

இன்னும் நிறைய வாசிக்கும் பழக்கம் உள்ளவர்களிடம் இந்த மின்இதழ் சென்றுசேர வேண்டும்.

மற்ற ஊடகங்கள் மூலமும் துடுப்பாட்டம் இதழ் பற்றி நிறைய அறிமுகம் செய்யப்பட்ட பின்னர் அச்சுப்பிரதி வெளியிடுவது சாலச்சிறந்தது.

ரசிகர் குறித்து

முரளி கண்ணன், எக்ஸ் தளத்தில் இவரைத் தெரியாதோர் இருக்க வாய்ப்பில்லை. எழுத்தை மூலதனமாக வைத்து எண்ணங்களைத் தெளிவாக எடுத்துரைக்கும் பல்சுவை எழுத்தாளர். 80, 90 கால சினிமா நிகழ்வுகள் அத்துப்படி இவருக்கு. கிரிக்கெட் ஆர்வலர். கிரிக்கெட் குறித்து புத்தகம் மற்றும் நிறைய கட்டுரைகள் எழுதியுள்ளவர். துடுப்பாட்டம் இதழிலும் எழுதியுள்ளார்.

கடைசிப் பக்கம்

நவம்பரில் மகளிர் உலகக்கோப்பைக்குப் பின் மகளிர் போட்டிகள் பெரிய அளவில் இல்லை. இந்திய அணி டெஸ்ட் தொடரை முழுமையாக இழந்துவிட்டது. ஐபிஎல் வீரர்கள் தக்கவைப்பு, மகளிர் பிரிமியர் லீக் ஏலம், வளரும் வீரர்கள் ஆசியக் கோப்பை எனக் கிரிக்கெட் நீண்டது.

ஆஷஸ், இந்தியா - தென்னாப்பிரிக்கா வெள்ளைப்பந்து தொடர், பங்களாதேஷ் - அயர்லாந்து வெள்ளைப்பந்து தொடர், நியூசிலாந்து - வெஸ்ட் இண்டீஸ் டெஸ்ட் தொடர், நேபாள் பிரிமியர் லீக், மகளிர் பிக்பாஷ் என டிசம்பர் முழுக்கக் கிரிக்கெட் நிறைந்திருக்கிறது.

அதுமட்டுமின்றி புத்தாண்டு சிறப்பிதழ் 2025 கிரிக்கெட் குறித்த தொகுப்பும் இடம் பெறும்.

மீண்டும் சந்திப்போம்.

Mail – thuduppattam7@gmail.com

X - @thuduppattam

www.thuduppattam.blogspot.com

Whatsapp - +91 80566 09320

Champion
துடுப்பாட்டம்
கிரிக்கெட்டும் கிரிக்கெட் சார்ந்தும்
thuduppattam7@gmail.com